விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 16 புதன்கிழமை (31.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 012

## தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றித் தருவோம்

### குடும்ப ஆட்சியை ஒழியுங்கள்-சந்திரிகா



(யாழ்ப்பாணம்)

நாட்டில் நடைபெற்ற போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போதும் தமிழ் மக்களின் அபிலாசைகள், எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படவில்லை.

வடக்கு மாகாண சபையினை நாட்டிலுள்ள ஏனைய மாகாண சபைகள் போல் செயற்படுவதற்கு வழி செய்வோம்.

தற்போது உள்ள மகிந்த தலைமையிலான குடும்ப அரசு நாட்டு மக்களின் சொத்துக்களைக் கொள்ளை அடித்துக் கொண்டுள்ளது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

பொது எதிரணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நல்லூரில் உள்ள கிட்டுப் பூங்காவில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

02ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவை தோற்கடிக்க மைத்திரிக்கு வாக்களியுங்கள்

### த.தே.கூட்டமைப்பு உத்தியோகபூர்வ அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எதிரிணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான தமது நிலைப்பாட்டை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அறிவித்துள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற இரு பிரதான வேட்பாளர்களின் நிலைப்பாடுகளையும், பிரகடனங்களையும் கூர்ந்து கவனித்து வந்ததோடு, இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவம் என்ற வகையில் தமிழ் பேசும் மக்களின்,

02ஆம் பக்கம் பார்க்க....

## போரில் மக்களுக்கு பாதிப்பு இல்லை-சரத்

(யாழ்ப்பாணம்)

நிராயுதபாணிகளை ஆயுதம் கொண்டு மகிந்த அரசு அச்சுறுத்தி வருகின்றது என தெரிவித்துள்ள முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தான் யுத்தம் செய்த போது வடக்கு மக்களுக்கு எவ்வித

24ஆம் பக்கம் பார்க்க....

# துப்பாக்கிச் சன்னங்கள் வெற்றியை தீர்மானிக்காது

## மக்கள் மனங்களே தீர்மானிக்கும்; யாழில் மைத்திரி தேர்தல் பிரசாரம்



(யாழ்ப்பாணம்)

*நாட்டின் முப்படையினரினை தனது பகடைக் காய்களாக வைத்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தன்னை எதிர்ப்போரினை அச்சுறுத்தி அடக்கி வருகிறார் என தெரிவித்துள்ள பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, துப்பாக்கிச் சன்னங்களினால் வெற்றியைத் தீர்மானித்து விட முடியாது. மக்களின் மனங்களே வெற்றியைத் தீர்மானிக்கும் எனவும் தெரிவித்தார்.*

23ஆம் பக்கம் பார்க்க....

## 'பிரபாகரன்' மக்கள் கரகோஷம்



(யாழ்ப்பாணம்)

பொது எதிரணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்

23ஆம் பக்கம் பார்க்க....

## சுயமரியாதையோடு வாழ்கின்ற மக்களாக இருக்க விரும்புகிறோம்

### ஈழம் தேவையில்லை-மன்னார் ஆயர்

(கொழும்பு)

தமிழ் ஈழத்தைத் தவிர தமிழ் மக்களுக்கு எல்லாம் தருவேன் என இந்த அரசியல்வாதிகள் சொல்லிக் கொண்டு இருந்தார்கள். ஆனால் எங்களுக்கு ஒன்றும் தரவில்லை. எங்களுக்கு ஈழம் தேவையில்லை. மாறாக நாங்கள் சுய மரியாதையோடு வாழும் மக்களாக இருக்க வேண்டும். இதனையே எதிர்பார்க்கிறோம் என மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை முன்னிட்டு எதிரணியின பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட குழுவினர் மன்னாருக்கு நேற்று செவ்வாய்க்கிழமை

24ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல் பிரசாரம் வடக்கில் மும்முரம்

(யாழ்ப்பாணம்)

பொது எதிரணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் பெரும் மக்கள் திரள் பங்கேற்புடன் வடக்கில் களைகட்டியது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 8 நாட்கள் உள்ள நிலையில் வடக்குக்கான தேர்தல் பரப்புரையை பொது எதிரணி நேற்று முதல் முறையாக நடத்தியுள்ளது.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் மன்னார் இராயப்பு ஜோசப்பினை ஆயர் இல்லத்தில் சந்தித்த எதிரணி 9 மணிக்கு மன்னார் நகர சபை மைதானத்திலும் 10 மணிக்கு வவுனியா கலைமகள் விளையாட்டு கழக மைதானத்திலும் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் பங்கெடுத்தனர்.

பின்பு முல்லைத்தீவு, கிளிநொச்சி

23ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல் நம்பகமாக நடத்தப்பட வேண்டும்

### பீரிஸிடம் மூன் வலியுறுத்தல்



(ஜெனிவா)

அடுத்த மாதம் 8ஆம் திகதி நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தல் அமைதியான முறையிலும், நம்பகமான வகையிலும் நடத்தப்பட வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்திடம் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ

23ஆம் பக்கம் பார்க்க....

## ஆட்சிக் காலம் 4 வருடங்கள்

(வவுனியா)

ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தை நான்கு வருடங்களாக குறைக்கவுள்ளதாக பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். நேற்று செவ்வாய்க்கிழமை வவுனியா வைரவப் புளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் கூறுகை

24ஆம் பக்கம் பார்க்க....

## வலி.வடக்கில் குடியேற ஜனாதிபதி அனுமதி வழங்குவார்?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-காங்கேசன்துறைவரை புகையிரத சேவையை ஆரம்பித்து வைப்பதற்காகவும் தேர்தல் பிரசாரத்திற்காகவும் நாளை மறுதினம் 2-ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் பிரசார உரையின் போது, வலி வடக்கில் மக்கள் மீளக் குடியமராத இடங்களில் மீளக்குடியமர்வதற்கான அனுமதியினை வழங்குவார்என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்

24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழர்களின்...

சந்திரிகா மேலும் உரையாற்றுகையில்,

1994 ஆம் ஆண்டில் என்னுடைய ஆட்சி அமைக்கப்பட முன்னரும் பின்னரும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழுகின்ற மக்களின் பிரச்சினை தீர்க்கப்படும்; போர் நிறுத்தப்படும் என பல்வேறு உறுதி மொழிகளை நான் வழங்கியிருந்தேன்.

ஆகவே, என்னுடைய ஆட்சி அமைத்து இரண்டு வாரங்களுக்கு உள்ளேயே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களினை அழைத்து பேச்சு வார்த்தைகளினை நடத்துவதனூடாக பிரச்சினைகளிற்கு தீர்வு காண்போம் எனக் கூறினேன்.

8 மாதங்களுக்கு போர் நிறுத்த ஒப்பந்தத்தினை மேற்கொண்டிருந்தோம். 8 மாதங்களாக எமது அரசாங்கம் விடுதலைப்புலிகளும் பேச்சு வார்த்தையினை நடத்திருந்தார்கள்.

துரதிர்ஷ்ட வசமாக விடுதலைப்புலிகள் உண்மையான சமாதானத்திற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. அவர்கள் மீண்டும் போரிற்கே சென்று விட்டார்கள்.

பின்னர் இந்நாட்டில் புதிய அரசியலமைப் பொன்றினை அறிமுகப்படுத்துவற்கான நடவடிக்கைகளினை மேற்கொண்டது.

ஆகவே எங்களுடைய அரசியல் அமைப்பில் நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறைமையினை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையும் அவ் அரசியல் அமைப்பிற்குள் உள்வாங்கப்பட்டிருந்தது.

குறிப்பாக இந்த அரசையும் அரசியல் அமைப்பையும் மாற்றியமைக்கின்ற எதிரணியில் கூட்டுமுயற்சியின் பங்காளராகத்தான் ஜெனரல் சரத் பொன்சேகா வீற்றிருக்கின்றார்.

என்னுடைய அரசாங்கம் 11 ஆண்டுகள் பதவி வகித்தது. இந்தக் கால கட்டத்திலே குறிப்பாக வடக்குக் கிழக்கிலும் ஏனைய மாகாணங்களினதும் அதிகாரப்பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காகத்தான் அவ்அரசியல் அமைப்பினைக் கொண்டு வந்திருந்தேன்.

இந்த அரசியல் அமைப்பினை மாற்றியமைப்பதற்கான இந்தக்கனவினை நனவாக்குவதாக இருந்தால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் தான் முடியும்.

ஆனால் அந்த கால கட்டத்தில் என்னுடைய இந்த அரசியலமைப்பு யோசனைக்குச் சார்பாக பெரும்பாலான அரசியல் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்காத காரணத்தால் முயற்சியினை கைவிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஆகவே இந்த அரசியல் அமைப்பினை நிறைவேற்றுவதில் பல்வேறு தடைகள் இருந்தன. குறிப்பாக விடுதலைப்புலிகள் வன்முறை சார்ந்த நடவடிக்கைகளினை மேற்கொண்டதால் தமிழ் மற்றும் முஸ்லிம் உட்பட நாட்டு மக்களை அது பாதித்திருந்தது.

இன்று போர் ஓய்ந்து விட்டது. நீடித்து நிலைக்கக் கூடிய நிலைபேறான சமாதானத்தினை இந்நாட்டில் நிலை நிறுத்துவதற்கான உன்னதமான சந்தர்ப்பத்தினை நாம் இன்று எதிர்நோக்கியுள்ளோம்.

ஆகவே, எங்களுடைய நாட்டிலே வடக்கு கிழக்கு மாகாணங்களிலே வாழக்கூடிய தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் பெரும்பான்மையின மக்களும் அமைதியாக வாழக்கூடிய சூழல் தற்போது உருவாகியுள்ளது.

இன்று உங்கள் முன்னிலையில் நாம் வழங்குகின்ற உறுதிமொழிகளை நிறைவேற்றக்கூடிய சக்தியும் வலுவும் இந்த பொது எதிரணிக்கூட்டணியிடம் உள்ளது.

போர் முடிவுற்றாலும் தமிழ் மக்களின் பிரச்சினை முழுமையாக தீர்க்கப்படவில்லை என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

மகிந்த ராஜபக்ஷ அரச சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் பல்வேறு உறுதிமொழிகளை கொடுத்தாலும் அதில் ஒன்றையும் நிறைவேற்றாமல் இருக்கிறார்கள்.

உங்களுக்கு போரின் பின்னர் மீள்குடியமர்வில் பாரிய பிரச்சினை உள்ளது. உங்களுடைய மண்ணில், காணியில் நீங்கள் குடியிருக்க முடியாத பல்வேறு தடைகள், இடர்கள் இருக்கின்றன.

எங்களுடைய பொது வேட்பாளர் வலியுறுத்துகின்ற விடயம் ஒன்று உள்ளது. இந்த நாட்டிலே எந்த இனமக்களும் எந்த பகுதியிலும் சம உரிமையுடனும் வாழமுடியும் என்பதாகும்.

ஒருநாடு என்கின்ற போது அதன் பாதுகாப்பு மிக முக்கியமானதாகும். ஆகவே அதன் பாதுகாப்பிற்கு எவ்வித பங்கமும் ஏற்படாத வகையில்தான் இத்திட்டங்களை அமுல்படுத்தவுள்ளோம்.

உங்களுக்கு சொந்தமான காணியில் அரசாங்கம் விடாப்பிடியாக இருக்கவேண்டிய தேவையில்லை என நான் கூறி வைக்க விரும்புகின்றேன்.

நாட்டின் பாதுகாப்பிற்கு தேவையான நிலங்களைத்தான் வைத்துக்கொள்வோம். எஞ்சிய நிலங்களை உங்களுக்குத் திருப்பி அளிப்போம் என உறுதிகூறுகின்றோம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழக் கூடிய மக்களுக்கு ஏனைய மாகாணங்களில் வாழ்கின்ற மக்களின் உரிமை போல் சமமாக வழங்க முடியும் .

நீண்டகாலமாக பல கஷ்டங்களை அனுபவித்த நீங்கள் கடந்த வரும் மாகாணசபை ஒன்றினையும் பெரும்பான்மை வாக்குகள் மூலம் தெரிவு செய்திருந்தீர்கள்.

பல்வேறு ரீதியான அழுத்தங்கள் காரணமாகத்தான் மாகாணசபைத் தேர்தலை நடத்த இவ் அரசாங்கம் முன்வந்தது. ஆனால் தேர்தலின் பின்பு வட மாகாணசபையை சரியான முறையில் இயங்க விடாது பல்வேறு தடைகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

ஏனைய மாகாணசபைகள் சிறப்பாக இயங்குவதற்கு நிதியும் அதிகாரமும் வழங்கப்படுவது போல வடக்கு மாகாணசபைக்கும் வழங்குவோம் என உறுதி கூறுகின்றோம்.

மகிந்தவின் ஆட்சியில் சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்துள்ளது. நீதித்துறை சுதந்திரமாக இயங்குவதற்கு பலதடைகள் ஏற்படுத்தப்பட்டு அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது.

இதே போல்தான் பொலிஸ் திணைக்களமும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. சட்டத்தின் ஆட்சியைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி தொலைபேசியில் என்ன சொல்கிறாரோ அதனையே நீதிபதியோ அல்லது பொலிஸாரோ செய்ய வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

அடி முதல் நுனி வரை இந்த அரசாங்கம் ஊழல் நிறைந்ததென்றாகவே காணப்படுகின்றது. ஒரு குடும்பம் இந்த நாட்டின் சொத்துக்களை கொள்ளையடித்து வருகின்றது.

நாட்டில் ஜனநாயகம், சுதந்திரத்தினை பாதுகாக்கும் அனைத்து அமைப்புக்களும் செயலிழந்துள்ளன. தங்களுக்கு எதிரானவர்களுக்கு எதிராக அடாவடித்தனங்களையும், அச்சுறுத்தல்களையும், பயமுறுத்தல்களையும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

போர் முடிந்து விட்டாலும் உங்கள் அபிலாசைகள், எதிர்பார்ப்புக்கள் அமு[illegible]

ஆகவே புதிய அரசாங்கத்தின் மூலம் இவற்றை உங்களுக்கு செய்வோம். இந்த நாட்டில் உள்ள மூவினங்களுக்கிடையில் உண்மையான சக வாழ்வினை கொண்டு வருவோம்.

எனது கணவரான விஜய குமாரதுங்க வடக்கு கிழக்கிலே உள்ள மக்கள் மீது அன்பும் பாசமும் கொண்டவர். அவர் எவ்வாறு உயிரிழந்தார். நான் அவரை பிரிந்து எவ்வாறு துன்பப்பட்டேன் என்று உங்களுக்குத் தெரியும். அந்தவகையில் உங்களின் துன்பத்தையும் நான் நன்கு அறிவேன்.

ஆகவே உங்களிடம் நான் இறுதியாக கேட்பது எதிர்வரும் எட்டாந் திகதி எங்களின் பொது எதிரணி வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவை வெற்றி பெறச்செய்யுங்கள் என்பதேயாகும் என்றார் சந்திரிகா. (செ-4)

# மகிந்தவை...

குறிப்பாக வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களின் கருத்துக்களையும் மனதில் கொண்டு, வரலாற்று முக்கியத்துவம் மிக்க இந்த ஜனாதிபதித் தேர்தலில் அந்த மக்களையும் மற்றைய பிரஜைகளையும் சரியாக வழிநடத்தும் பொறுப்பு எம்மிடமுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் ஜனநாயகமும், சட்டமும் ஒழுங்கும் முன்னெப்போதும் இல்லாத வகையில் சீரழிக்கப்பட்டுள்ளன. இதனால் நம் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பாரதூரமான விளைவுகள் பின்வருமாறு:

நாடு சர்வாதிகார ஆட்சியை நோக்கிச் செல்கின்றது. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி, அரசின் அனைத்து அதிகாரங்களையும் தன் கையில் வைத்திருக்கும் சர்வாதிகாரியாக மாறிவருகின்றார். அத்தோடு தான நினைத்தபடி சட்டத்திருத்தங்களைச் செய்து மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாக முயல்வதானது இந்த அரசின் சர்வாதிகாரப் போக்கைத் தெளிவாகக் காட்டுகின்றது.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையினால் நீதித்துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக உச்ச நீதிமன்றமும், மேன்முறையீட்டு நீதிமன்றமும் சுதந்திரமாகச் செயற்படமுடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட குற்றப்பிரேரணை தொடக்கம் இந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முறையற்ற சட்டத்திருத்தங்கள் வரை அனைத்து நிகழ்வுகளும் நீதித்துறையின் வீழ்ச்சியையே காட்டுகின்றன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் 18வது சட்டத்திருத்தத்துக்கு எதிராகவும், பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட குற்றப் பிரேரணைக்கு எதிராகவும் தொடர்ந்து குரல்கொடுத்து வந்ததையிட்டு பெருமைகொளகின்றது. அன்று 18வது சட்டத்திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்துத் தவறு செய்தவர்களுக்கு தமது தவறை திருத்திக் கொள்வதற்கான ஒரு அரியவாய்ப்பை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வழங்குகின்றது.

அரச நிர்வாகத்தின் முக்கிய பதவிகளுக்கு சுயாதீன நியமனங்களை, நேர்மையாகச் செய்வதற்கு ஏதுவாக வடிவமைக்கப்பட்டிருந்த அரசியலமைப்பின் 17வது சட்டத்தை மாற்றியதன்மூலம் உச்ச நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், நீதிச்சேவை ஆணைக்குழு, தேர்தல்ஆணையம், அரசசேவை ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, சட்டமா அதிபர் மற்றும் கணக்காய்வாளர் நாயகம் போன்ற உயர்பதவிகளுக்கு தாம் விரும்பியவர்களை நியமிக்கும சர்வாதிகாரத்தை இந்த ஜனாதிபதி பெற்றுள்ளார். இது நாட்டிற்கும், நீதித்துறைக்கும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் எதேச்சதிகாரமானது சுதந்திர ஊடகங்களுக்கும், சிவில் அமைப்புகளுக்கும், தகவல் பரிமாறும் சுதந்திரத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

ராஜபக்ஷவின் சர்வாதிகாரப் போக்கானது ஜனநாயகத்தை நலிவுறச் செய்து நாட்டை மிக மோசமான நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் துல்லியமான கருத்தாகும்.

பல்லின மக்கள் வாழும் நம் நாட்டில், அனைத்து இன மக்களும் ஒற்றுமையாய், சமத்துவமாய், சுய கௌரவத்துடன் வாழ ஆரோக்கியமான ஒரு ஜனநாயக ஆட்சி ஏற்படுத்தப்படுவதற்கு சகல இன மக்களுடனும் முறையாக ஆட்சி அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்பது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கருத்தாகும்.

எனவே சர்வாதிகாரத்திலிருந்து நமது நாட்டையும், ஜனநாயகத்தையும் காப்பாற்றுவதற்காகவும்,நமது உன்னத விழுமியங்களான சமத்துவம், நீதி, தன்மானம், சுதந்திரம் என்பவற்றை மீளப் பெறுவதற்காகவும் நாம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ அரசை நிச்சயம் தோற்கடிக்க வேண்டும்.

இதற்காக அனைத்துப் பிரஜைகளும் குறிப்பாகத் தமிழ்பேசும் மக்களும் தமது வாக்குகளை அன்னப் பறவைச் சின்னத்தில் போட்டியிடும் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# "ஜெனரல்" சரத் பொன்சேகா என விழித்த மைத்திரி

(யாழ்ப்பாணம்)

எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணம் முத்திரைச்சந்தியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, முன்னாள் அமைச்சர் ராஜித சேனரட்ண, ரவி கருணாநாயக்க உட்பட பலரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன உரையாற்றும் போது "ஜெனரல்" என விழித்து சரத் பொன்சேகாவை அழைத்தார்.

இதேபோலவே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சரத் பொன்சேகாவை "ஜெனரல்" என விழித்துக் குறிப்பிட்டார்.

சரத் பொன்சேகாவின் ஜெனரல் பட்டம் இலங்கை அரசால் இரத்துச் செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)


## தவறவிடப்பட்டுள்ளது

22.12.2014 திங்கட்கிழமை பெரியகடை வீதியிலிருந்து நாவாந்துறை காக்கைதீவு வரையான வீதியில் சந்திரகுமார் சுகந்தன் என்பவருடைய கடல்வள நீரியல்துறை பதிவுப் புத்தகம் (வள்ளம்) வள்ளம் வெளி இணைப்பு சார்பான கடிதங்கள் - 02, இன்னும் சில ஆவணங்கள் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு :-

தவராசா அகிலன்
சாவற்கட்டு, ஆனைக்கோட்டை.
தொ.இல : 0770489486

(9005)

## வேலை ஆட்கள் தேவை

கொழும்பு - யாழ்ப்பாணம் பேருந்து ஆசன பதிவகத்திற்கு கொழும்பில் தங்கி நின்று வேலை செய்யக் கூடியவர்கள் தேவை.

குறிப்பு : தங்கும் இடம் இலவசம்

ஆண்கள் மட்டும்

தொடர்பு : 0775736003

(9012)

## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி

veta Spoken English
Veta Fluency Diploma

புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| Mon,Fri: 10.30 a.m. Tue, Thu : 8.00 a.m. | Tue, wed 10.00 a.m. Sat,Sun 3.30 P.m. | Mon, Wed, Fri 10.30 a.m. | Tue, Thu 8.30 a.m. |

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள் Duration: 3 Months

பல்கலைக்கழகம் சொல்லவுள்ளோருக்கான விசேட பிரிவுகள்

DMI COMPUTER EDUCATION

UK விசாவுக்கான ஆங்கிலப்பரீட்சை — 2015 புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை

IELTS
• Unique Test Tips
• Latest course Materials
IELTS பரீட்சை பதிவுகள் இலவசமாக எந்த கிளையிலும் மேற்கொள்ள முடியும்

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113. கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 | M. M. V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | 130, கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970 |

(C-9665)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியான தேர்தலுக்கு சட்டங்களைப்பின்பற்றவும்

## கமலேஷ் சர்மா அறிவுறுத்து

(கொழும்பு)

**ஜனாதிபதி தேர்தலின் போது பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனைவருக்கும் சமமான வாய்ப்புக் களை வழங்குவதுடன் அமைதியான தேர்தலுக்கான சட்டங்களையும் விதி முறைகளைப்பின்பற்றுமாறும் பொதுநல வாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா வேண்டுகோள் விடுத் துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் ஆணையாளரின் அழைப்பின்பேரில் ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கவுள்ள பொதுநலவாய குழுவிற்கு கயானாவின் முன்னாள் ஜனாதிபதி கலாநிதி பரத் ஜக்டோ, தலைமை தாங்குவார்.

பொதுநலவாய அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகள், சர்வதேச தேர்தல் கண்காணிப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

அத்துடன், நாடொன்றின் மக்களுக்கு சொந்தமான இறைமையை வெளிப்படுத்துபவையே நேர்மையான தேர்தலாகும்.

பொதுநலவாயத்தின் பழைமையான ஜனநாயக பாரம்பரியத்தை கொண்ட நாடு இலங்கை, அந்த நாட்டின் மக்கள் தங்கள் வாக்குகளை, வெளிப்படைத்தன்மை, சம வாய்ப்புகள், சட்டம் மற்றும் விதிமுறைகள் பின்பற்றப்படும் சூழலில் செலுத்த வேண்டும்.

பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பு குழு தேர்தலுக்கு முந்தைய நிலைகளை கண்காணிக்கும், தேர்தல் வாக்களிப்பு தினமன்றும் அதன் பின்னரும் வாக்க ளிப்பு முறை, வாக்குகள் எண்ணபடும் முறை மற்றும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் விதம் ஆகியவற்றையும் கண்காணிக்கும்.

குறிப்பிட்ட குழு பக்கச் சார்பற்ற விதத்தில் சதந்திரமாக மதிப்பீடுகளை மேற்கொள்ளும். குறிப்பிட்ட குழு தனது மதிப்பீடுகளை பொதுநலவாய செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கும்.



அவர்கள் அதனை இலங்கை அரசாங்கம், தேர்தல் ஆணையகம், அரசியல் கட்சிகளிடம் சமர்ப்பித்த பின்னர், பொதுநலவாய அரசாங்கங்களிடம் கையளிப்பார்கள்.

பின்னர் அது பகிரங்கப் படுத்தப்படும். பொதுநலவாய குழுவை சேர்ந்த ஒன்பதுபேர் ஜனவரி 2ஆம் திகதியிலிருந்து இலங்கையில் பணியாற்றுவர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து இடதுசாரிகளின் நிலைப்பாடு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலும் இடது சாரிகளின் நிலைப்பாடும் எனும்கருப்பொருளில்இடது சாரி கட்சிகளின் பொதுச் செயலாளர்களும் அமைச்சர்களுமான போராசிரியர் திஸ்ஸ விதாரண (லங்கா சம சமாஜக் கட்சி) டியூ குணசேகர (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி) வாசுதேவ நாணயக்கார ஆகியோர் கலந்து சிறப்பிக்கும் கூட்டம் யாழ்.நகரில் வேம்படி வீதியில் அமைந்துள்ள றிம்மர் மண்டபத்தில் Trimmer Hall (மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகிலும் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்திற்கும் முன்பாகவும்) நாளை மறுதினம்2ஆம்திகதிவெள்ளிக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் என லங்கா சம சமாஜக் கட்சியின் யாழ். பிராந்திய செயலாளர் நடராசா தமிழ் அழகன் அறிவித்துள்ளார். (இ-5)

## தொழில்நுட்பவியல் நிறுவனப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில் நுட்பவியல் நிறுவனம் 2014 ஆண்டுக்கான 2 ஆம் பருவகால பரீட்சை நடவடிக்கைகள் தொடர்பாக கல்லூரியின் பதிவாளர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டின் சீரற்ற கால நிலையால் பிற்போடப்பட்ட எமது 2014ஆம் ஆண்டு 2 ஆம் பருவகால இறுதிப் பரீட்சை நடவடிக்கைகள் அனைத்தும் எதிர்வரும் 12/01/2015 இலிருந்து நடை பெறும் என்பதனை அறியத் தருகின்றேன். மேலும் மாற்றம் செய்யப்பட்ட நேரசூசிகையினை இன்று தொடக்கம் எமது நிறுவனத்தில் பார்வையிடலாம் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அவை பின்வருமாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 29,30,31,-12- 2014 மற்றும் 2-1-2015 ஆகியவை முறையே 2,5, 6,7-2-2015 ஆகிய நாட்களில் நடைபெறும். (இ-5)

# கொழும்பு கம்பன் கழகத்தின் பேச்சு, கவிதைப் போட்டிகள்

(கொழும்பு)

கொழும்பு கம்பன்கழகத்தினால் இவ்வாண்டுக் கம்பன் விழாவை முன்னி ட்டு நடத்தப்படும் அமரர் துரை விஸ்வநாதன் நினைவு பேச்சுப் போட்டிகள் ஜனவரி மாதம 17ஆம் திகதி சனிக்கிழமையும் அமரர் பொன். பாலசுந் தரம் நினைவு கவிதைப் போட்டி கள் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. தினமும் காலை 9.30 மணிக்குப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

கீழ்ப்பிரிவில் 14 வயதுக் குட்பட்டோரும், மத்திய பிரிவில் 15-19 வயதுக்குட்பட்டோரும், மேற்பிரிவில் 20-35 வயதுக்குட்பட்டோரும் கலந்து கொள்ளலாம். சென்ற விழாக்களில் தங்கப்பதக்கப் பரிசில்களைப் பெற்றோர் தவிர்ந்த, பேசும், கவிதை இயற்றும் திறமையுள்ளோர் மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் பத்திரிகைகள் மூலம் முன்னரே கோரப்பட்டிருந்தன. விண்ணப்பித்த போட்டியாளர்களுக்கான அனுமதியட்டைகள் போட்டியாளர்களின் முகவரிகளுக்கு தனித்தனி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

போட்டியாளர்கள், அவ்வனுமதி அட்டைகளுடன் போட்டி மண்டபத்திற்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். போட்டிகளுக்கு விண்ணப்பித்தோர் அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிடினும் தக்க சான்றுகளுடன் நேரடியாகப் போட்டி மண்டபத்திற்கு வருகை தரலாம் எனக் கொழும்பு கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

இதுவரை விண்ணப்பிக்காத போட்டியாளர்கள் சுயமாகத் தயாரிக்கப் பெற்ற விண்ணப்பப் படிவத்தில் தமது முழுப்பெயர், வயது, பிறந்த திகதி, முகவரி, தொலைபேசி இலக்கம், மாணவராயின் பாடசாலையின் பெயர், இல்ல முகவரி, கலந்து கொள்ளவுள்ள போட்டி முதலிய விபரங்களைக் குறிப்பிட்டு, கல்லூரி அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது கிராம சேவகர் ஆகியோரிடம் தமது விபரங்களை உறுதிப்படுத்தி, இல 12, இராமகிருஸ்ண கார்டன், கொழும்பு - 6 (Secretary, Colombo Kamban Kazhakam, 12, Ramakrishna Garden, Colombo - 06.) எனும் முகவரிக்கு ஜனவரி மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்க முடியும்.

பேச்சு மற்றும் கவிதை போட்டிக்கான தலைப்புகள் இலக்கியம், கலை, வாழ்வியல் தொடர்பில் அமைந்திருக்கும் எனவும் கீழ்ப்பிரிவு போட்டியாளர்க்கு தலைப்புகள் அனுமதி அட்டையுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும், மத்திய பிரிவு, மேற்பிரிவுப் பேச்சுப் போட்டியாளர்கள் உடன் வழங்கப்படும் 5 தலைப்புக்களில் விரும்பிய ஒரு தலைப்பில் பேசும் தகுதி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் எனவும் கொழும்புக் கம்பன்கழகம் அறிவித்துள்ளது.

தரமான நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்பெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் ஜனவரி மாதம் 31ஆம் திகதி தொடக்கம் 4 நாட்கள் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் தங்க, வெள்ளி, வெண்கல பதக்கப் பரிசில்கள் வழங்கப்பெறும் எனவும் கொழும்பு கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

மேலும், போட்டிகளில் இயல்பாளுமையை வெளிப்படுத்தும் போட்டியாளர்கள் கம்பன் விழா நிகழ்ச்சிகளில் இணைத்துக் கொள்ளப்படுவர் எனவும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-5)

## கவிதைப்போட்டி

யாழ்.இளைஞர் இலக்கிய மன்றம் அமரர் முருகு இரத்தினம் ஞாபகார்த்தமாக இரண்டாவது தடவையாகவும் பாடசாலை மாணவர்களுக்கிடையில் கவிதைப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது. தரம் 9 முதல் 13 வரை கல்வி கற்கும் மாணவர்கள் தமது ஆக்கங்களை ஏதாவது ஓர் சமுதாய விழிப்புணர்வு மிக்க தலைப்பில் வரைந்து எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், இளைஞர் இலக்கிய மன்றம், 69, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இக்கவிதைப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசில்கள் ஜனவரி மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ள கவிநயம் - 2015 விழாவில் வழங்கப் படவுள்ளது. (இ)

# இராசி பலன்

31.12.2014

(மார்கழி 16, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு

தசமி முற்பகல் 11.57 மணிவரை

அச்சுவினி முற்பகல் 8.31 மணிவரை

இராகுகாலம் 12.29-1.59 மணிவரை

சுபநேரம் 4.59-6.29 மணிவரை

வளவன்

**மேடம்** – வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

**இடபம்** – ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆளாக நேரிடலாம்.

**மிதுனம்** – பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பணவரவு எதிர்பார்த்தபடியே வந்து சேரலாம், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் எளிதில் கைகூடும்.

**கடகம்** – நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கூடும், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், ஒளிமயமான வாழ்க்கைக்கு உறுதுணை புரியும் நாள்.

**சிம்மம்** – உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், வியாபார விருத்தியுண்டு, புதிய திட்டங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி** – மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், தொழிலில் மேலதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம்.

**துலாம்** – பிற இனத்தவர்களால் பெருமைகள் சேரும் நாள், தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.

**விருச்சிகம்** – பகைவர்கள் விலகுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நேற்று பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியமான நாள்.

**தனுசு** – புத்திசாதுரியமான செயற்பாடுகளால் பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், உற்சாகமான நாள்.

**மகரம்** – இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம்.

**கும்பம்** – தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், மூத்த சகோதரர் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**மீனம்** – குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 120**

# கவலைகள் இன்றி வாழ்தல்!

...அது கவலைப்படுவதற்கு ஏதேனும் இருந்தாலும் கவலைப்படுகிறது. இல்லாவிட்டாலும் கவலைப்படுகிறது. உங்களுடைய எல்லாக் கவலைகளும் விழிப்புணர்வோடு பார்த்தீர்களானால் உங்கள் விழிப்பற்ற நிலையில் அவைகள் எவ்வளவு தந்திரமாக உங்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதைப் புரிந்துகொள்வீர்கள். உங்கள் கவலைகள் மிகவும் நழுவும் தன்மையிலும் ஆதாரமற்றும் இருப்பதைக் காண்பீர்கள். அவைகள் எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் இருப்பதால் உங்களால் அவற்றை ஒருபோதும் பிடிக்க முடியாது. அவைகள் திடமாக இருப்பதில்லை.

உண்மையில் உங்களுடைய எல்லாக் உணர்ச்சிகளுமே விழிப்பற்ற தன்மையின் விளையாட்டைத் தவிர வேறல்ல. நீங்கள் முழு விழிப்புணர்வோடு வாழும்பொழுது ஒருபோதும் உணர்ச்சிகளால் அலைக்கழிக்கப்பட மாட்டீர்கள். அதனால்தான் மீண்டும் மீண்டும் உங்களை விழிப்புணர்வால் நிரம்பிக் கொள்ளச் சொல்கிறேன்.

உங்கள் வாழ்க்கையை ஆக்குவதும் அழிப்பதும் உங்கள் கவலைகளும் உங்கள் வார்த்தைகளும்தான். அவர்களுக்கு அத்தனை சக்தி- உங்கள் மீதும் மற்றவர்கள் மீதும் செல்வாக்கு இருக்கிறது. உதாரணத்திற்கு நான் பசு என்ற வார்த்தையை உச்சரித்தவுடன் என்ன நிகழ்கிறது.? நான்கு கால்களுடன் இரண்டு கொம்புகளுடன் ஒரு வாலுடன் ஒரு உருவம் உங்கள் மனதில் தோன்றுகிறதல்லவா? ஒரு சாதாரண இரண்டெழுத்து வார்த்தை உங்கள் மனதில் மொத்த உருவத்தையும் கொண்டு வந்து விடுகிறது. வார்த்தைகள் அவ்வளவு சக்தி வாய்ந்தவை. நாம் வார்த்தைகளை மதிக்காமல் தவறாகப் பயன்படுத்துவோமாயின் தொல்லைக்கு உள்ளாக நேரிடும்.

ஒரு சின்னக் கதை.....

ஒருநாள் ஞானமடைந்த குருவான பீர்பாலும் அவரது மன்னரான அக்பரும் தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தனர். ஒரு சந்தன மர வியாபாரியைப் பார்த்தனர். அக்பர் பீர்பாலிடம் சொன்னார் எனக்கு ஏனென்று தெரியவில்லை. ஆனால் இந்த மனிதனைத் தூக்கிலிட வேண்டும் போல் தோன்றுகிறது. ஒரு மாதம் கழித்து அவர்கள் அதே சந்தன மர வியாபாரியைக் கடந்து சென்றனர். இந்த முறை அக்பர் சொன்னார் இது வினோதமாக இருக்கிறது. இருந்தாலும் இந்த மனிதனுக்கு இப்பொழுது ஏதேனும் பரிசு கொடுக்க வேண்டும் போலிருக்கிறது.

சற்றுப் பொறுத்து பீர்பால் சொன்னார் ஒரு மாதத்திற்கு முன்பு இந்த சந்தன மர வியாபாரியின் வியாபாரம் மிகவும் நொடித்துப் போயிருந்தது. அவன் உங்களைக் கடந்து செல்லும்பொழுது நீங்கள் இறந்தால் உங்கள் இறுதிச் சடங்குகளுக்காக உங்கள் மந்திரி பிரதானிகள் தன்னிடம் நிறைய சந்தனைக்கட்டைகளை வாங்குவார்கள் என்று நினைத்தான். அவன் அனுப்பிய இந்த எதிர்மறை அதிவுகள் உங்களை அவன்மீது வெறுப்புக்கொள்ள வைத்தது. நான் உடனே நமது ராஜாங்கத்துக்கு மேசை நாற்காலிகள் செய்வதற்காக நிறைய சந்தனக்கட்டைகளை அவனிடம் வாங்கினேன். இன்று அவன் உங்கள் மீது மிகவும் நன்றியுணர்வோடு இருப்பதால் இந்த நேர்மறையான அதிர்வுகளால் நீங்கள் தாக்கப்பட்டு அதனால் அவனுக்குத் தானமாக ஏதேனும் தர வேண்டும் என்று எண்ணுகிறீர்கள் உங்கள் எண்ணங்கள் நிறைய சக்தியைக் கொண்டுள்ளன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அதனால் நீங்கள் ஒரு கவலையற்ற தெளிவான மனநிலையைக் கொண்டிருப்பது மிகவும் அவசியமான ஒன்று.

சொல்லுங்கள்...?

ஸ்வாமிஜி சின்ன விடயத்திற்காக வியர்வை சிந்தாதீர்கள் என்று சில புத்தகங்கள் சொல்கின்றனவே அவைகளை எப்படி துச்சமாகக் கருத முடியும் ஸ்வாமிஜி?



நீங்கள் அறிவுபூர்வமாக செயற்பட்டால் சின்ன விடயங்களுக்காக உயிரை விடும் வகையில் விழமாட்டீர்கள்.

ஒரு சின்னக் கதை...

ஒரு இளைஞன் அவனது நண்பனைக் காணச் சென்றான். அவன் சுவற்றிலிருந்து சுவரொட்டியை உரித்து எடுத்துக் கொண்டிருந்தான். அவன் கேட்டான் நீ சுவற்றுக்கு மீண்டும் பெயின்ட் அடிக்கப் போகிறாயா? நண்பன் சொன்னான் நான் வீட்டை வேறு இடத்திற்கு மாற்றிக் கொண்டிருக்கிறேன்.

பாருங்கள்... நீங்கள் சின்ன விடயங்களை அலட்சியம் செய்துவிட முடியாது. ஆனால் நீங்கள் அதற்கு போதுமான அளவு மட்டும் கவனம் செலுத்துமளவிற்கு அறிவுக் கூர்மையுடன் இருக்க வேண்டும். இல்லாவிடில் அதற்காக வியர்வை சிந்த நேரிடும்.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

### தண்ணீரை உள்வாங்கும் அதிசய கிணறுகள் ஆச்சரியத்தில் மக்கள்!...

சையன்விளையில் இருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் முதுமொத்தன் மொழி பஞ்சாயத்து ஆயன்குளம் படுகை அருகில் இந்த கிணறுகள் உள்ளது.




இந்த கிணற்றுக்குள் மணிமுத்தாறு அணை உபரி தண்ணீரை அதிக அளவில் திருப்பி விட வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்து இருந்தனர்.

அதன்படி கிணறுகளுக்குள் தண்ணீர் விடப்பட்டது. அவற்றில் 2 கிணறுகள் தண்ணீரை உள்வாங்கியபடியே உள்ளன.

இதனை அறிந்த பொதுமக்கள் பலர் அந்த அதிசய கிணறுகளை பார்த்து வியந்து சென்றனர்.

# சமைப்போம் சுவைப்போம்

## தில்குஷ் கேக்



**தேவையான பொருட்கள்**

கடலை மா- 100 கிராம்,

தேங்காய்ப் பூ - 1 கப்,

சர்க்கரை- 1‰2 கிலோ,

கேரட் -1‰4 கிலோ,

பால் -100 மி.லி.,

நெய், வறுத்த முந்திரி - தேவைக்கு.

**செய்முறை**

காய்ச்சிய பாலில், அரைத்து விழுதாக்கிய கேரட், தேங்காய்த் துருவலைச் சேர்த்துக் கலக்கவும்.

பாலில், நெய், வறுத்த மாவு, சர்க்கரையைப் போட்டுக் கிளறவும்.

தேவைப்பட்டால் எஸென்ஸ் சேர்த்து, தாம்பாளத்தில் கொட்டி வில்லைகளாக்கி, வறுத்த முந்திரியால் அலங்கரிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர் ஒருவரும் மகிந்தவுக்கு ஆதரவு

(கொழும்பு)

நவ சிஹல உறுமய கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட கட்டுப்பணம் செலுத்திய ஒருவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கப்போவதாக அறிவித்துள்ளார். வேட்பாளர் சரத் மன மேந்திரா என்பவரே இந்த முடிவை நேற்று செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளார். நாட்டைப் பிரிக்க முற்படும் சக்திகளுக்கு எதிராகத் தான் ஜனாதிபதி மகிந்தவை ஆதரிக்க முடிவு செய்துள்ளார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசதரப்பு குறித்த வேட்பாளரை பணம் கொடுத்து தன்பக்கம் இழுத்துள்ளதாகவும் இது மகிந்த அரசிற்கு வழக்கமான ஒன்று எனவும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# க.பொ.த(உ/த)பரீட்சையின் முதன்மை பெறுபேறுகள்-2014

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

கலைப்பிரிவு

ஆ. நிசாந்தி -2ஏசி, உ. நவயூட்- ஏ2பி, மு. துவாராகா- ஏபிசி, செ.மேனகா-ஏசிஎஸ், க.நிதர்சிகா- 3 பி, வீ.குணபரன்- 3பி, சி.கொல்ன்சிகா- 3பி, இ.தர்மிகா -2பிசி, ஜெ. வித்தியா- 2பிசி, ர. கீர்த்திகா- 2பிசி, அ. நிவேகா- 2பிசி, ப.பியூலா- 2பிசி, ர. லக்சாந்தி- 2பிஎஸ், சி. மோகனராசா- 2பிஎஸ், ர. மதுர்க்கா- பி2சி, த. சாளினி- பி2சி, இ.கோபிகா- பி2சி, த.தர்சிகன்- பி2சி, ப.கௌசிகா- பி2சி, சி. துஷாதரன்-பி2சி.

வர்த்தகப் பிரிவு

ஜெ. ஹரிதாஸ்- ஏபிசி, ச.சயோரன்-ஏசிஎஸ், சி. டிலூக்சன்- 3சி,ப.விதூர்சன்- 3சி, இ.தனுஷா- 3சி. (இ-5)

# சங்கானையில் தீப்பற்றிய லொறி முற்றாக எரிந்து நாசமானது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.சங்கானை சந்தைக்கு அண்மையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்று முற்றாக எரிந்து நாசமானது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 9.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கொப்பறா தேங்காய்களை ஏற்றியவாறு நின்ற லொறியே தீப்பற்றி எரிந்தது. இந்த விபத்துக் குறித்து உடனடியாக யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது. விரைந்து செயற்பட்ட தீயணைப்புப் பிரிவினர் தீயை அணைக்க முயற்சித்தனர்.

ஒரு பவுசர் தண்ணீர் பீய்ச்சி அடிக்கப்பட்டு தீயை அணைக்க முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை. இதனால் லொறி முற்றாக எரிந்து நாசமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து லொறி உரிமையாளர் வட்டுக்கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்தார். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் லொறி தீப்பற்றியமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை. (இ-5)


## கல்வியாண்டு –2015-16

### விண்ணப்பம் கோரல்

2009 ஆம் ஆண்டு முதல் இளமானி மற்றும் தொழில்சார் கற்கை நெறிகளை வழங்கி வரும் **K-AIMS Business School** இல் பின்வரும் கற்கை நெறிகளை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Professional Courses** (தொழில்சார் கற்கை நெறிகள்)

1. **Association of Chartered Certified Accountants : U.K (ACCA)** ( சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டய கணக்காளர் சம்மேளனத்தின் பரீட்சை)
   **ACCA** கற்கை நெறியானது மூன்று நிலைகளைக் கொண்டது.
   1. **DIPLOMA** – 6 மாதம்
   2. **DEGREE** – ஒரு வருடம்
   3. **ACCA** – ஒரு வருடம்
2. **Sri Lankan Chartered** (இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் பரீட்சை)
3. **AAT –The Association of Accounting Technicians** (இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்)

விண்ணப்ப முடிவுத்திகதி 5th January 2015

மேலதிக தகவல்களுக்கும், விசாரணைகளுக்கும், பதிவுகளுக்கும்

**0773 722 104/0772 555 814**

K-AIMS BUSINESS SCHOOL

Knowledge with aims

**Colombo:** No 35-1/1 Upatissa Road, Colombo 04

**Jaffna:** 249- 2/1 K.K.S Road,Jaffna


# ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கும் முறை

இலங்கையில் நடைபெறும் தேர்தல் ஒவ்வொன்றிலும் வாக்களிக்கும் முறைகள் வேறுபட்டிருப்பதால் வாக்களிப்பது எப்படி என்பதில் பாமர மக்கள் மட்டுமல்ல கற்றவர்களும் தெளிவற்ற தன்மையை எதிர்நோக்குகின்றார்கள்.

பொதுவாக ஜனாதிபதி தேர்தல்களில் இருவர் போட்டியிடுமிடத்து ஒருவருக்கு ஒருவாக்கும் மூவர் போட்டியிடுமிடத்து இரு வாக்குகளும் மூவருக்கு மேல் போட்டியிடுமிடத்து மூன்று வாக்குகளும் உரித்துடையவராகும்.

2015-01-08 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் மூவருக்கு மேல் போட்டியிடுவதால் இத் தேர்தலில் எப்படி வாக்களிப்பது என்பதை பார்ப்போம்.

மாதிரி வாக்குச் சீட்டு

| | | |
|---|---|---|
| வேட்பாளரின் பெயர் | சின்னம் | 1 |
| வேட்பாளரின் பெயர் | சின்னம் | - |
| வேட்பாளரின் பெயர் | சின்னம் | 2 |
| வேட்பாளரின் பெயர் | சின்னம் | 3 |
| வேட்பாளரின் பெயர் | சின்னம் | - |

விருப்பு வாக்குகள் ஒருவருக்கு. மூன்று வாக்குகள் உரித்தாக இருந்தாலும் ஒருவர் ஒரு வாக்கை மட்டும் உபயோகிக்கலாம், இரு வாக்குகளையும் மட்டும் உபயோகிக்கலாம்.

மூன்று விருப்பு வாக்குகளையும் உபயோகிக்கலாம்.ஒரு வாக்கை மட்டும் பாவிக்குமிடத்து வாக்களிக்கும் இடத்தில் I என எழுதல் வேண்டும்.அல்லது X புள்ளடியிட்டும் தமது வாக்கை பிரயோகிக்கலாம்.

ஆனால் ஒன்றுக்கு மேல் வாக்குகளை செலுத்துமிடத்து கட்டாயம் தமது விருப்பின் அடிப்படையில் 1,2,3 என குறிப்பிடல் வேண்டும். ஒன்றுக்கு மேல் புள்ளடியிட்டோ வேறு அடையாளமிட்டோ ஒன்றுக்கு மேல் வாக்குகளை பிரயோகிக்குமிடத்து அது நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டாக கருத்தப்படும்.

மேற்படி சரியான வாக்களிக்கும் முறையை பின்பற்றுவதன் மூலம் தங்கள் உரிமையை பாதுகாக்க முடியும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

ஏ.எஸ். கருணநிதி

உதவி காணி ஆணையாளரும் முன்னாள் உதவி தேர்தல் ஆணையாளரும்.


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 42
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில் (லண்டன் PR)
தொ.இ: B/3940

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 31
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L/ தனியார் (பிரான்ஸ்)
தொ.இ: B/3941

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 71
உயரம்: 175cm
தகைமை/தொழில்: A/L/ கிராம சேவகர்
தொ.இ: B/3942

பிறப்பு: 1970 RC
நட்சத்திரம்: அவிட்டம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பல் வைத்தியர்
தொ.இ: B/3944

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 69 1/4 செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/3967

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 30 சூரிசெவ் 7 இல்
உயரம்: 148cm
தகைமை/தொழில்: ஆசிரியர்
தொ.இ: G/3970

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 21 செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: ஆசிரியர்
தொ.இ: G/3971

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 24 1/2 செவ் 2 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/3974

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் எண்மரையும் தூதரகம் பொறுப்பேற்பு


(யாழ்பாணம்)

படகுகள் பழுதடைந்த நிலையில் யாழ். கச்சதீவுக்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படையினரால் காப்பாற்றப்பட்ட இந்திய மீனவர்கள் 8 பேரையும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

இந்த 8 மீனவர்களையும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நெடுந்தீவு பொலிஸார் ஆஜர்படுத்தியபோதே, பதில் நீதவான் இ.சபேசன் இவர்களை விடுவித்துள்ளார். இந்த நிலையில், மேற்படி 8 மீனவர்களையும் யாழ். இந்தியத் துணைத்தூதரகம் பொறுப்பேற்றுள்ளதாக யாழ். இந்திய துணைத்தூதரக பிரதித்தூதுவர் எஸ்.டி.மூர்த்தி தெரிவித்தார்.

இவர்களின் பழுதடைந்த இரண்டு படகுகளையும் சீர்செய்து கடற் கொந்தளிப்பு தணிந்தவுடன் சொந்த ஊருக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் மண்டபம் பகுதியை சேர்ந்த இந்த மீனவர்களை கச்சதீவுக் கடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காப்பாற்றிய கடற்படையினர், அவர்களின் படகுகளையும் கரைக்கு கொண்டுவந்து நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)




# வாழ்க்கைத்திறன் பயிற்சிக்காக 600 இளைஞர்கள் இணைப்பு

வலி.தென்மேற்கில்

**யு.எஸ். எயிட் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேறிய மக்களின் மீளும் திறனை கட்டியெழுப்புதல் எனும் தொனிப் பொருளின் கீழ் நடைபெறும் 9 மாதகால செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக 11 இளைஞர் கழகங்ககளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 600 இளைஞர்களுக்கான வாழ்க்கைத்திறன் பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, யாழ்.சண்டிலிப்பாய் பிரதேச செயலக் வழிப்படுத்தலில் சேவா லங்கா நிறுவனத்தினால் வலி. தென் மேற்கு பிரதேச இளைஞர் சம்மேளனத்திற்குட்பட்ட இளைஞர்களுக்கான வாழ்க்கைத் திறன் பயிற்சி நடைபெற்று வருகின்றது.

"மீள்குடியேறிய மக்களின் மீளும் திறனை கட்டியெழுப்புதல்" எனும் தொனிப்பொருளில் நடைபெறும் 9 மாதகால செயற்றிட்டத்தின் முதற் கட்டமாக வலி.தென்மேற்கின் 11 இளைஞர் கழகங்களை சேர்ந்த தெரியப்பட்ட 600 இளைஞர்களுக்கான தலா 30 இளைஞர்கள் கலந்து கொள்ளும் 20 இரு நாள் வாழ்க்கைத்திறன் பயிற்சிகள் முன்னெடுக்கப்படுகிறது.

பொருத்தப்பாடான தலைப்புகளில் துறைசார் வளவாளர்களால் முன்னெடுக்கப்படும் இப்பயிற்சிகளில் பங்குகொள்ளும் இளைஞர்களிற்கு அடையாளம் காணப்படும் அவர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதுடன், தெரியப்படும் சுய தொழில் நாடும் இளைஞர்களுக்கான மானியங்களும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் 5 இற்கு மேற்பட்ட மாவட்டங்களில் இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுவதுடன் யாழ்ப்பாணத்தில் வலி.தெனமேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட மாதகல் மேற்கு, மாதகல் கிழக்கு, மாதகல் தெற்கு, மாரீசன்கூடல், பெரியவிளான், இளவாலை, முள்ளானை, சில்லாலை வடக்கு, சில்லாலை தெற்கு, வடலியடைப்பு மற்றும் பண்டத்தரிப்பு ஆகிய 11 கிராமங்கள் இதில் உள்ளீர்க்கப்பட்டுள்ளன.

இச் செயற்றிட்டத்திற்கு யுஎஸ். எயிட் நிறுவனம் நிதி அனுசரணை வழங்குகிறது. (இ-23)




## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



பருத்தித்துறை முனைப்பகுதியில் வசித்துவரும் மரியநாயகம் பிரான்சிஸ்க் என்பவர் அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட நிர்வாக பிரதேசத்திற்கு சமாதான நீதவானாக பருத்தித்துறை நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். இவர் தனது ஆரம்பக்கல்வியை யாழ். வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும், பரமேஸ்வரா மகா வித்தியாலயத்திலும் உயர்கல்வியை யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியிலும் மேற் கொண்டுள் ளார். மேற்படிப்பை யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப்பிரிவிலும், யாழ் திறந்த பல்கலைக் கழகத்திலும் மேற்கொண்டுள்ளார். மனித உரிமைகள் டிப்ளோமாக் கற்கைநெறியினை சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனத்தில் மேற்கொண்டுள்ளார். இவர் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கான உங்கள் தொழிலை ஆரம்பித்து முன்னேறுங்கள் பயிற்சி நெறிகளின் வளவாளராக 2005ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றி வருகிறார்.

இவர் சமூக தன்னார்வத் தொண்டு பணிபுரியும் நிறுவனங்கள் பலவற்றில் பல வருடங்களாக பணிபுரிந்துவருகின்றார்.

பத்திரிகையாளராகிய இவர் பலவருடங்களாக தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரைகளையும் எழுதி வருவதுடன், வலம்புரிப் பத்திரிகையில் வெளியாகும் "பரமபிதா காட்டிய பாதை" என்னும் தலைப்பில் கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர் என்னும் பெயருடனும் எழுதிவருகின்றார். (இ-5)

## ஓய்வூதியர்கழகம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் சிரேஷ்ட ஓய்வூதியர் கழகம் ஒன்று நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நீர்வேலி திருமுருகன் மண்டபத்தில் வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கழக காப்பாளர் கோப்பாய் உதவி பிரதேச செயலாளர் த.பிறேமினி தெரிவு செய்யப்பட்டார்.

தலைவராக ஐ.ஜெகநாதன், உபதலைவராக திருமதி இராமச்சந்திரன் இந்திராணி, செயலாளராக பகவத்சிங்கம், உபசெயலாளராக க.வைத்தியநாதன், பொருளாளராக க.சின்னராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கழக உறுப்பினர்களாக இ. மயில்வாகனம், மா.தங்கத்துரை . ந.சோதிலிங்கம். இகிருஷ்ணானந்தன் இ.சற்குணசர்மா இ.சிறிஸ்கந்தராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (இ-134)

## இன்று இடம்பெறாது

வருட இறுதிப் பணிகளை முன்னிட்டு யாழ்ப்பாண செயலகத்திலுள்ள காணி மாவட்ட பதிவகத்தில் இன்று புதன்கிழமை பிறப்பு, இறப்பு, விவாகம் மற்றும் காணி தொடர்பான அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுக்கான விண்ணப்பங்கள் எவையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் நாளை தொடக்கம் வழமை போல் அனைத்து சேவைகளும் நடைபெறும் எனவும் யாழ்.காணி மேலதிக மாவட்ட பதிவாளர் அறிவித்துள்ளார். (இ

# கோப்பாயில் சிறப்புற இடம்பெற்ற பிரதேச செயலக பண்பாட்டு விழா





(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகமும் பிரதேச பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் இடம் பெற்றது.

சாகித்திய ரத்னா கவிஞர் நீர்வை இ.முருகையன் பெயரில் அமைந்த அரங்கில் இடம்பெற்ற இவ் விழாவிற்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமை வகித்தார். கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களின் முன்னாள் அரச அதிபர் உடுவை எஸ். தில்லைநடராஜா, பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ... ங்கம், வடமாகாண ... பணிப்பாளர் முத்து இராதா கிருஷ்ணன், கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் விருந் தினர்களாகக் கலந்து கொண்டனர்.

பண்பாட்டுப் பேரவையின் உபதலைவர் நீர்வைமணி கு.தியாகராஜக் குருக்கள் ஆசியுரையையும் பேரவையின் உபசெயலர் விரிவுரையாளர் ச.லலீசன் 'கவிஞர் இ.முருகையன் அரங்கத் திறப்புரையையும் ஆற்றினர்.

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் பிறந்த அல்லது வாழ்கின்ற 60 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதோடு அவர்களது விபரங்கள் அடங்கிய 'கலைஞர் மஞ்சரி' என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.


... சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கலை ஆற்றுகைகளாக யாழ். பல்கலைக்கழக நடன விரிவுரையாளர் நீர்வேலியூர் க.சத்தியப்பிரியாவின் மாணவிகள் வழங்கிய நடனநிகழ்வு, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை மாணவர்களின் வாள் நடனம், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் விரிவுரையாளர் சி.வை.குகனேசனின் நெறியாள்கையில் வழங்கிய வாத்திய பிருந்தா ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் விருந்தினராகப் பங்கேற்ற ஆக்க இலக்கிய கர்த்தா உடுவை. எஸ். தில்லைநடராஜா பிரதேச பண்பாட்டுப் பேரவை யினரால் கலைக்காவலன் என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






- யாழ்.மாநகரில் மிகப் பிரமாண்டமான மண்டபம்.
- நியாயமான கட்டணங்களுடன் கூடிய தரமான சேவை
- எல்லா மதத்தினருக்கும் அவரவர் கலாசாரத்திற்கும் விரும்பிய நிறத்துக்கும் ஏற்ற வகையில் மணவறை அலங்காரங்கள்.
- முற்றிலும் குளிரூட்டப்பட்ட (A/C) வசதி.
- மண்டபத்துடன் இணைந்த ஐஸ்கிறீம் விற்பனை நிலையம்.

(சி-9594)

37, சேர்.பொன் இராமநாதன் வீதி.
(நாச்சிமார் கோவிலுக்கு அருகில்) யாழ்ப்பாணம்.

021 320 7369
077 923 4176

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து இயந்திரங்கள், உபகரணங்கள் கையளிப்பு

(முல்லைத்தீவு)

வடக்கு மாகாண சபைக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து விவசாயம் மற்றும் கடற்றொழில் சங்கங்களுக்கு கூட்டுறவு அமைச்சினூடாக நீர் இறைக்கும் இயந்திரங்களும் கடற்றொழில் உபகரணங்களும் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு வடக்கு மாகாண விவசாய அமைச்சின் யாழ். அலுவலகத்தில் இம்மாகாண கூட்டுறவு உதவி ஆணையாளர் திருமதி ம.மதுமதி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி , முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள 10 விவசாய கூட்டுறவு சங்கங்களுக்கு தலா இரண்டு நீர் இறைக்கும் இயந்திரம் வீதம் 5 இலட்சம் பெறுமதியான 10 இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் பூநகரி கடற்றொழில் சமாசத்தை சேர்ந்த 10 அங்கத்தவர்களுக்கு வலைகள் உள்ளிட்ட கடற்றொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண சபைக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபா பெறுமதியில் குறித்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உதவிப் பொருட்களை வடக்கு மாகாண கூட்டுறவு, விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள்

## வழங்கினார் சந்திரகுமார் எம்.பி


அண்மைக்காலமாக தொடர்ச்சியாக நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 4 ஆயிரத்து 454 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 594 பேர் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். இவர்களில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை சென்று பார்வை யிட்டு வரும் ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அம்மக்களுக்கு உடனடி அத்தியாவசியப் .பொருட்களை வழங்கி வருகின்றார்.

அதனடிப்படையில் பூநகரி பிரதேசத்திற்கு அண்மையில் விஜயம் செய்த அவர் ஞானி மடம் செம்மன்குளம் கிராமத்தில் மழை வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து செம்மன்குளம் கடற்றொழிலாளர் ஓய்வு மண்டபத்தில் தங்கியுள்ள மக்களை பார்வையிட்டார், அத்தோடு அங்கு தங்கியுள்ள 13 குடும்பங்களுக்கும் நுளம்பு வலைகள், பாய்கள், விளக்குகள் தண்ணீர் கான்கள் போன்ற உடனடி அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். இதன்போது மக்கள் எதிர்கொண்டுவரும் சிரமங்கள் குறித்தும் கேட்டறிந்துகொண்ட அவர் மக்களுக்கான இரண்டு வாரத்திற்கான உலருணவுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளமையையும் குறிப்பிட்டார்.



இதேவேளை, கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் நாகேந்திரபுரம் பாடசாலை, கட்டைக்காடு, பாடசாலை, இரட்டைப்பனை பொதுநோக்கு மண்டபம், புளியம்பொக்கணை கலவெட்டித்திடல் பாடசாலை, தர்மபுரம் நெசவு நிலையம் ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களை அவர் சென்று பார்வையிட்டதோடு அவர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கி வைத்துள்ளார்.

நாகேந்திரபுரம் பாடசாலையில் 65 குடும்பங்களும், கட்டைக்காடு, பாடசாலையில் 56 குடும்பங்களும், இரட்டைப்பனை பொது நோக்கு மண்டபத்தில் 6 குடும்பங்களும்




புளியம்பொக்கணை கலவெட்டித்திடல் பாடசாலையில் 40 குடும்பங்களும், தர்மபுரம் நெசவு நிலையத்தில் 68 குடும்பங்களும் தங்கியுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஏற்பாட்டில் இந்த மக்களுக்கான சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகிறது. அத்தோடு நேற்றைய தினம்சந்திரகுமார்எம்.பியால் பாய்,பெட்சீட், நுளம்பு வலை, விளக்கு, நீர் கொள்கலன், போன்ற பொருட்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கான உதவிப்பொருட்களை வழங்குவதற்கும், இரண்டு வருடத்திற்கான உலருணவுப்பொருட்களை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கண்டாவளை பிரதேச செயலாளர் முகுந்தன், கண்டாவளை சமூக சேவை உத்தியோகத்தர், வாழவின் எழுச்சி உத்தியோகத்தர்கள், கண்டாவளை பிரதேச ஈ.ழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயற்பாட்டாளர்கள் செல்வம் மற்றும் ரதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (2)

# அம்மனுக்கு சாத்தப்பட்டிருந்த 15 பவுண் நகைகள் திருட்டு

(முக்கொம்பன்)

ஏ-9 வீதி கிளிநொச்சியில் அமைந்துள்ள காளிகோவிலில் அம்மன் சிலைக்கு சாத்தப்பட்டிருந்த 15 பவுண் நகைகள் திருடர்களால் களவாடப்பட்டுள்ளது.



இச்சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணிக்கு கிளிநொச்சி 55 ஆம் கட்டையில் அமைந்துள்ள காளிகோவிலில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பூட்டப்பட்ட ஆலயத்தினுள் நடமாட்டம் இருப்பதை அறிந்த ஐயர், உடனடியாக விரைந்தபோது ஆலயத்தின் முன்கதவு உடைக்கப்பட்டிருந்ததைக் கண்டார்.

அதன் பின்னர் உள்நுழைந்து பார்த்த வேளை அம்மன் சிலைக்கு சாத்தப்பட்டிருந்த 15 பவுண் நகைகள் திருடப்பட்ட சம்பவம் தெரியவந்தது.

இதனையடுத்து கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு காலை 8.30 மணிக்கு வருகைதந்த பொலிசார் மோப்பநாயின் உதவியுடன் தேடுதலில் ஈடுபட்டனர்.

அத்துடன் மேலதிக விசாரணைகளையும் நடத்தினர். (2-283)

# முகாம்களில் தங்க வைக்கப்பட்ட மக்களுக்கு நடமாடும் வைத்தியசேவை நடத்தப்படவுள்ளது

## வடமாகாண சுகாதார அமைச்சர்



(வவுனியா)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் வசிப்பவர்களுக்கு. தொற்று நோய் பரவாமல் இருக்க சுகாதார திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அண்மையில் வடமாகாண விவசாய அமைச்சரின் உணவு வழங்கும் துறையும் சுகாதார அமைச்சும் இணைந்து உலர் உணவுப் பொதிகளையும் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கான அத்தியாவசிய பொருட்களையும் விநியோகித்துள்ளனர்.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில், மழைகாலங்களில் மலசலகூடங்களின் குழிகள் நிரம்பிய நிலையில் காணப்படும் போது கிணற்று நீர் அசுத்தமடைந்து காணப்படும். எனவே கொதித்தாறிய நீரை பருகும்படி கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் இடைத்தங்கல் முகாம்களில் மாவட்ட சுகாதார திணைக்களத்தினால் நடமாடும் வைத்திய சேவைகளும் நடத்தப்படும் என்று தெரிவித்தார். (2)

# இதுவரை வீடுகளின்றி தற்காலிக கொட்டகைகளில் வாழ்கின்றோம்

## விசுவமடு, ரெட்பானா கிராமமக்கள் ஆதங்கம்

முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு, ரெட்பானா கிராமத்தில் வசிக்கும் மக்கள் அடிப்படை வசதிகளில் ஒன்றான வீடு இல்லாமல் தற்காலிக கொட்டகைகளில் வசித்து வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தகரங்களை கூரையாகக் கொண்ட இந்தக் கொட்டகைகள் வரட்சியான காலத்தில் வசிக்க முடியாத அளவுக்கு வெப்பமாக இருப்பதுடன், மழை காலத்தில் வீடுகளுக்கு நீர் ஊறும் நிலையும் உள்ளது.

2010ஆம் ஆண்டு மீளக்குடியேறிய தமக்கு கடந்த 4 வருடங்களாக வீட்டுத்திட்டத்தில் வீடுகள் ஒதுக்கப்படவில்லை. புள்ளிகள் அடிப்படையில் முன்னுரிமையளிக்கப்பட்டு, வீட்டுத்திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டமையால் தமக்கான வீடுகள் இதுவரையில் கிடைக்கவில்லையெனவும், ஆயினும் தற்போது தெரிவு செய்யப்பட்ட வீட்டுத்திட்ட பயனாளிகளுக்குள் இவர்களின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பிரசாரத்திற்காக சல்மான்கான் வரவில்லை

## அரச தரப்பு எம்.பி.விளக்கம்

பிரபல இந்தி நடிகர் சல்மான் கான் தேர்தல் பிரசாரத்திற்காக இலங்கை வரவில்லை என ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எரிக் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற மருத்துவ முகாம் ஒன்றில் பங்கேற்பதற்காகவே சல்மான்கான் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுடன் காணப்படும் நெருங்கிய உறவே சல்மான்கான் இலங்கை விஜயம் செய்ய காரணம். பணம் கொடுத்து தேர்தல் பிரசாரத்திற்காக சல்மான் இலங்கைக்கு அழைத்து வரப்படவில்லை.

சல்மான்கானை பாரியளவு பணம் கொடுத்து இலங்கைக்கு அழைத்து வந்ததாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை. சல்மானின் அறக்கட்டளையான பியிங் ஹியுமன் அமைப்பும் இந்த மருத்துவ முகாமிற்கு பங்களிப்பு வழங்கியது.

வெறும் நபர்களின் நட்பு பண ரீதியானது என்ற போதிலும், நாமல் ராஜபகஷவின் நட்பு பண ரீதியானதல்ல என எரிக் விஜேவர்தன தெரிவித்துள்ளார். சல்மான்கான் தேர்தல் பிர்சாரத்தில் ஈடுபடுவது குறித்து ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனினும் நேற்று முன்தினம் பொறளை கம்பல் மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிர்சாரக் கூட்டங்களில் சல்மான்கான் மற்றும் நடிகை ஜாக்லீன் ஆகியோர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் கரங்களை தேர்தலில் பலப்படுத்த வருகை தந்துள்ள சல்மான், ஜாக்லீன் ஆகியோருக்கு நன்றி பாராட்டுவதாக தேர்தல் பிரசார மேடையில் சில அரசியல்வாதிகள் அறிவித்திருந்தனர். (இ-5)




# நடிகரை வரவழைத்தமை வெட்கக்கேடான விடயம்

## ஐ.தே.க. தெரிவிப்பு

தேர்தல் பிரசாரத்துக்காக பொலிவூட் நடிகர்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரழைத்தமையானது, வெட்கப்பட வேண்டிய செயல் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கையில் வெள்ளம் மற்றும் மண்சரிவால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தளவு கீழ்நிலை செயற்பாடு குறித்து இலங்கை மக்கள் வெட்கப்படுகிறார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலாக அமரதேவ மற்றும் மாலினி பொன்சேகா ஆகியோரை பிரசாரங்களுக்கு பயன்படுத்தியிருக்க முடியும் என்று ஹர்ச சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பொது வேட்பாளர் மைத்திரிபாலவுக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்ட கலைஞர்கள் குழு ஒன்றின் மீது குருநாகலில் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# கலைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் - ரோஹன

(கொழும்பு)

கலைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

குருணாகல் கும்புக்கெட்ட என்னும் இடத்தில் வைத்து நேற்று முன்தினம் உள்ளூர் கலைஞர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த இளம் கலைஞர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.




இதன்போது புதிய தலைமுறைக் கலைஞர்கள் என்ற அமைப்பின் கலைஞர்களான பிரபல இளம் நடிகை சமனலி பொன்சேகா, இந்திரசாபா மனுவீர, லக்ஸ்மன் செனவிரட்ன உள்ளிட்ட கலைஞர்கள் தாக்கப்பட்டிருந்தனர்.

தாக்குதலுடன் தொடர்புடைய நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்த சந்தேக நபர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என அவர் நேற்று ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக கலைஞர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகவும் நாகரிகமான சமூகக கட்டமைப்பு ஒன்றில் இவ்வாறு கலைஞர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட மாட்டாது எனவும் கலைஞர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (இ-5)

# மகிந்தவுக்கு எதிராக குற்றப் பிரேரணை

## சோபித தேரர் எச்சரிக்கை



(கொழும்பு)

**இலங்கையர் அனைவரும் கௌரவமளிக்க வேண்டிய தேசிய கீதத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் பிரசாரத்துக்காகப் பயன்படுத்துகின்றார் எனத் தெரிவித்த நீதியான சமூகத்துக்கான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டாளர் கோட்டே நாக விகாராதிபதி வண. மாதுலுவாவே சோபிததேரர் இதற்கு எதிர்ப்புத்தெரிவித்து அரசமைப்புக்கமைய ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவர முடியும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுகின்றமையால், ஜனாதிபதித் தேர்தல் நீதியானதாக இடம்பெறாது.

சுதந்திரமாக தமக்கு வாக்களிக்க முடியாது என்று மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர். எனவே, தமக்கு இருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்தி நீதியான தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, நீதியான தேர்தலொன்று நடைபெறாது என்ற எண்ணத்தில் நாட்டு மக்கள் இருக்கின்றனர்.

எனவே, ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இடம்பெறும் தேர்தலில் அச்சம், பீதியின்றி சுதந்திரமாக வாக்களிக்க எமக்கு இடமளியுங்கள். 17 ஆவது திருத்தச் சட்டம் இல்லாது செய்யப்பட்டுள்ளதால், தேர்தல்கள் ஆணையாளருக்கு அதிகாரம் இல்லை.

வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டது முதல் இன்றுவரை அரசு தேர்தல் சட்டத்தை பெருமளவில் மீறிவருகின்றது. மக்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். வேட்புமனுத் தாக்கலின் பின்னர் ஜனாதிபதி மகிந்தவும் சாதாரண வேட்பாளராதான்.

அவருக்கும் எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். ஆனால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்துகின்றார். தேசிய கீதம், தேசியக்கொடி என்பன நாட்டின் தனித்துவமானவை. அவற்றைத் தனிநபர் தேவைக்காக பயன்படுத்த முடியாது. அவற்றுக்குரிய கௌரவத்தை அனைவரும் வழங்க வேண்டும்.

ஆனால், தேசிய கீதத்தையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது பிரசாரத்துக்காகப் பயன்படுத்துகின்றார். இலங்கையின் அரசமைப்புக்கமைய இந்த நடவடிக்கைக்காக குற்றப் பிரேரணை கொண்டுவர முடியும்.

நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தி இடம்பெறும் தேர்தலில் மக்களுக்கு நம்பிக்கை இல்லை. முழு நாடும் அச்சத்தில் உள்ளது.

மக்கள் அச்சம், பீதியின்றி வாக்களிக்கும உரிமை இல்லாது செய்யப்பட்டுளளது. எமக்கு நீதியான தேர்தலொன்று இடம்பெற வேண்டும். அதற்காக தமக்கு இருக்கும் அதிகாரங்களைக் கொண்டு தேர்தல்கள் ஆணையாளர் நடவடிக்கை எடுகக வேண்டுமென அவர்மேலும்தெரிவித்தார் (இ-5)




# சல்மான்கான் ஒரு துரோகி

நடிகர் சல்மான்கான் ஒரு நம்பிக்கை துரோகி என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கடுமையாக் சாடியுள்ளார். மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்து உலகத் தமிழர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளார் சல்மான்கான்.

இதுகுறித்து வைகோ கருத்து தெரிவிக்கையில், சல்மான்கான் ஒரு நம்பிக்கைத் துரோகி என்றார்.

இலங்கையைச் சேர்ந்தவரும், பாலிவுட் நடிகையுமான ஜாக்லீன் பெர்னாண்டஸுடன் இணைந்து மகிந்தவுக்கு வாக்கு சேகரித்து பிரசாரம் செய்து அனைவரையும் அதிர வைத்துள்ளார் சல்மான்கான். 3ஆவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மகிந்தவுக்கு சல்மான்கான் பிரசாரம் செய்தது தமிழகத்திலும் அதிர்ச்சி அலைகளைப் பரவவைத்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# சிறுவர் அரங்கம்

1027

# உப்பைப் போன்ற பாசம்!



'...அதற்குள் அரண்மனை யில் ராணியின் அட்டிகை காணா மற்போனதால் ஒரே பரபரப்பு ஏற்பட்டது.

அட்டிகையைக் கண்டு பிடிப்ப வர்களுக்கு, அவர்கள் விரும்பு வது எதுவானாலும் தரப்படும் என்று ராஜா தண்டோராப் போடச் செய்தார்.

அடுத்தநாள் காலை, விறகு வெட்டி தன் வேலைக்குக் போகும்போது, தன் குடிசை யின் கூரையில் ஏதோ பளபளவென மின்னுவதைக் கண்டு தன் மனைவியான இளவரசியை அழைத்தான்.

வெளியே ஓடி வந்த அவள கூரையின் மேல் விழுந்திருந்த வைர அட்டிகையைக் கண்டு திகைத்துப் போனாள.

அதை விறகு வெட்டி கூரையி லிருந்து எடுத்து அவள் கையில் தர, "அடடே! இது என் தாயின் அட்டிகை அல்லவா? இது எப்படி இங்கே வந்தது?" என்று ஆச்ச ரியத்துடன் குழம்பியவள், "என் னுடைய தந்தை என்னைப் புரி ந்து கொள்ளும் காலம் இத்தனை சீக்கிரம்வரும் என்று நான் நினை க்கவில்லை" என்றாள.

அப்போது தூரத்தில் அரண் மனை ஆள் ஒருவன் தண்டோ ராப் போட்டு வைர அட்டி கையைப் பற்றி அறிவிப்பது கேட்டது.

அதைக் கேட்டதும் இளவரசி யின் முகம் மலர்ந்தது.

அவள் தன் கணவனை. நோக்கி, "அரண்மனைக்குச்சென்று என் தந்தையை சந்தித்து இந்த அட்டிகையைக் கொடுங்கள்.

நீங்கள் யாரென்று அவருக் குத் தெரியாமல் மாறு வேடத்தில் செல்லுங்கள்.

அவரிடம் பரிசு எதையும் கேட் காதீர்கள்.

நாளைக்கு நம் வீட்டில் விரு ந்துண்ண வருமாறு அழையுங் கள்.

அதுவே போதும்" என்றாள்.

அதன்படியே, விறகு வெட்டி அரண் மனையை அடைந்து, ராஜாவை சந்தித்து அட்டிகை யைக் கொடுத்தான்.

"மகாராஜா! பாக்கியவசமாக, மகாராணியின் அட்டிகை யைக் கண்டு பிடித்தேன்.

இதைப் பெற்றுக் கொள்ளுங் கள்!" என்று சொன்னதும், ராஜா அதைக் கையில் வாங்கிப் பரிசோ தித்தார்.

அது ராணியின் நகைதான் என்று தெரிந்ததும் மிக்க மகிழ் ச்சியுடன், "நீ யார்? உனக்கு என்ன பரிசு வேண்டும்? நான் முன்னமே அறிவித்தபடி நீ எது கேட்டாலும் அதைப் பெறலாம்" என்றார்.

"மகா ராஜா! நான ஒரு ஏழை விறகு வெட்டி! ஆனால் உங்க ளிடமிருந்து பரிசு எதையும் நான் விரும்பவில்லை.



ஆனால் நீங்கள் நாளைக்குத் தனியாக என் குடிசைக்கு வருகை தந்து விருந்துண்ண வேண்டும்!" என்று வேண டினான்.

அதைக் கேட்ட ராஜா தர்மசங்கடத்திற்கு உள் ளானார்.

ஆனாலும் தான முன் னமே அறிவித்தபடி அவன வேண்டு கோளை மறு க்க முடியவில்லை.

மறுநாள் ராஜா மட்டும் விறகு வெட்டியின் குடி சைக்குச் சென்றார். இள வரசி தன் முகத்தை ஒரு திரை யினால் மறைத் துக் கொண்டு ராஜா முன் வந்து அவரை வணங் கினாள்.

ராஜாவி னால் தன் பெண்ணை அடையாளம் கண்டு பிடிக்க முடிய வில்லை.

பின்னர் ராஜா விருந் துண்ண அமர்ந்தார்.

அவருக்கு இளவரசி இனிப்புப் பண்டங்களாகப் பரிமாறினாள்.

அவற்றை அவர் உண்டபிறகு, மீண்டும் இனிப்புகளையே பரிமாற, அவருக்குத் திகட்டிவிட்டது.

"எனக்கு இனி மேல் இனிப்பு வேண்டாம்! உப்புள்ள பண்டங் களை உண்ண என் நாக்கு துடி க்கிறது.

அவற்றில் ஏதாவது இருந் தால் கொண்டுவா!" என்றார் ராஜா! உடனே உப்பே இல்லாத உணவை அவர்முன் வைத்தாள்.

அதை உண்ட அவர், முகம் சுளித்து தட்டைத் தள்ளிவிட்டார்.

இதற்காகவே காத்திருந்த இள வரசி, அவர் முன் வந்து நின்று தன் முகத்திரையை அகற்றி, "அப்பா! அன்று ஒருநாள் உங் களை உப்பைப் போல் நேசிக்கி றேன் என்று சொன்னதற்காக என் மேல் கோபம் கொண்டீர் கள்.

இப்போதாவது இனிப்பை எப்போதும் உண்ண முடியாது என்பதையும், உப்பில்லாப் பண் டம் குப்பையிலே என்பதையும் புரிந்து கொண்டீர்களா?" என் றாள்.

ராஜா தன் தவறை உண ர்ந்தார்.

இளவர சியை நோக்கி. "மகளே! உப்பின் அருமையை இன்று புரிந்து கொண்டேன்.

நீதான் அனை வரையும்விட என்மீது ப்ரசம் உள்ளவள் என் பதைப் புரிந்து கொண்டேன்.

நான் சொனனேன் என்பதற் காக வசதியைப் பற்றி கவலைப் படாமல் ஒரு ஏழையை மண ந்து வறுமையில் வாடுகிறாய். என்னை மன்னித்து விடு!" என்று கூறி கண்ணீர் வடித்தார்.

தன் பெண்ணின் பாசத்தை சரியாக உணர்ந்த ராஜா, அவள் கணவனுக்கு தன் ராஜ்யத்தின் ஒரு பகுதியை அளித்து ஆட்சி புரியச் செய்து, அவனையும் மன்னனாக்கி அழகு பார்த்தார்.

(முற்றும்)

12.2014
31

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1492 - சிசிலியிலிருந்து 100,000 யூதர்கள் வெளியேற் றப்பட்டனர்.
- 1599- பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி இந்தியா வுக்கான தனது கப்பல் பயணத்தை ஆரம்பித்தது.
- 1687-நன்னம்பிக்கை முனையை அடைவதற்காக ஹியூ கெனாட் எனப்படும் புரட்டஸ்தாந்தர்களின் முதற் தொகு தியினர் பிரான்சை விட்டுப் புறப்பட்டனர்.
- 1695 -இங்கிலாந்தில் பலகணி வரி அறிமுகப்படுத்த ப்பட்டதை அடுத்து பல அங்காடி உரிமையாளர்கள் தமது அங்காடிகளின் பலகணிகளை செங்கல் கொண்டு மூட ஆரம்பித்தார்கள்.
- 1857 -விக்டோரியா மகாராணி கனடாவின் தலைநகராக ஒட்டாவாவைத் தேர்ந்தெடுத்தார்.
- 1862 - அமெரிக்கப் புரட்சிப் போர்: மேற்கு வேர்ஜீனியாவை கூட்டணியில் இணைப்பதற்கான சட்டமூலத்தில் ஆபிரகாம் லிங்கன் கையெழுத்திட்டதில் வேர் ஜீனியா இரண்டாகப் பிரிந்தது.
- 1879- வெள்ளொளிர்வு விளக்கு முதற்தடவையாக தொமஸ் எடிசனால் காட்சிப்படுத்தப்பட்டது.
- 1881 - இலங்கை முழுவதும் கடுமையான நிலநடுக்கம் உணரப்பட்டது.
- 1909 - மான்ஹட்டன் பாலம் திறக்கப்பட்டது.
- 1923- லண்டனின் பிக் பென் மணிக்கூண்டின் மணி யொலி மணிக்கொரு தடவை பிபிசியில் ஒலிபரப்பு செய்ய ஆரம்பிக்கப்பட்டது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஹங்கேரி ஜேர்மனி மீது போரை அறிவித்தது.
- 1946- அமெரிக்க அதிபர் ஹரி ட்ரூமன் இரண்டாம் உலகப் போரில் ஐக்கிய அமெரிக்காவின் பங்கு முடிவுக்கு வந்த தாக அதிகாரபூர்வமாக அறிவித்தார்.
- 1847- ஆறுமுக நாவலர் தனது முதலாவது பிரசங்கத்தை வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் ஆரம்பித்தார்.
- 1963- மத்திய ஆப்பிரிக்கக் கூட்டமைப்பு சாம்பியா, மலாவி, ரொடீசியா என மூன்று நாடுகளாகப் பிளவுற்றது.
- 1984- ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமரானார்.
- 1994- பீனிக்ஸ் தீவுகள், மற்றும் லைன் தீவுகளில் நேர மாற்றம் நடைமுறைப்படுத்தப்பட்டதை அடுத்து, கிரிபட் டியில் இந்நாள் முற்றாக விலக்கப்பட்டது.
- 1999- போரிஸ் யெல்ட்சின் ரஷ்யாவின் அதிபர் பதவியிலிரு ந்து விலகினார்.

பிறப்புகள்

- 1491 - ஜாக் கார்ட்டியே, பிரெஞ்சு நாடுகாண் பயணி (இ. 1557)
- 1929 - ச. வே. சுப்பிரமணியன், தமிழறிஞர்
- 1937 - அவ்ராம் ஹேர்ஷ்கோ, நோபல் பரிசு பெற்ற ஸ்ரேலியர்
- 1955 - தாவூத் இப்ராகிம், இந்தியாவில் தேடப்படும் தீவிரவாதி

இறப்புகள்

- 1905-அலெக்சாண்டர் பப்போவ், ரஷ்ய இயற்பியலாளர் (பி. 1859)
- [illegible] (பி. 1923)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு...



...என் உருவத்தை திரையில் பார்த்தபோது உடம்பெல்லாம் சிலிர்த்துப்போச்சு! இதற்காகத்தானே இவ்வளவு நாள் காத்துக்கிட்டிருந்தேன்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த டைரக்டர் பாலச்சந்தர் சார் என்ன! வசனத்தைப் பேசலாமா? என்று கூறியதும் நான் இந்த உலகத்துக்குத் திரும்பி வந்தேன்.

இந்த சமயத்தில் ஒன்றை சொல்ல வேண்டும். எனக்கு தமிழ் சரிவரத் தெரியாததால் வேறு யாரையாவது எனக்குக் குரல் கொடுக்கச் சொல்லலாம் என்று சிலர் கூறினார்கள். பாலச்சந்தர் சார் அதை ஏற்கவில்லை. கூடவே கூடாது. ஒரிஜினல் வாய்ஸ்தான் வேண்டும் என்று கூறிவிட்டார்.

அபூர்வ ராகங்களில் எனக்கு வசனம் கொஞ்சம்தான். அதை எப்படி உச்சரிக்க வேண்டும் என்று பாலச்சந்தர் சார் சொல்லிக் கொடுத்தார். அதை அப்படியே பேசினேன். அதை டைரக்டர் ஓகே செய்தார். டப்பிங் வேலை முடிந்தது.

இவ்வாறு குறிப்பிட்ட ரஜினிகாந்த் தனக்கு அந்தப் பெயர் வந்தது பற்றி சொன்னதாவது-


பெயர் சூட்டினார்

## "ரஜினிகாந்த்" என்று பெயர் சூட்டினார், பாலசந்தர்

1975 ஆகஸ்ட் 15 ஆம் திகதி அபூர்வ ராகங்கள் படம் வெளிவரும் என்று திகதி குறிப்பிடப்பட்டது.

பாலச்சந்தர் சார் என்னை அழைத்தார். டைட்டிலில் பெயர் போட வேண்டும். சிவாஜிராவ் என்ற பெயர் வேண்டாம். ஏனென்றால் ஏற்கனவே நடிகர்திலகம் சிவாஜி கணேசன் இருப்பதால் சிவாஜி என்ற பெயர் வேண்டாம். ராவ் என்கிற பெயரும் தமிழ்நாட்டுக்குப் பொருந்தாது என்றார்.

நீங்களே ஏதாவது பெயர் சொல்லுங்க சார்! என்று கூறிவிட்டுத் திரும்பினேன். என் நண்பர்களிடம் கலந்து ஆலோசித்தேன். சரத் ஆர் எஸ். கெய்க்வாட் என்ற இரண்டு பெயர்கள் என் மனதில் இருந்தன.



அதைச் சொன்னேன். நண்பர்கள் எல்லோரும் ஒட்டு மொத்தமாக நன்றாக இல்லை என்று கூறினார்கள். மறுபடியும் பாலச் சந்தர் சார்கிட்ட போய் நீங்களே ஆசிர்வாதம் செய்து ஒரு பெயர் வையுங்க! என்றேன்.

அந்த நாள் என் வாழ்க்கையில் மறக்க முடியாத நாள். பௌர்ணமி தினம்.


பாலச்சந்திர் சார் சொன்னார் என்னுடைய மேஜர் சந்திரகாந்த் நாடகத்தில் சந்திரகாந்துக்கு இரண்டு பிள்ளைகள் ஒருவன் ஸ்ரீகாந்த் மற்றவன் ரஜினிகாந்த். ஸ்ரீகாந்த் என்ற பெயரை ஏற்கனவே ஒருவருக்கு வைத்தாகிவிட்டது. ரஜினிகாந்த் என்ற பெயரை யாருக்கு வைக்கலாம் என்று ரொம்ப நாளா நினைத்துக் கொண்டிருந்தேன். அதை உனக்கு வைக்கிறேன்.

இவ்வாறு பாலச்சந்தர் சார் சொன்னதும் அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டேன். நல்ல வில்லனா வரனும் என்று ஆசிர்வாதம் செய்யுங்க என்றேன். வில்லன் எதுக்கப்பா! நீ பெரிய நடிகரா வருவே. பார்த்துக்கொண்டே இரு! என்றார் பாலச்சந்தர் சார்.

எனக்குத் தாங்க முடியாத உற்சாகம். நேராக மெரினா கடற்கரைக்கு ஓடினேன். கடற்கரை மணலில் உட்கார்ந்து நீலக் கடலை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். எனக்கு மன கஷ்டம் வந்தாலும் உற்சாகம் வந்தாலும் கடற்கரைக்குச் சென்று தனியாக உட்கார்ந்து சிந்தனையில் மூழ்கிவிடுவேன்.

(தொடரும்)

# கருவாச்சி காவியம்



வைரமுத்து- 36

....பெரியமூக்கி ஒரு குறுக்கம் வெதச்சு முடிக்க முன்னித்தி ஏரு கேப்பக்களியானும் பின்னித்தி ஏரு சவட்டையனுமா ஒலவுல கூடிட்டாங்க.

சும்மா சரபுர சரபுரன்னு சரளக் கல்லுகக்கூடச் சண்ட புடிச்சுக்கிட்டே செம்மண்ணப் பொளந்து செந்துருக்கம் பூசிக்கிட்டே வெதப்பு ஒழவு போட்டுப் போகுதுக கலப்பைக.

கஞ்சிப் பொழுதுக்குள் ஒரு குறுக்கம் உழுது முடிச்சு பெரியமூக்கி கர கரன்னு கரச்சு ஊத்துன கம்பங் கூழக் கழுவாத ரெண்டு கையிலயும் வாங்கி சுட்ட மொளகாவத்தலச் சுரீர்ன்னு கடிச்சு மட மடன்னு குடிச்சுப்புட்டு ஆவாரங் கொழைய உருவிக் கை தொடச்சு இடுக்கில இருக்கிற கூழக் கோவணத்துல தடவிக்கிட்டு அடுத்த குறுக்கம் பாத்து மேழியழுத்துனாக ரெண்டு பேரும்.

இங்க இது இப்படியிருக்க... அங்க பச்ச நெல்ல ஒரல்ல போட்டுக் குத்தியெடுத்தா கருவாச்சி.

அதச் சோறாக்கிக் கொழஞ்சும் கொழையாம எறக்கி உருண்ட புடிச்சுப் புளிச்ச தண்ணியில போட்டு ஆறாளுக்குண்டான கஞ்சிய எடுத்துக் குத்துச் சட்டியில போடுறா. ஒழவுக் காட்டுல நாலு ஆளு; இவளச் சேத்து அஞ்சாளு. கஞ்சிக் கணக்குல கேப்பாக் களியான் ரெண்டாளு. ஆக மொத்தம் ஆறாளு.

மறுமாத்தம் இல்ல. குத்துச் சட்டியத் தலையில வச்சு தூக்குவாளியக் கையில புடிச்சு முத்துக் கருப்பு கடையில மறுமாத்ததுக்கு வெங்காயம் வாங்கி அவ முந்தானையில முடிய பெரியமூக்கி காட்ல ஒழவு நடக்குது டாங்கற ஒளவு போயிருச்சு கட்டையனுக்கு. நெல்லுக் கஞ்சி வருது நெல்லுக் கஞ்சி வருதுங்கிற நெனப்புலயே ரெண்டு குறுக்கத்த நெருக்கி முடிக்க...



கருவாச்சி வாரது தெரியுது கரட்டு மேட்டுல. நெல்லுக் கஞ்சியைக் கண்டதும் கேப்பக்களியான் மலந்து போனான் மலந்து. ஒரு உருண்டைக்கி ரெண்டு வெங்காயம் வாங்கி கருவேலயத் திங்கிற வெள்ளாடு மாதிரி கறுச் கறுச்ன்னு மெல்லுறான் பாவம்.

இவுகளயெல்லாம் கஞ்சி குடிக்க விட்டுட்டு மூணாவது குறுக்கம் வெதச்சு முடிச்சு மூஞ்சி தொடச்சு வந்தா பெரியமூக்கி.. கடைசி ஒருண்ட திண்டு கை தொடைக்குறதுக்குள்ள எந்திரிக்கப்பா எந்திரிங்க.. பொழுதிருக்க ஒழவு முடியணும்ன்னு எல்லார் கால்லயும் வெந்நிய ஊத்துறா. பெரியமூக்கி முள்ளு வெட்ட கருவாச்சியும் கொண்ணவாயனும் கல்லுப் பெறக்கிப் போட மூணாங் குறுக்கத்துல ரெண்டு சால் ஓட்டி மூணாஞ்சாலுக்குள்ள முன்னித்த ஏரு நொழைய நிறுத்துங்கடா ஏரன்னு சத்தங் கேக்குது.

யாரு.. என்னான்னு திரும்பப் பாக்கிறதுக்குள்ள ஏர் உழுகிற ஆளுக மேல சரசரசரன்னு கல்லெறி விழுகுது. மாட்டுத் திமில் மேல விழுந்து ஒடஞ்சு செதறுதுக மண்கட்டிக. விர்று விர்றுன்னு காத்தக் கிழிச்சு வந்த கைக்கம்பு ஒண்ணு கேப்பக்களியான் மாட்டுக் கொம்புல மாட்டி நிக்கிது. என்னா நடக்குது ஏது நடக்குதுன்னு கண்ணு பாத்தது புத்திக்கு எட்றதுக்குள்ள ஏர வந்து மறிச்சுட்டானுங்க கட்டையன் ஆளுங்க.

ஒலக்கையனும் சலம்பல் பாண்டியும் பன்னியாம் பேரனும் கறிக் கஞ்சிக்கு அலையிற நாலஞ்சு காலிப் பயல்களும் ரெண்டு ஏர்மாட்டையும் சுத்தி வளையங்கட்டி நிக்கிறாங்க.

கெட்ட வார்த்த சொல்லி வஞ்சிக்கிட்டே ஒருத்தன் கேப்பக்களியான் உருமால அவுக்கிறான். ஏய் யாரக் கேட்றா ஏரப்பூட்னீங்க? அவுத்து விடுங்கடா. பெரியமூக்கியும் கருவாச்சியும் பதறி நெஞ்சிலடிச்சு ஓடி வாராங்க. ஒலக்கையனப் பார்த்துக் கேப்பக்களியான் பயந்து போனாலும் சவட்டையன் சண்ட புடிக்கிறான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் பெருந்தொகைப் பணம் மகிந்த குடும்பத்தின் பயன்பாட்டில்

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

**மக்களின் பெருந்தொகைப்பணம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்ப நலனுக்காகவே பயன்படுத்தப்படுகின்றது என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா குற்றம்சாட்டியுள்ளார். இலவசமாக கிடைக்கும் வாகனங்கள், வெளிநாட்டு பயணங்களை ஜனாதிபதியின் குடும்ப உறுப்பினர்களும், நண்பர்களும் மட்டுமே அனுபவிக்கின்றனர் எனவும் அவர் ஆதங்கப்பட்டுள்ளார்.**

மாணவர்களின் கல்வியை சீர்குலைத்து நாட்டை பிழையான பாதையில் வழிநடத்துகின்றனர்.

அதிவேக நெடுஞ்சாலைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் போன்ற அபிவிருத்தித் திட்டங்களில் பாரியளவில் நிதி மோசடி இடம்பெற்றுள்ளது.

மக்கள் அடகு வைத்த தங்க ஆபரணங்களை மீட்க முடியாது அவை ஏலத்தில் விடப்படுகின்றன.

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் விமான நிலையம் ஆகியன இன்று மிருகக்காட்சிச்சாலையாக மாற்றமடைந்துள்ளது.

இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படுத்த மக்கள் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிக்க வேண்டுமென சரத் பொன்சேகா கோரியுள்ளார். நேற்று இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)



# பெரும்பான்மையான தமிழர்கள் மகிந்தவை ஆதரிக்கின்றனராம்

## சுப்ரமணியன்சுவாமி கூறுகிறார்

பெரும்பான்மையான தமிழர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதாக இந்திய பாரதீய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான சுப்ரமணியன்சுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இந்திய ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் வாழ்ந்து வரும் பெரும்பான்மை இந்து தமிழர்கள் ஜனாதிபதி மகிந்தவை ஆதரிக்கின்றார்கள்.

இலங்கை தமிழ் மக்கள் ஜனாதிபதி மகிந்தவை மீளவும் ஜனாதிபதியாக்கினால், அதிகாரப் பகிர்வு தொடர்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு காத்திரமான பங்களிப்பினை வழங்க முடியும்.

எனவே தமிழ் மக்கள் ஜனாதிபதி மகிந்தவிற்கு வாக்களிக்க வேண்டும் என சுப்ரமணியன் சுவாமி கோரியுள்ளார்.

கடந்த காலங்களிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்காக சுப்ரமணியன்சுவாமி குரல் கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஹக்கீம், றிசாத், அஸாத், முஜிபூர் அளுத்கம வன்முறைக்கு காரணம்

(கொழும்பு)

அளுத்கம கலவரத்தை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிசாத் பதியுதீன், மத்திய மாகாணசபை உறுப்பினரான அஸாத் சாலி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் ஆகியோரே தூண்டி விட்டனர் என்று சிங்கள - பௌத்த அமைப்பான பொது பலசேனா தெரிவித்துள்ளது.

மேலும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்த கரையோர மாவட்ட கோரிக்கைக்கு மைத்திரிபால சிறிசேன இணங்கியுள்ளதாலேயே முஸ்லிம் காங்கிரஸ் பொது எதிரணிக்கூட்டுக்குள் இணைந்துள்ளதாகவும் இச்செயற்பாடு மூலம் நாடு துண்டாடப்படும் என்றும் அவ்வமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கிருலப்பனையில் அமைந்துள்ள போதி பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது பலசேனாவின் செய்தியாளர் மாநாட்டின் போதே அவ்வமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் டிலாந்த விதானகே மேற்கண்டவாறு அறிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஜனாதிபதித் தேர்தலானது நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கப்போகும் மிக முக்கியமான தேர்தலாகவே அனைவராலும் கருதப்படுகிறது.

ஆகவே, நாட்டு மக்கள் குறிப்பாக சிங்கள - பௌத்த மக்கள் மிகவும் நிதானத்துடன் வாக்களிக்க வேண்டும்.

ஏனெனில், தற்போது எதிரணியில் நல்லாட்சி குறித்தே அதிகமாக பேசப்பட்டு வருகிறது. ஆனால், அதில் இணைந்துள்ளவர்கள் அனைவரும் ஒரு காலத்தில் நாட்டை சீரழித்தவர்களே. மன்னார் நீதிமன்றுக்கு கல்லெறிந்து நீதவானுக்கு அச்சுறுத்தல் விடுத்த றிசாத் பதியுதீன், இவரின் செயற்பாட்டிற்கு பாராமுகம் காட்டிய அப்போதைய நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் போன்றோரே தற்போது பொது எதிரணியில் இணைந்து நல்லாட்சி குறித்து கருத்து தெரிவிக்கின்றனர்.

தற்போது, அமைதியான முறையில் அபிவிருத்தியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் இலங்கையை குழப்பும் சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலுக்கமையவே இவர்கள் செயற்படுகிறார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அதற்கான ஆதாரங்களும் எம்மிடம் உள்ளன.

இவர்களின் இந்தச் செயற்பாடானது திடீரென தீர்மானிக்கப்பட்ட ஒன்றல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்ள வேண்டும். அதற்கான முதற்படியாகவே அளுத்கம கலவரத்தை அவர்கள் தூண்டி விட்டுள்ளார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



### பெருமருந்து/ஈச்சுரமூலி

Botanical Name-Aristolochia indica
Family-Aristolochiaceae
Engl-Indian birth wort
Sinh-Sapsonda

இது நீண்ட மெல்லிய வளைந்த பல்லாண்டு காலம் வாழக்கூடிய ஏறுகொடித்தாவரமாகும். வரம்புகளை (ridged) சாம்பல் கலந்த பச்சை நிறத் தண்டுகளையுடையது. இலைகள் தனியிலை ஒன்றுவிட்ட இலையமைப்புடையது. 4 தொடக்கம் 8.5 செ.மீற்றர் நீளமும் 1-4.5 செ.மீற்றர் அகலமுடையதாகும்.

இலைகளின் அடிப்பக்கம் தட்டையாகவும் நுனிப்பக்கம் கூராகவும் காணப்படும். இலையின் மேற்பக்கம் பிரகாசமான பச்சை நிறமாகவும் கீழ்ப் பக்கம் வெளிறிய நிறத்திலும் காணப்படும். இலைக்காம்பு 0.6- 1.8 செ.மீ. நீளமுடையது. பூக்கள் ஒழுங்கற்றவை. இருபாலானவை. ஊதா கலந்த மண்ணிறமானவை. பூக்களின் வெளிப்பக்கம் பச்சை கலந்த வெண்ணிறமானவை. இதன் பழங்கள் 6 சோனைகளையுடை யது. தட்டையான இறக்கையுடைய விதைகள் காணப்படும். பூக்களை புரட்டாதி முதல் தைமாதம் வரை காணலாம்.

யாழ்.மாவட்டத்தில் ஈரலிப்பான மண்ணுள்ள பிரதேசங்களில் இதனை செழிப்பாக அவதானிக்கலாம். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். இதன் இலைகள் மிகவும் வாசனையுடையது.



இதன் வேர், இலை ஆகியன மருத்துவக் குணங்கள் மிக்கவை. இதன் வேர் அதிக கசப்பாக இருக்கும்.

40 கிராம் வேரை பஞ்சுபோல் தட்டி ஒரு குடுவையில் போட்டு 500 மில்லி நீர்விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 30 தொடக்கம் 60 மில்லி காலை, மாலை தேள்கடி , பாம்புக்கடிக்கு கொடுக்கலாம்.

இதன்வேரை தேன்விட்டு அரைத்து 4 கிராம் அளவு உட்கொண்டு வர உடல்வீக்கம் தணியும்.

இதன் இலைச்சாறு 5 துளி (5 Drops) தேன் ஒரு தேக்கரண்டியில் கலந்து கொடுக்க குழந்தைகட்கு உண்டாகும் வயிற்றுப்போக்கு குணமாகும்.

பெருமருந்து இலைகளை ரம்பை இலைகளுக்குப் பதிலாக அசைவ உணவு (இறைச்சி வகை) சமைக்கும் போது சிறுகச்சிறுக அரிந்து சேர்த்தால் இறைச்சி வகை மென்மையாவதோடு நன்கு ஜீரணம் அடையும். ரம்பை இலைகளை தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதால் குடலில் தொடர்ச்சியான நமைச்சலை ஏற்படுத்தலாம். எனவே ரம்பை இலைக்குப் பதில் பெரு மருந்தின் இலைகளை பயன்படுத்துவது மருத்துவப் பண்பு நிறைந்ததாகும். எனவே கறி வேப்பிலை போன்று பெருமருந்துக் கொடிகளையும் வீடுகள் தோறும் வேலிகளில் ஏறவிட்டு வளர்த்து பயன் பெறலாம்.

மேலும் இதன் இலைகளை சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு காலை,மாலை கொடுக்க பசியின்மை, சமிபாடின்மை, சிரங்கு, சொறி முதலிய நீங்கும்.

இதன் வேர்களை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 2 கிராம் அளவு வெந்நீரில் காலை, மாலை கொடுக்க வாதநோய்கள், உடம்புவலி முதலியன நீங்கும். இதன் இலைச் சாறு 30 தொடக்கம் 60 மில்லி அளவு உட்கொண்டாலும் நச்சுக்கடி நீங்கும்.

பெருமருந்து வேர், நொச்சியிலை, வாதநாராயண் இலை, முடக்கொத்தான் இலை சம அளவில் நிழலில் உலர்த்தி மர உலக்கையால் இடித்து அரித்து காலை, மாலை ஒருதேக்கரண்டி அளவு சாப்பிட்டு வர எத்தகைய நாட்பட்ட வாத ரோகமாயினும் குணமாகும்.


புங்கம்வேர், தும்பைவேர், பெருமருந்து வேர். ஆகிய மூன்றையும் சம அளவாக எடுத்து சிறு சிறு துண்டுகளாக நறுக்கி கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து ஒரு தேக்கரண்டி (8 கிராம்) அளவு தேள் கடி, பூரான்கடிக்கு காலை, மாலை உட்கொள்ளலாம். பெருமருந்து இலை 35 கிராம், பெருஞ்சீரகம் 10 கிராம், அதிமதுரம் 10கிராம், கொத்தமல்லி 20 கிராம் ஆகியவற்றை ஒருலீற்றர் தண்ணீரில் போட்டு 1/4 லீற்றராக குடிநீர் செய்து 30 தொடக்கம் 60 மில்லி தினசரி இருவேளை குடிக்க அஜீரணக்கோளாறுகள் நீங்கி குடல் வலிமை பெறும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரிக்கு த.தே.கூ. ஆதரவு வழங்குவது தமிழர்களை கொலை செய்வதற்கு ஒப்பானது

## சந்திரகாந்தன் கூறுகிறார்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்குவது, அது தமிழர்களுக்கு அரசியல் ரீதியாகச் செய்கின்ற படுகொலையாகத்தான் அமையும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிவநேசதுரை சந்திர காந்தன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திகையாளர் மாநாட்டில் பத்திகையாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திர காந்தன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தமுறை தமிழரசுக் கட்சி அல்லது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்குமென்றால் அந்தச் செயலை தமிழர்களுக்கு அரசியல் ரீதியாகச் செய்கின்ற படுகொலையாகத்தான் அதைப் பார்க்க முடியும.

ஏனென்றால் எதிரணியுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே எந்த விதமான மக்கள் நலன் சார்ந்த குறிப்பாக, சிறுபான்மை மக்களுக்கு ஒன்றுமே சொல்லப்படவில்லை.

எனக்குத் தெரிந்த வகையில் ஐயாயிரம் ஏக்கர் காணியாவது மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்தால் விடுவிப்போம் என்று சொல்கிற வசனத்தைக்கூட கூட்டமைப்பினரால் சேர்க்க முடியாமல் போயிருக்கிறது.

அதைச் சேர்க்கச் சொல்லி சந்திரிகாவுடன் கேட்டபோது, சந்திரிகா மைத்திரிபால சிறிசேனவைப் பார்த்ததாகவும் மைத்திரிபால சிறிசேன சம்பிக்க ரணவக்கவைப் பார்க்க அவர் அதற்கு பதில் சொன்னதாக கடைசியான தகவல் இருக்கிறது. இது ஒரு உண்மைத் தகவலுங்கூட. இந்த அடிப்படையில் தமிழர்களுக்குத் தீர்வும் இல்லை. அதிகாரப் பகிர்வும் இல்லை.

வடபகுதியையே மாத்திரம் அதாவது வடக்கு, கிழக்கை எல்லாம் மறந்து வடபகுதி காணிப் பிரச்சினைக்கே முடிவு கொடுக்க முடியாத, அதை எழுத்திலே உறுதிப்படுத்த முடியாத ஒரு கூட்டத்திற்கே இவர்கள் வாக்களித்தால், நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிற கடந்த கால இலங்கை அரசியல் வரலாற்றில் ஒப்பிட்டுக் கொண்டிருக்கிறபோது யாழ். மேலாதிக்கவாதிகளுடைய வர்க்க அரசியலாகப் பார்க்க முடியும.

இந்த நாட்டை ஒன்றிணைக்கின்ற அல்லது அவர்கள் எதிர்பார்த்திருக்கின்ற தர்வுத் திட்டத்திற்கான ஒரு அரசியல போக்காகப் பார்க்க முடியாது.

ஆகையால் இந்த முறை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விரும்பியோ, விரும்பாமலோ நீண்ட வரலாற்றிலே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோடு ஒரு இணக்கப்பாட்டு அரசியலுக்கு வந்தால் அதை வெளிப்படையாகப் பேசினால் பல நன்மைகள், மாற்றங்கள் தமிழர்களுக்கு நிகழ் முடியும என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மைத்திரி ஒரு அரசியல் குருடன்

## விமல் வீரவன்ச கூறுகிறார்

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இரவு விழுந்த குழியில் மைத்திரிபால சிறிசேன பகல் விழுந்து விட்டதாக அமைச்சர் விமல் வீரவனச தெரிவித்துள்ளார். ஹங்வெல்லையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாறும்போதே அவர் இதனை தெரிவித்தார். சரத் பொன்சேகாவுக்கு அரசியல் என்பது என்னவென்று தெரியாது. அவருக்கு இராணுவ நிர்வாகம பற்றியே தெரியும். ஆனால் மைத்திரிபால அரசியல் குருடன்.

அவர் இரவில் விழுந்த குழியில இவர் பகலில் விழுந்து விட்டார். பொன்சேகாவைவிட மைத்திரிபால சிறிசேன முட்டாள். இவரும் முட்டாள்தான், ஆனால் மைத்திரிபால மிகப் பெரிய முட்டாள். 2010 ஆம் ஆண்டு ஹக்கீமும் சம்பந்தனும் எங்கு இருந்தனர். அவர்கள் நல்லாட்சியையும் ஜனநாயகத்தையும் கொண்டு வருவதற்காகவே அந்த அணியில் இருந்தனர் எனவும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 260 | 270 | 200 |
| உருளைக்கிழங்கு | 80 | 70-80 | 80 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 |
| தக்காளி | 250 | 300 | 220 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50-55 | 60 |
| கோவா | 100 | 120 | 140 |
| கரட் | 200 | 50-170 | 240 |
| பூசணி | 50 | 35-40 | 60 |
| புடோல் | 140 | 80-100 | 140 |
| வாழைக்காய் | 100 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 110 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 130 | 125 | 140 |
| பாகற்காய் | 300 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 140 | 120 |
| கருணைக் கிழங்கு | 70 | 50 | 70 |
| பயற்றங்காய் | 250 | 250-280 | 200 |
| லீக்ஸ் | 330 | 280 | 320 |
| பீற்றூட் | 200 | – | 240 |
| கறிமிளகாய் | 350 | – | 260 |
| முருங்கைக்காய் | 1000 | – | - |
| போஞ்சி | 300 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 230 | – | 200 |
| கீரை - 1 பிடி | 50 | 25 | 50 |
| தேசிக்காய் | 100 | 60-70 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-60 | 35-45 |
| இராசவள்ளி | 140 | 140 | 140 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 237


டொறின் மன்மதநாயகம்




சுபா சுபாகரன்




சித்திரா சிறி




மயூரதன் மயூரன்




திலிபரன் தஜிகன்

பொண்டாட்டி கொடுமை அதிகமா இருக்குமோ!



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசியலில் தலையிடுமா இராணுவம்?



...ஆனால், முதன்முறையாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மூன்றாவது முறை போட்டியடுவதற்காக தடைகளை அகற்றுவதற்கு தேவையான நாடாளுமன்ற பெரும்பான்மையும் கிடைத்தது. அதற்காக போட்டியிடும் வாய்ப்பும் அவருக்கு கிடைத்துள்ளது.

இலங்கையில் தொடர்ச்சியாக ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக அதிகாரத்தை தக்கவைப்பதற்கான எத்தனிப்பில் ஈடுபட்டுள்ள முதல்லாவது அரச தலைவராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையே குறிப்பிடலாம். இதற்கு முன்னர், இத்தகைய வாய்ப்போ அல்லது சந்தர்ப்பமோ எந்தவொரு ஜனாதிபதிக்குமோ பிரதமருக்குமோ கிடைத்திருக்கவில்லை.

அதிகார எல்லை நீண்டு செல்லும்போது, அதனை தக்கவைப்பதற்கான முயற்சிகளும் இடம்பெறுவது வழக்கமும் வரலாறுமாகும். எனவே, வரையறை அற்ற பதவிக்காலத்துக்கு ஆட்சி புரியும் வாய்ப்பை பெற்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தத் தேர்தலில் தோல்வி அடைந்தால், அதிகாரத்தை சுமுகமாக கைமாற்றுவதற்கு இணங்குவாரா என்ற சந்தேகம் எழுந்தது. அரசியல் ரீதியாக மட்டுமன்றி, பாதுகாப்பு ரீதியாகவும் இந்தச் சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது.

போரை முடிவுக்கு கொண்டு வந்த பின்னர், இலங்கையின் பாதுகாப்புக் கட்டமைப்பு முற்றிலுமாக, அரசாங்கத்தின் முழுமையான கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டுள்ளது. ஜனநாயக கட்சித் தலைவர் சரத் பொன்சேகாவின் வெளியேற்றத்துக்கு பின்னர், மாற்றுக்கருத்துடைய அதிகாரிகள் களையெடுக்கப்பட்டு, முற்றிலும் அரச விசுவாசிகளான இராணுவ அதிகாரிகளால், இராணுவக் கட்டமைப்பு நிரப்பப்பட்டுள்ளது. முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதியும் பாதுகாப்புச் செயலர் என்ற வகையில் கோட்டாபய ராஜபக்ஷவும் படைகளை கட்டுப்படுத்தும் முழுமையான அதிகாரம் பெற்றவர்களாக விளங்குகின்றனர்.

போரில் வெற்றி பெறக் காரணமான அரசு என்ற நன்றிக்கடன், போர்க் குற்றச்சாட்டுகளிலிருந்து பாதுகாப்புத் தரும் அரசாங்கம் என்ற நம்பிக்கை உணர்வு, அரசாங்கத்தின் மீதுள்ள தீவிர விசுவாசம் எல்லாமே படையினரை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கு வாய்ப்பாக அமைந்துள்ள விடயங்கள் எனலாம்.

அதைவிட, இதற்கு முன்னர் இருந்த எந்தவொரு அரசாங்கத்துக்கும் இராணுவத்துக்குமிடையில் இந்தளவுக்கு நெருக்கமான நிலை இருந்ததெனக் கூறவும் முடியாது. கோத்தபாய ராஜபக்ஷவின் தலைமைத்துவம் மற்றும் அரசாங்கத்துக்கு சார்பாக மாற்றப்பட்டுவிட்ட படைக்கட்டமைப்பு எல்லாமே, இராணுவத் தளபதியே, வெளிப்படையாக படையினர் மத்தியில் ஜனாதிபதிக்காகவும் பாதுகாப்புச் செயலருக்காகவும் ஒவ்வொரு படைத்தளங்களாக சென்று பிரசாரம் செய்யும் அளவுக்கு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

முன்னெப்போதும் இருந்த அரசாங்கங்கள், படையினருக்கு இந்தளவுக்கு வசதிகளை செய்து கொடுத்திருக்கவில்லை என்று வெலிக்கந்தையில் தொடங்கி மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு என்று எல்லா பிரதான படைத்தளங்களிலும் அவர் பிரசாரங்களை முன்னெடுத்திருந்தார். இவ்வாறானதொரு நிலையில், அதிகார கைமாற்றத்துக்கு இராணுவம் எந்தளவுக்கு ஒத்துழைக்குமென்ற சந்தேகம் அதிகமாக இருந்துவருகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோல்வி அடைந்தால், இராணுவம் தலையிட்டு, அரசியல் குழப்பத்தை விளைவிக்க முனையலாம் என்ற அச்சம், எதிரணியினர் மத்தியிலும் உருவாகியுள்ளது. அண்மையில், இது பற்றி எதிரணியினர், ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளை அழைத்து ஆலோசனை நடத்தியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இலங்கையை பொறுத்த வரையில் ஜனநாயக அமைப்பு வலுவானதாகவே இருந்தாலும், இப்போதைய அரசியல், இராணுவச் சூழல் என்பது அரசியலில் இராணுவத் தலையீடு ஏற்படுவதற்கான வாய்ப்புகளை நிராகரிக்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இராணுவ ஆட்சி ஏற்படுவதையோ, இராணுவத் தலையீடு ஒன்று ஏற்பட்டால், அது நிலையானதாக நீடிப்பதையோ, பிராந்திய, சர்வதேச அதிகார சக்திகள் அனுமதிக்காது என்ற நம்பிக்கை உள்ளது.

என்றாலும், பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றால், சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்துக்கு படையினர் கொண்டுசெல்லப்படும் நிலை உருவாகும். வடக்கிலிருந்து 50 சதவீத இராணுவம் குறைக்கப்படும். உயர் பாதுகாப்பு வலயங்கள் சுருக்கப்படும். பாதுகாப்புச் செலவினம் 40 சதவீதத்தினால் குறைக்கப்படும் என்பன போன்ற இராணுவத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் நடந்தேறுமென்று அரச தரப்பு வலுவாக பிரசாரம் செய்துவருகிறது. இதுவொரு கட்டத்தில் அரசியலில் இராணுவம் தலையிடுவதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கான முயற்சியாக இருக்கலாமோ என்ற சந்தேகமும் நிலவுகிறது.

அரசியலில் இராணுவத்தின் தலையீட்டுக்கான வாய்ப்பு முற்றிலும் இல்லையென்றோ, அதற்கான முயற்சிகள் முன்னெப்போதும் இடம்பெறவில்லையென்றோ மறுத்துரைக்க முடியாது. 1962ஆம் ஆண்டு பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியை கவிழ்க்க இராணுவப் புரட்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அது ஆரம்பக்கட்டத்திலேயே தோற்கடிக்கப்பட்டது. 1987ஆம் ஆண்டு தனது ஆட்சியை கவிழ்க்க புரட்சி மேற்கொள்ளப்படவுள்ளதாக அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் கூறி, இந்தியப்படைகளை இலங்கைக்கு வரவழைத்ததாக, இந்திய வெளிவிவகார அமைச்சராக இருந்த நட்வர்சிங் தனது சுயசரிதையில் குறிப்பிட்டிருந்தார்.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கூட, அதிகாரத்தை கைப்பற்ற முயற்சி செய்ததாக சரத் பொன்சேகா மீது அரசாங்கம் குற்றஞ்சாட்டி அவரை சிறையில் அடைத்திருந்தது. எனவே, இலங்கை அரசியலில் இராணுவத் தலையீட்டுக்கான முயற்சிகள் முன்னெப்போதும் நிகழ்ந்திருக்கவில்லை என்று தெளிவாக மறுத்துரைக்க முடியாது. முன்னெப்போதையும் விட, இப்போது அதற்கான வாய்ப்புகளும் சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் அதற்கு சாதகமாக உள்ளன.

போர் ஒன்று நடந்துகொண்டிருக்கும்போது, அரசியலில் தலையீடு செய்யும் ஆர்வம் இராணுவத்துக்கு பெரும்பாலும் ஏற்படாது. போர் இல்லாத சூழலும் சர்வதேச அளவில் தமக்கு சாதகமற்ற நிலை ஏற்படுமோ என்ற அச்சமும் அளவுக்கு மிஞ்சியதாக பருத்துவிட்ட இராணுவ ஆளணிக் கட்டமைப்பும் இத்தகைய முயற்சிகளுக்கு சாதகமான விடயங்கள் என்பதை மறுக்கமுடியாது.

எவ்வாறாயினும், அரசியல் தூண்டுதல் ஏதுமில்லாமல், இராணுவத் தலையீடுகள் ஏற்பட வாய்ப்பில்லை. தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம், தோல்வியை சகித்துக்கொள்ளும். மனோநிலை எல்லா அரசியல் கட்சிகளிடமும் இருந்தாலே, ஜனநாயகம் வெற்றி பெறும். இல்லாவிட்டால், குழப்பங்கள் ஏற்படுவதுடன், ஜனநாயகத்தின் எதிர்காலமும் கேள்விக்குள்ளாகிவிடும்.

-சஞ்சயன்- (முற்றும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் நாட்காட்டி வெளிவந்தது

(கொழும்பு)

தமிழர் எழுத்துக்களைக் கொண்டு அமைக்கப்பட்ட நாட்காட்டி வெளி வந்துள்ளது. திருவள்ளுவர் ஆண்டு 2046 எதிர்வரும் தைத்திருநாளில் பிறக்கின்றது. இதனையே தமிழ்ப் புதுவருடமாகக் கொள்வோரும் உள்ளனர்.




தமிழ் மாதங்களான சுறவம், கும்பம், மீனம், மேழம், விடை, ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலை, நளி, சிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டும் தமிழுக்குத் தொண்டாற்றிய பெரியோர்களின் படங்களைத் தாங்கியும் இந்நாட்காட்டி வெளி வந்துள்ளது. கிளிநொச்சி ஜெயந்திநகரைச் சேர்ந்த நா.வை. மகேந்திரராசா என்ற மின்பொறியியலாளர் தமிழ் மீதுள்ள ஆர்வத்தினால் ஒவ்வோர் ஆண்டும் இந்நாட்காட்டியை வெளியிட்டு வருகின்றார்.

நாட்காட்டியைப் பெற விரும்புவோர் நா.வை: மகேந்திரராசா, இல. 84, ஜெயந்திநகர், கிளிநொச்சி என்ற முகவரியில் தொடர்பு கொள்ளமுடியும். அல்லது 077 6 203788 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (இ-5)

# பேருவளை தாக்குதல் குறித்து உடனடி நடவடிக்கை வேண்டும்

## சந்திரிகா கோரிக்கை



(கொழும்பு)

**பேருவளையில் கடந்த 26ஆம் திகதி தம்மை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் உடனடியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளார்.**

இது தொடர்பில் சந்திரிகாவின் சட்டத்தரணிகள், பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

பேருவளை சைனாபோட் என்ற இடத்தில் வைத்து சந்திரிகாவும் மேல்மாகாண சபை உறுப்பினர் ஹிருணிக்காவும் பங்கேற்ற நிகழ்வு ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

எனினும் குறித்த இடத்தில் நின்ற விசேட அதிரடிப்படை வீரர்கள் நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

அத்துடன் பேருவளை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டபோதும் அவர்களும் கலகக்காரர்களை அடக்க முயற்சிக்கவில்லை என்று சந்திரிகாவின் சட்டத்தரணிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். (இ-5)

# தேசிய அரசில் பங்குதாரராக சுதந்திரக்கட்சி தயாரில்லை

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அரசாங்கமொன்றின் பங்கு தாரராக தயாரில்லை என அந்தக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் இதனை தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவரும் தற்போது சென்று விட்டனர். இருப்பவர்கள் யாரும் அவருக்கு இனி ஆதரவு வழங்கமாட்டார்கள். நாங்கள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கே. ஆதரவு வழங்குவோம்.

சிறிசேன மற்றும் ரணில் விக்ரமசிங்கவின் நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்துழைப்பு வழங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் தயார் இல்லை என்பதை மிகவும் தெளிவாக கூறிக் கொள்கின்றேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் எதிர்க்கட்சியை அழித்து விட்டு தேசிய அரசாங்கத்திற்கு சென்ற கட்சி யல்ல. இரண்டு ஆண்டுகளுக்கு தேசிய அரசாங்கத்தை அமைப்பதாக ரணில் விக்ரமசிங்க கூறுகின்றார்.

நாங்கள் எமது அரசாங்கத்தை ஸ்தாபிப்போமே தவிர எந்தவொரு தேசிய அரசாங்கத்திலும் பங்குதாரர்களாகும் கொள்கை எமக்கு கிடையாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர் என்ற வகையில் கூறுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# தேர்தலை ஒத்தி வைக்குமாறு எந்த வேட்பாளரும் கோரவில்லை

## மேலதிக தேர்தல் ஆணையாளர்

தேர்தலை ஒத்தி வைக்குமாறு இதுவரையில் எந்த தரப்பினரும் கோரவில்லை என மேலதிக தேர்தல் ஆணையாளர் யு.அமரதாச தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை ஒத்தி வைக்க எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இதனால் வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதி வரையில் மேற்கொள்ளப்படவுள்ளது. தற்காலிக அடையாள அட்டை தயாரிக்கும் கால அவகாசமும் ஜனவரி மாதம் 3ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தபால்மா அதிபருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## ஒரு புத்திமதி

ஒரு மன்னர் தனது அமைச்சரை அழைத்துக்கொண்டு ஒருநாள் காட்டுக்குப் புறப்பட்டார்.

அக்காட்டிலே ஒரு முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் முன்னால் அரசன் போய் நின்று, "சுவாமி... என்னை ஆசீர்வதியுங்கள். எனக்கு ஏதாவது புத்திமதி சொல்லுங்கள்" என்று கேட்டார்.

முனிவர் அரசனை ஆசீர்வதித்தார். அதன் பின்னர் சொன்னார். "மகனே நீ! எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதைச் செய்வதற்கு முன்னர் ஒரு தடவை அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை நன்றாக யோசித்துப் பார். உன் மனதிற்கு "அது சரி! என்று தெரிந்தால் மட்டும் அதை நீ செய்ய வேண்டும்" என்றார்.

அரசர், முனிவர் கூறியதை அப்படியே மனதில் இருத்திக் கொண்டார். நூறு பொற்காசுகளை முனிவர் காலடியில் வைத்து விழுந்து வணங்கினார்.

அரசனின் செயலை அமைச்சர் அவதானித்து விட்டு "என்ன இது! நமது அரசர் இவ்வளவு ஏமாளியாக இருக்கிறாரே... ஒரு சாதாரண யோசனை கூறிய முனிவருக்கு மன்னர் பொற்காசுகளை கொடுத்து வணங்குகிறாரே" என்று நினைத்தார்.

இது அரசருக்குப் புரிந்துவிட்டது. இருந்தாலும் அதைப் பற்றி அமைச்சரிடம் அரசர் ஒன்று கேட்கவில்லை.

எல்லோரும் அரண்மனைக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

அதன்பின் அரசர் என்ன செய்தார் தெரியுமா?

காட்டில் முனிவர் கூறிய புத்திமதியை ஒரு கல்லில் கல்வெட்டாகச் செதுக்கினார். அதைத் தன் அறையிலே எல்லோரது கண்கள் அதில் படும்படி பதித்து வைத்தார்.

இப்போதும் அரசரின் செயலைக் கவனித்த அமைச்சர் "என்ன இது...? நம் மன்னரின் அறியாமையைப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே. இதைப்போய் கல்லில் செதுக்கி வைக்கவேண்டுமா? என்று நினைத்துக் கொண்டார்.

சில நாட்கள் கடந்தன. ஒருநாள் அந்த மன்னருக்குக் கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டது.

உடனே அவர் அரண்மனை வைத்தியரை அழைத்தார். வைத்தியர் வந்தார். அவர் மன்னரைச் சோதித்துப் பார்த்துவிட்டு "சிறிது நேரம் இப்படியே படுத்திருங்கள்... நான் எங்கள் வீட்டிற்குப் போய் மருந்து எடுத்து வருகிறேன் என்றுகூறிவிட்டு" விரைந்து சென்றார்.

வைத்தியர் வீட்டில் இருந்து மருந்து எடுத்து வரும் போது மன்னர் ஒரு கட்டிலில் கண்மூடித் தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது அரண்மனையிலே எவரும் இருக்கவில்லை.

வைத்தியர் மன்னரின் அறையினுள் நுழைந்தார். ஒரு சிறிய கோப்பையில் சிறிது மருந்தை ஊற்றினார். சுற்றும் முற்றும் பார்த்தார். ஏதோ ஒரு பொடியை மருந்தில் கலந்தார். கலந்து எடுத்துக் கொண்டு மன்னரை நெருங்கினார். சற்று யோசித்துவிட்டு திரும்பினார். கையில் இருந்த மருந்தைக் கீழே கொட்டி விட்டு வந்தார். அந்தக் கோப்பையை நன்றாகச் சுத்தம் செய்துவிட்டு மறுபடியும் சிறிது மருந்தை ஊற்றி எடுத்துக்கொண்டு வந்து "மன்னா!" என்று மெதுவாக அழைத்தார்.

மன்னர் எழுந்து, "வைத்தியரே! நான் கண்களை மூடிக்கொண்டிருந்தாலும் அவ்வப்போது நீங்கள் செய்ததைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். முதலில் எதையோ கலந்தீர்கள்... பின்னர் அதைக்கீழே கொட்டிவிட்டு இப்போது வேறு கொண்டு வருகிறீர்கள்... என்ன விடயம்? உண்மையைச் சொல்லுங்கள்" என்று மிரட்டினார்.

வைத்தியர் அப்படியே மன்னரின் காலில் பொத்தென்று விழுந்தார். உண்மையைச் சொன்னார்.

"மகாராஜா... உங்களுடைய படைத்தளபதி உங்களைக் கொல்ல சதி செய்தார். அவர் என்னிடம் விஷம் கலந்து கொடுக்கச் சொன்னார். அதன் பொருட்டு அவர் எனக்கு நிறைய வெகுமதி தருவதாகக் கூறினார். நானும் சம்மதப்பட்டு இங்கே வந்தேன். அவர் கொடுத்த விஷப்பொடியை மருந்தில் கலந்தேன். அதையெடுத்துக்கொண்டு உங்களிடம் வந்தபோது அறையில் மாட்டியிருந்த வாசகத்தை வாசித்தேன். அது என்னை யோசிக்க வைத்தது. நான் செய்யும் செயலால் என் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்பதைப் புரிந்து கொண்டேன். அதனால் அதைக் கொட்டிவிட்டு வேறு மருந்து ஊற்றி வந்துள்ளேன் என்று கூறினார்.

இப்போது அந்த மன்னர் அமைச்சரை அழைத்து "பார்த்தீர்களா... இந்தப் புத்திமதியை அன்று நீங்கள் அலட்சியமாக நினைத்தீர்கள். இன்றைக்கு அதுதான் என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது" என்றார் மன்னர். அமைச்சர் தலையைக் குனிந்து கொண்டார்.

அதனால்... பெரியவர்கள் நமக்குச் சொல்லும் புத்திமதி ஆரம்பத்தில் சாதாரணமாகத்தான் தெரியும். அதற்காக நாம் அதை அலட்சியம் செய்யக்கூடாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலசந்தரின் கலை கலையப்போவது இல்லை!



வடுகபட்டியில் என் கால்சட்டை நாட்களில் எனக்கு ஒரு கனவு இருந்தது. கலைஞர், எம்.ஜி.ஆர்- சிவாஜி, பி.சுசீலா, கே.பாலசந்தர் என்ற ஆளுமைகளைச் சந்திக்க வேண்டும் என்பதே அந்தக்கனவு. ஆனால், என் கனவுக்குரிய பாலசந்தர் என்னைச் சந்திக்க தொலைபேசியில் அழைப்பார் என்று நான் நினைக்கவில்லை. கமல்ஹாசனின் ராஜபார்வையில் அந்தி மழை எழுதப்பட்ட நேரம்... புதிய திரைமொழியோடு ஒரு கவிஞன் தமிழ் சினிமாவுக்குள் புகுந்திருக்கிறான் என்ற செய்தியை பாலசந்தருக்குச் சொல்லியிருக்கிறார் கமல்ஹாசன். அப்போது சொந்தமாக தொலைபேசியோ, வாகனமோ இல்லாத வாழ்க்கை வாழ்ந்து வந்த எனக்கு மாடி வீட்டுத் தொலைபேசியிலிருந்து ஓர் அழைப்பு வந்தது. உங்களுக்கு ஒருபோன்; உடனே வாருங்கள் என்று. நான் சென்று எடுத்தால் எதிர்முனைக்குரல் நான் பாலசந்தர் பேசுறேன் என்றது. நான் நெகிழ்ந்தே போனேன். நாளை என் வீட்டுக்கு வந்து சந்திக்க முடியுமா என்று கேட்டார். மகிழ்ச்சியோடு வருகிறேன் என்றேன். மறுநாள் காலையில் சாலையில் வந்து பார்த்தால் சென்னையில் முழு அடைப்பு. எந்த வாகனமும் ஓடவில்லை. ட்ரஸ்ட்புரத்திலிருந்து மயிலாப்பூர் வாரன் சாலைக்கு 35 நிமிடத்தில் நடந்துசென்றேன். வியர்வையோடு என்னைப் பார்த்த பாலசந்தர் வியந்து போனார். பாட்டெழுத வாய்ப்பு வரும் என்று போனால் வசனம் எழுத வாய்ப்பு தந்தார் பாலசந்தர்.

பாரதியார் வரலாற்றைப் படமாக்கப் போறேன். கமல்ஹாசன் தான் பாரதியார். நீங்கள் வசனம் எழுத வேண்டும் என்றார். அச்சத்தோடு ஒப்புக்கொண்டேன். பாரதியார் குறித்த 300 நூல்கள் திரட்டி இரவு - பகல் குறிப்பெடுத்தேன். ஆனால், அந்தப் படம் தயாராகவில்லை. அப்போது முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர்., பாரதியார் படத்தை அரசே தயாரிக்கும் என்ற அறிவிப்பை வெளியிட்டிருந்தார். அந்த அறிவிப்பில் பாலசந்தர் சோர்ந்து போனார். பின்னாளில் புதுக்கவிதையில் பாரதியாரின் சரிதை **கவிராஜன் கதை**யாக என்னால் எழுதப்பட்டதற்கு இயக்குநர் சிகரமே முழுமுதற் காரணம். அவர் மகாரசிகர். குழந்தையை **இடுப்பிலுள்ள நந்தவனம்** என்று தண்ணீர் தண்ணீர் படத்துக்கு நான் எழுதியதை திரையுலகில் அவர் சொல்லாத ஆளில்லை. திருத்தம் சொன்னாலும் அது நெற்றிக்குப் பொட்டு வைத்தது மாதிரி நேர்த்தியாக இருக்கும். சிந்து பைரவியில்-

கவல ஏதுமில்ல
ரசிக்கும் மேட்டுக்குடி
சேரிக்கும் சேர வேணும்
அதுக்கும் பாட்டுப்படி
எண்ணியே பாரு
எத்தன பேரு
தங்கமே நீயும்

தமிழ்பாட்டுப் பாடு- என்று எழுதியிருந்தேன். ஒற்றெழுத்தை அவர் ம் என்று மாற்றினார். தமிழ்ப்பாட்டும் பாடு என்று வருகிறபோது அது இரண்டு மொழிப் பாடல்களுக்கும் கட்டப்பட்ட பாலமாகிவிட்டது. அவர் தொழில்நுட்பக் கலைஞர் மட்டுமல்ல; தமிழ் நுட்பக் கலைஞர்.



அவர் கற்றுக்கொண்டேயிருந்தார். தன்னைப் புதுப்பித்துக்கொண்டேயிருந்தார். தெரியாத செய்திகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ள அவர் தயங்கியதேயில்லை. அச்சமில்லை அச்சமில்லை படத்திற்கு **ஆவாரம் பூவு** என்று ஒரு பாட்டு எழுதியிருந்தேன். ஆவாரம் பூ என்றால் என்ற என்று கேட்டார். அது குறித்த விவரங்களையெல்லாம் விளக்கினேன். படம் பார்க்கும்போது பார்த்தால் ஒரு கயிற்றுப் பாலத்தில் வண்டி வண்டியாகக் கொண்டு வந்த ஆவாரம் பூக்களைக் கொட்டி நிரப்பியிருந்தார். பாட்டு வரிகளுக்கு உயிர் கொடுக்க வேண்டுமென்பதில் அதிக அக்கறையுள்ளவர். புன்னகை மன்னன் படத்தில் **என்ன சத்தம் இந்த நேரம்** பாட்டில் **ஆரிரரோ யார் இவரோ?** என்ற வரியை படமாக்கும்போதும் கேமராவையே தூளிகட்டி ஆடவிட்டிருப்பார்.

பாலசந்தர் அவர்களுக்கு என் திரை வாழ்க்கை நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. இன்றைய நிலையில் வெற்றி தோல்வி என்று எது வந்தாலும் அதை சமமாக ஏற்றுக்கொள்ளும பக்குவத்தைக் காலம் கொடுத்திருக்கிறது. இனி பெறப் போகும் எதுவும் வெற்றியுமில்லை; அடையப்போவது எதுவும் தோல்வியும் இல்லை. ஆனால், 90களில் நான் தோற்றுப்போய் விட்டதாக துவண்டு கிடந்தேன். 92 இல் ஒரே ஆண்டில் பாலசந்தரின் கவிதாலயா மூன்று படங்களைத் தயாரித்தது. **வானமே எல்லை- அண்ணாமலை- ரோஜா.** மூன்று படங்களுக்கும் இயக்குநர்கள் வேறு, இசையமைப்பாளர்கள் வேறு, நடிகர்கள் வேறு. ஆனால், பாடலாசிரியர் மட்டும் ஒருவன் வைரமுத்து என்று எனக்குப் பெரு வாய்ப்பு வழங்கியிருந்தார் பாலசந்தர். அந்த மூன்று படங்களுக்கும் என் உயிர் மூச்சையே ஊற்று எழுதினேன். மூன்றும் வெற்றி பெற்றன. நான் இன்று வரைக்கும் தொடரும் என் பாட்டுப்பாதை அவர் போட்டுக் கொடுத்தது.

கமல் மீது காதல் அவருக்கு. தன்னை விட்டு வளர்ந்து வெகுதூரம் போய்விட்டதில் ஒரு சின்ன ஆதங்கமும் அவருக்கிருந்தது. அவன் நாத்திகனாகவே இருக்கட்டும்; அதை ஏன் வெளியே சொல்லி அலைகிறான் என்று என்னிடம் அவரைச் செல்லமாகக் கோபித்ததுண்டு. அவர் கூப்பிட்டு வயலும் வாழ்வும் எடுத்தாலும் நான் நடிப்பேன்; அவர் மீது நான்கொண்ட பக்தி அப்படி யென்று கமலும் என்னிடம் மனம் திறந்தார்.

ரஜினியை எப்படித் தேர்வு செய்தீர்கள் என்று அவரிடம் ஆர்வமாக நான் கேட்டிருக்கிறேன். **கனவு மிதக்கும் அந்தக் கண்கள்.... கலகம் செய்யும் கண்கள்...** அதுதான் ரஜினியை நான் தேர்வு செய்யக் காரணம் என்று பலமுறை சொல்லியிருக்கிறார். எங்கள் வாழ்வுக்குப் பக்கத்திலேயே வரமாக வந்த மாபெரும் கலைஞன் மறைந்து விட்டார் என்ற செய்தி இதயத்தை உடைத் தெறிந்துவிட்டது.சில மரணங்கள் வெறும் செய்திகள். சில மரணங்கள் வாழ்வின் கடைசிச் சம்பவங்கள்.

ஆனால், என்னைப் பொறுத்தவரையில் பாலசந்தரின் மறைவு என்பது என் தகப்பன் இரண்டாம்முறை இறந்து போனது போல் துக்கமானது. அன்று மாலை பாலசந்தர் இல்லத்தில் அவரது பூத உடலுக்குப் பக்கத்தில் ரஜினியும் நானும் கவிதாலயா நடராஜனும், இயக்குநர் எஸ்.பி.முத்துராமனும், மகன் மதன் கார்க்கியும் இரண்டு மணி நேரங்களுக்கு மேல் அமர்ந்து துக்கம் பேசிக்கொண்டிருந்தோம்.

மறுநாள் பெசன்ட் நகர் மின்மயானத்துக்கு வந்துவிட்டார் ரஜினி. மயான மேடைக்கு அருகே ரஜினியும் நானும் தங்கை ஐஸ்வர்யாவும் சோகம் கப்பிப் போய் சுவரில் சாய்ந்து நின்று கொண்டிருந்தபோது திடீரென்று ரஜினி என்னைப் பார்த்துக்கேட்டார்: சாருக்கு நான் வாய்க்கரிசிபோடவேண்டுமே. நான் சம்பந்தப்பட்ட ஒரு நண்பரை அழைத்து அதற்கு ஏற்பாடு செய்து ரஜினியை வெளியே அனுப்பி வைத்தேன். இயக்குநர் சிகரத்துக்கு வாய்க்கரிசி போட்டு விட்டு மீண்டும் எங்களை வந்தடைந்தார். ஒரு தகப்பனாருக்குமகன்செய்ய வேண்டிய கடைசி மரியாதையை செய்துவிட்ட நிறைவோடு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார்.



பாலசந்தர் மார்பின் மீது கற்பூரம் கொளுத்தப் பட்டது. அது கொளுந்து விட்டு குபுகுபுவென்று எரிந்தது. அந்த நெஞ்சில் எரிந்த 60 வருட அக்கினிதானே தமிழ் சினிமாவைப் புடம் போட்டுக்கொடுத்தது. அந்தக் கற்பூரத் தீ அணைந்து விடலாம். அந்தக் கலைத் தீ அணையுமா? என்று கருதிக்கொண்டு கண்களில் நீர் முட்ட நின்றபோது... தடக்கென்ற சப்தத்தோடு உள் எரிவாயில் சென்று விழுந்தது பாலசந்தரின் உடல். உடனே திரை விழுந்தது; இரும்புத்திரை. கனத்த நெஞ்சோடு கலங்கிய கண்களோடு கலைந்தோம். பாலசந்தரின் கலை கலையப் போவது இல்லை.

-ஜூனியர் விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம் வீழ்ந்து கல்வீரன்குளம் சேதம்

## மக்கள் அச்சம்



(குருமன்காடு)

வவுனியா பெரிய கோமரசன்குளம் பகுதியில் அமைந்துள்ள கல்வீரன்குளம் உடைப்பெடுக்கும் நிலையில் காணப்படுவதாக அப்பகுதி மக்களால் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

கல்வீரன்குளம் சேதமடைந்து உடைப்பெடுக்கும் தறுவாயிலுள்ளது. இக்குளத்திற்கு அருகில் இருந்து வந்த சுமார் 50 வருடங்கள் பழைமை வாய்ந்த ஆலமரம் ஒன்று நேற்று முன்தினம் அதிகாலை அடியோடு சாய்ந்து குளத்தினுள் விழுந்துள்ளது.

இதனால் அதன் கட்டுக்கள் உடைந்து சேதமடைந்து காணப்படுகின்றன. இதனையடுத்து குளம் உடைப்பெடுக்கும் அபாய நிலையை எட்டியுள்ளது.

நீண்டகாலமாக இக் குளம் புனரமைக்கப்படாமல் இருந்தமை தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வந்த போதிலும் புனரமைப்ப தற்கான எவ்வித நடவடிக்கை யும் மேற்கொள்ளப்படவி ல்லை என பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளைஏனையபகுதிகளில் உள்ள குளங்கள் புனரமைக்கப்பட்ட போதிலும் இக்குளம் புனரமைக்கப்படாது இருப்பது ஏன் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். அத்துடன் இக்குளம் உடை ப்பெடுக்குமா, யின் குளப் பகுதிக்கு கீழ் வசிக்கும் 75 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்படுவதுடன் விவசாய நிலங்களினுள் நீர் வழிந்தோடி பாதிப்பை ஏற்படுத்துமென அப்பகுதி விவசாய குடும்பங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி குளத்தில் ஏற்பட்டுள்ள அசம்பாவித நிலையை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவதற்காக விவசாய திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர்கள் மேற்படி பகுதிக்கு சென்று பார்வையிட்டுள்ளனர்.

எனவே துரிதகதியில் இக்குள புனரமைப்பு பணியினை மேற்கொள்ள உரிய அதிகாரிகள் நடவடிக்கைஎடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-250)

# மாங்குளம் பொதுச் சந்தைக்கான வேலைகள் விரைவில் நிறைவடையும்

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை செயலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மாங்குளம பொதுச்சந்தையின் கட்டுமானப் பணிகள் நெல்சிப் திட்டத்தின் 55 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருவதாக, புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் எஸ்.மிதிலைநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்.

இக் கட்டுமானப்பணிகள் எதிர்வரும் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிவடையும். புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழுள்ள இந்த சந்தையின் கட்டடங்கள் இறுதி யுத்தத்தில் முற்றாக அழிவடைந்தன. மாங்குளம் பகுதியில் 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மீள் குடியேறுவதற்கு அனுமதியளிக்கப்பட்டதையடுத்து, பெருமளவு மக்கள் மீளக்குடியேறினர். இதனையடுத்து மாங்குளம் பொதுச்சந்தை தற்காலிக கொட்டகையில் இயங்கியது. சந்தைக் கட்டடங்கள் இன்மையால் தாங்கள பெருமளவு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும், இத னால் சந்தை கட்டடத்தை அமைத்துத்தரும்படி அப்பகுதி வர்த்தகர்களும் பொதுமக்களும் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்தனர். கோரிக்கையின் அடிப்படையில் நெல்சிப் திட்டத்தின கீழ் 2011ஆம் ஆண்டு 55 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கேள்வி அறிவித்தல் மூலம் கட்டுமான ஒப்பந்தக்காரர்கள் 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தெரிவு செய்யபட்டு, கட்டுமானம் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாண்டு மார்ச் மாதம் முதல் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. எதர்வரும் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம முடிவடையும் என பிரதேச சபைச்செயலாளர மேலும் தெரிவித்தார். (2)

# ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நுளம்புவலை, கூடை வழங்கப்பட்டன

(கண்டாவளை)

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையாலும் வெள்ளத்தினாலும் மக்கள் இடம் பெயர்ந்து பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் கண்டாவளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நாதன் குடியிருப்பில் வசிக்கும் 147 குடும்பங்களைச் சேர்ந்த 600 அங்கத்தவர்கள் இடம் பெயர்ந்து விசுவமடு தென்னிந்திய திருச்சபை தேவாலயத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவர்களுக்கான அடிப்படைஉதவிகள்,மூன்றுவேளையும் சமைத்த உணவுகள் ஆகியவற்றை கண்டாவளை பிரதேச செயலக அனர்த்த பிரிவினர் வழங்கி வருகின்றனர்.

இதே வேளை ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு மருத்துவத் தாதியர்களினால் நுளம்புவலை, கூடை என்பன வழங்கப்பட்டுள்ளதுடன் தினமும் அவர்கள் வருகை தந்து குழந்தைகளின் உடல் நலம் குறித்து பார்வையிட்டு வருவதோடு ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

அத்துடன் தங்கியுள்ள குடும்பங்களுக்கு தறப்பாள்களும் மற்றும் இதர பொருட்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)




# அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு 10மில்.ரூபா நிதியுதவி

(கிளிநொச்சி-1)

அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் கிளிநொச்சி மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கு 10 மில்லியன் ரூபா நிதியுதவி கிடைக்கப் பெற்றுள்ளதாக அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் குகதாசன் சுகுணதாஸ் தெரிவித்துள்ளார்.

இந்நிதியுதவியானது கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக வழங்கப்பட்டுள்ளது.

இதனூடாக பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்களுக்கு மூன்று வேளையும் சமைத்த உணவு, உலர் உணவுப் பொருட்கள், அவசர உணவல்லாத பொருட்கள் வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் தேவைப்படுவதால் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்திருப்பதாக அவர் கூறினார்.

அத்துடன் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிலவிரிப்புக்கள், தறப்பாள்கள் ஆகியவை உடனடியாகத் தேவைப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதியிலிருந்து உடனடியாக அனர்த்தத்தினால் ஏற்படும் இடர்பாடுகளைத் தணிப்பதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகஅவர்கூறினார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளப்பாதிப்பினால் 5 ஆயிரத்து 716 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-277)

# மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தொண்டு நிறுவனங்கள் முன்வரவேண்டும்

மழை காரணமாக மன்னாரில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தொண்டு நிறுவனங்கள் முன்வரவேண்டும் என்று வடமாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர்மேலும்தெரிவிக்கையில்,


மன்னாரில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக 5 பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்த 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் 15 தற்காலிக நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் போதுமானதாக இல்லை. தொண்டு நிறுவனங்களிடம் உதவி செய்யுமாறு கேட்டுள்ளோம்.

வரப் போகும் புதுவருடத்தை துன்பமின்றி வரவேற்க அனைவரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய முன் வரவேண்டும் என அவர் தெரிவித்தார். (2)

# கடின முயற்சியுடன் கற்றால் கல்வியில் சாதனை படைக்க முடியும்

## விஞ்ஞானப் பிரிவில் வவுனியாவில் முதலிடம் பெற்ற மாணவன்



(குருமன்காடு)


எனது கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்கள் என்னை விட சிறந்த பெறுபேறுகளை பெற வேண்டும். இதுவே எனது ஆசை என வடமாகாணத்தில் முதலிடம் பெற்றவரும் வவுனியா மாவட்டத்தில் விஞ்ஞானப்பிரிவில் முதலிடம் பெற்றவருமான வவுனியா தமிழ் மத்தியமகாவித்தியாலய மாணவன் சிவசுப்பிரமணியம் மேகலாதரன் தெரிவித்தார். தனது பரீட்சை சித்தி குறித்த அவர் விபரிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், கடின முயற்சியுடன் கல்வி கற்பதன் மூலம் யாரும் கல்வியில் சாதனை படைக்க முடியும். எனது பரீட்சை சித்தி குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

நான் இந்தநிலையை அடைவதற்கு எனக்கு வழிகாட்டிய எனது பெற்றோர், பாடசாலை சமூகம், எனது வகுப்பாசிரியர், கற்பித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். எதிர்வரும் காலத்தில் எமது பாடசாலை இதை விட சிறந்த பெறுபேறுகளைப் பெற்று முன்னணியில் வரவேண்டும். இதுவே எனது ஆசையாகவுள்ளது எனத் தெரிவித்தார். (2-250)

# வைத்தியராக வரவேண்டும் எனது விருப்பமும் அதுவே

## விஞ்ஞானப் பிரிவில் வவுனியாவில் இரண்டாம் இடம் வந்த மாணவன்



(குருமன்காடு)

எதிர்காலத்தில் வைத்தியராக வந்து வவுனியா சமூகத்திற்கு பணிபுரிய வேண்டும் என்பதே எனது ஆசை என வடமாகாணத்தில் விஞ்ஞானப் பிரிவில் இரண்டாம் நிலையும் வவுனியா மாவட்டத்தில் இரண்டாம் நிலைபெற்ற வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் பத்மநாதன் வைஷ்ணவன் தெரிவித்தார்.

மாகாண மற்றும் மாவட்ட ரீதியில் உயர்ந்த பெறுபேற்றை பெற்றமையையிட்டு மகிழ்ச்சி கொள்கின்றேன்.

இதைவிட எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த பாடசாலை சமூகத்திற்கும் எனது நன்றிகள். எனது வகுப்பாசிரியர், ஆசிரியர்கள் எமக்கு நல்ல வழிகாட்டியாக இருந்தார்கள்.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் எமக்கு உறுதுணையாக இருந்தார்கள். என்னில் பலர் நம்பிக்கை வைத்திருந்தார்கள். அவர்களுக்கும் எனது நன்றிகள்.

எதிர்காலத்தில் எமது பாடசாலை இதே மாதிரி சிறந்த பெறுபேறுகளை பெற வேண்டுமெனத் தெரிவித்தார். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடாமுயற்சியுடன் கல்வி கற்றால் நினைத்த இலக்கை அடைய முடியும்

## வர்த்தகப் பிரிவில் முல்லைத்தீவில் முதலிடம் பெற்ற மாணவி தெரிவிப்பு



(முள்ளியவளை)

விடாமுயற்சியுடன் முழுக் கவனத்தையும் கல்வி கற்றலில் செலுத்தி கற்றால் நாம் நினைத்த இலக்கினை அடைய முடியும் என முல்லைத்தீவு மாவட்டத்தில் வர்த்தகப் பிரிவில் முதலிடம் பெற்ற முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவி சண்முகம் வேணுஜா தெரிவித்தார்.

எதிர்காலத்தில் கணக்காளராகி சேவையாற்றுவதே எனது விருப்பமாகும்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் எனது குடும்பத்தின் நிலையைக்கருத்தில்கொண்டே கல்வியை இடைவிலகாமல் தொடர்ந்து கற்றேன்.

இதனால் சிறந்த பெறுபேற்றை அடைய முடிந்தது.

அத்துடன் அதிபர், ஆசிரியர், பெற்றோரின் ஊக்கமும் விடாமுயற்சியுமே என்னை இன்று இந்த நிலைக்கு கொண்டு வந்தது.

அன்று படிப்பதனை அன்றே படித்து படித்தவற்றை நினைவில் நிறுத்திக் கொள்ளவேண்டுமென்றே எதிர்கால மாணவர்களுக்கு சொல்ல விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (2-300)

# சர்வதேச கண்காணிப்பாளர்கள் தேர்தல் பணிகளை ஆரம்பிப்பர்

## பவ்ரல் தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்கும் நடவடிக்கைகளை சர்வதேச கண்காணிப்பாளர்கள் ஆரம்பிக்கவுள்ளனர். ஆசிய நாடுகளைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பாளர்கள் நேற்று முதல் தேர்தல் கண்காணிப்பு பணிகளை ஆரம்பித்துள்ளனர் என பவ்ரல் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித் துள்ளது. ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பை சேர்ந்த 36 தேர்தல் கண்காணிப்பாளர்களை அழைத்துள்ளதாகவும் அவர்கள் இலங்கை வந்துசேர்ந்துள்ளனர் எனவும் பவ்ரல் தெரிவித்துள்ளது. அவர்களுக்கு இலங்கை நிலவரங்கள் தொடர்பாக விசேட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. தேர்தல் ஆணையாளருடனான அனுமதியுடன் அழைக்கப்பட்டுள்ள ஆசிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் வாக்களிப்புக்குப் பிந்திய நிலவரத்தையும் கண்காணிக்கவுள்ளனர். அதேவேளை பொது நலவாய தேர்தல் கண்காணிப்பாளர்களையும் தேர்தல் ஆணையாளர் அழைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ)

## ஈழத்து சிதம்பர தரிசனம்

### பரவசத்தில் சிவன் புகழை பாடும் நெஞ்சம்

தோடுடைய தேவனவன் தனக்குத் தோழன்
சுந்தரரைத் தேர்வு செய்த செய்கை கண்டும்
நாடுமென தேவாசிரிய மண்டபமே யேகி
நற்றொண்டர் பெருமையெலாம் நயந்து பாட
ஏடெடுத்து சிவபெருமான் கொடுத்த செய்கை
இனியவராம் சிவனடியார் பெருமை காட்டும்
பாடுகின்ற கவியுளத்தில் பதியும் போது
பரவசத்தில் சிவன்புகழை பாடும் நெஞ்சம்.

(சி-9611) -மதுரகவி. காரை. எம்.பி.அருளானந்தன்-

இன்று (2014.12.31) ஈழத்து சிதம்பரத்தில் (காரைநகர் சிவன்கோவில்) திருவெம்பாவை 5ஆம் நாள்

## சேவிஸ் வேலையாள் தேவை

வாகன சேவிஸ் வேலை தெரிந்தவர்களும் பழக விரும்புபவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 077 724 8424 (8894)

## வேலை வாய்ப்பு

இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள். புதுவருடத்தில் வளமான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள எதிர்பார்ப்பவரா நீங்கள்? உங்களுடைய எதிர்கால சவால்களுக்கு வழிகாட்ட அருமையான தொழில் வாய்ப்புக்கள். யாழ்., வவுனியா, கொழும்பு, பியகம, நாரம்பிட்டிய, கொட்டாவ, நிட்டம்புவ, வத்தளை போன்ற பல பிரதேசங்களில் ஜேம்/ பிஸ்கட்/ கோடியல்/ கிளவுஸ்/ சொக்லெட்/ பால்மா போன்றவற்றில் உற்பத்தி/ லேபல் பொதியிடல் பிரிவுகளுக்கு ஆட்கள் உடனடியாக தேவை. வயது- 18-55 ஆண், பெண், உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில். தனியாகவோ குழுக்களாகவோ இணைந்து கொள்ளலாம். கல்வி அறிவு உள்ள, அற்ற அனைவருக்கும் வேலைவாய்ப்பு.

077 111 6770/ 077 683 8231 (சி-9655 )

# நானாவித அறிவித்தல்கள்

## யாழ்ப்பாண மாநகரசபை

### 2015 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அத்தியாயத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் யாழ்ப்பாண மாநகரசபை பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளமை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

1. மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம், 247 ஆம் பிரிவுகளின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீடுகளின் படியான ஆதன மதிப்பீட்டையே 2015 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி மதிப்பீடாக நடைமுறைப்படுத்தப் படும்.

2.2015 ஆம் ஆண்டிற்கான வீதவரிப்பணங்கள் யாவும் நான்கு சமகந்தாயத் தவணைகளில் 2015 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்டெம்பர் 30, டிசெம்பர் 31 ஆகிய திகதிகளன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

3. 2015 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ வருடாந்த வீதவரிகள் முழுமையாக செலுத்தப்பட்டால் 10 வீத வரிக்கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் வீதவரி வருமதியாகவுள்ள அந்தக்கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாகக் கந்தாயவரி செலுத்தப்பட்டால் 5% கழிவும் அனுமதிக்கப்படும்.

4. மேற்குறிப்பிட்ட பந்தி 3இல் குறிப்பிட்ட உரிய திகதிகளிற்கு முன்பு குறித்த வீதவரிகளைச் செலுத்தப்படாதவிடத்து வெறும் காணிகளில் மற்றும் வதிவிடங்கள் மீது 15% இலும் ஏனைய இடங்களின் மீது 20% இலும் விறாந்துச் செலவு அறவிடப்படும்.

5.2015 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. கிடைக்காதவர்கள் மாநகர ஆதனவரிப்பகுதியில் நேரடியாக வந்து தமது ஆதனவிபரங்களைத் தெரிவித்து 2015 ஆம் ஆண்டிற்கான ஆதனவரிகளைச் செலுத்த முடியும் என்பதோடு மேற்குறித்த சலுகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

திரு.செ.பிரணவநாதன்
ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்
26.12.2014 (சி-9656 )


# சாதனை உலகில் தொடர்ந்தும் தடம்பதித்து வரும் ஞானோதய அக்கடமி

சங்கத்தானை, சாவகச்சேரி

வெளியாகிய A/L 2014 பரீட்சை பெறுபேறுகளில் சாதனையின் சிகரங்களை தொட்ட



செல்வன் S.துஷாந்தன் (3A) மாவட்ட நிலை 01



செல்வி T. தர்சிகா (3A) மாவட்ட நிலை 05



செல்வி S. வினுஜா (3A) மாவட்ட நிலை 43

உட்பட மாவட்ட ரீதியில் முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியுள்ள 25 இற்கும் மேற்பட்ட எமது மாணவச் செல்வங்களையும் அவர்களுக்கு சாதனையின் இலக்கினை அடைய வழிகாட்டிய அதிதிறமையும் அனுபவமும் வாய்ந்த ஆசான்களையும் மனம் நெகிழ வாழ்த்தி
அதேபோல் நீங்களும் சரித்திரம்படைத்திட
ஆரம்பமாகிறது.

**A/L 2017**

## கலை, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகள்

யாழ். மாவட்டத்தில் அனுபவமும் திறமையும் வாய்ந்த பிரபல ஆசான்களின் வழிகாட்டலில்,

**கலைப்பிரிவு**

தமிழ்- திரு.முகுந்தன் (B.A)
புவியியல்- திரு. செந்தூரன் (B.A)
வரலாறு- திரு.விஜயரூபன் (விக்கி) (B.A)
அரசியல் விஞ்ஞானம்- திரு.சந்துரு (B.A)
இந்து நாகரிகம் / இந்து சமயம் } திரு.செல்வா (B.A)
நாடகமும் அரங்கியலும்- திரு.றஜித்குமார் (B.A)
ICT.- திரு.பிரஜீவ் (BSc)
விவசாய விஞ்ஞானம்- திரு.விக்கி (BSc)
சித்திரம்- திரு.சுதர்சன் (B.F.A.)
General English- Mr.K.Nishanthan (Dip.in.Eng.

**வர்த்தகப் பிரிவு**

கணக்கீடு-திரு.புஸ்பாகரன் (B.B.A.Fm Special) (வடமராட்சி பிரபல ஆசிரியர்)
பொருளியல்-திரு.M.C.சுதாகரன் (B.Com) (யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர்)
திரு. விஜயகுமார் (B.Com) (வடமராட்சி பிரபல ஆசிரியர்)
வணிகக் கல்வி- திரு. கிருஷ்ணகுமார் (B.Com) (பிரபல ஆசிரியர், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி)
ICT.- திரு. பிரஜீவ் (BSc)

**குறிப்பு- மேற்படி வர்த்தகப்பிரிவு ஆசிரியர்களிடம் கற்ற மாணவர்கள் மாவட்ட நிலை 05 உட்பட முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.**

## தொழில்நுட்ப பிரிவிற்கென உதயமாகிறது ஓர் தனியான பிரிவு

செயன்முறையுடன் கூடிய கற்பித்தல் வசதிகளும் பல்லூடக வசதியும் (Multimedia) கொண்டதுமான

## "Technology Park"

### (தொழில்நுட்பப் பூங்கா)

நீங்கள் நன்கு அறிந்த யாழ். மாவட்ட அனுபவமும் திறமையும் வாய்ந்த பிரபல ஆசிரியர்களின் வழிகாட்டலில்

Science For Technology:- திரு.பவான் (BSc)
திரு. ஐங்கரன் (BSc)
திரு. ராம் (BSc)
Bio System Technology:- திரு. பவான் (BSc)
Engineering Technology:- திரு. ஜெனா (BSc)
திரு. கனேசபாலினா (BSc) (உங்கள் பிரபல ஆசிரியர்)

**குறிப்பு:- மேற்படி பிரிவில் ஒவ்வொரு மாணவனிலும் தனிப்பட்ட கவனமும் மாதாந்த பரீட்சைகள் செய்முறைப் பயிற்சிகள் மற்றும் அச்சடித்த பாடக் குறிப்புக்களும் வழங்கப்படும்.**

கலை , வர்த்தகம் **A/L DAY CLASS**


மேற்குறித்த பிரிவுகளுக்கான வகுப்புக்கள் அனைத்தும்
ஆரம்பம்:- 03.01.2015 (சனி காலை 9.00)
(அனுமதிகள் வழங்கப்படுகிறது)
"புத்திசாதுரியமான மாணவச் செல்வங்களின் மதி நுட்பமான தெரிவு ஞானோதய அக்கடமி" (9004)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுழிபுரம்- பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானம்

# "மனித சக்தியை ஆட்டிப்படைப்பது தெய்வீக சக்தி"






வட கிழக்கு நுழைவாயில்



தெற்கு நுழைவாயில்



மத நல்லிணக்க கோபுரம்

என் இனிய நெஞ்சங்களே!

**24 ஆண்டுகள் ஐயாவின் ஆன்மீகப் போராட்டப் பாதையிலே... ஓர் கண்ணோட்டம்**

இங்கே காட்டப்பட்டுள்ள படங்கள் எனது ஆன்மீகப் போராட்ட சமாதான வடிவத்தின் செயற்பாட்டு வெளிப்பாடுகள் ஆகும். இவை யாவும் ஈசுரவிநாயகரின் திருவருளால் அடியேனால் நிர்மாணிக்கப் பட்டவை என்பதை அறியத்தருகின்றேன்.

**ஈசுர விநாயகரிடம் மனுத்தாக்கல் செய்தமை (08.11.1991)**

நாட்டுப் பிரச்சினை சம்பந்தமாக எமது தீராத பிரச்சினையைத் தீர்த்தருளும்படி பறாளாயில் பள்ளி கொண்டுள்ள அடியேனின் குலதெய்வமாகிய சர்வவல்லமை பொருந்திய ஈசுர விநாயகனின் தும்பிக்கையிலே நம்பிக்கையுடன் ஓர் மனுவை (08.11.1991) சமர்ப் பித்தேன். அம்மனுவில்

1.நீதியரசர்: ஈசுர விநாயகர்


2.வழக்காளி: ஐயா,(சந்ததிப் பூசகர்)

3.எதிராளி: சிறிலங்கா அரசு என்று காட்டப்பட்டுள்ளது.


அன்று தொடக்கம் அதற்கு விசேட பூசை வழிபாடுகள், பிரார்த்தனைகள் செய்து எனது ஆன்மீக போராட்டத்தை ஆரம்பித்தேன். பல கோரிக்கைகளை முன்வைத்து இலட்சக்கணக்கான விடிவிளக்குகள் ஏற்றி வேண்டுதல் செய்து இரவு பகலாக போராடினேன். எனது வற்புறுத்தலின் நிமிர்த்தம் ஈசுர விநாயகர் தரிசனங்களை காட்டி அருளினார். அவற்றை எல்லாம் ஈசுர விநாயகரின் அருட்குரல் பிரசுரம் மூலம் மக்களுக்கு தெரிவித்துக் கொண்டிருந்தேன்.

**முதன் முறையாக ஈசுர விநாயகர் காட்டியருளிய தரிசனம் (06.04.1992) (பங்குனிச் சதுர்த்தி)**

உங்கள் பிரச்சினை தீர்க்க எவருமே இல்லை. ஆளில்லாத காரணத்தால் நானே வருகின்றேன் என்று கூறியருளினார். உங்கள் பிரச்சினை தீர்க்க எவருமே இல்லை என்ற அவரின்



வடகிழக்கு நுழைவாயிலில் இராணுவ உயர் அதிகாரி அத்திவாரக்கல் நாட்டுவதை படத்தில் காணலாம்.



கடந்த வருடம் எல்லாவெல மேதானந்த தேரர் (பாராளுமன்ற உறுப்பினர் தெற்கு நுழைவாயில் திறந்து வைக்கின்றார்.

**அன்றைய கூற்று....**

ஆம் எங்கள் பிரச்சினையைத் தீர்க்க எவருமே இல்லை. அதாவது வன்னி யுத்தத்தில் எங்களுக்குக் கைகொடுக்க வேண்டிய ஐ.நா. சபையே கைகொடுக்கவில்லை என்றால் இதற்கு மேல் யார் இருக்கின்றார்கள்? எனவே எங்களுக்கு எவருமே இல்லை என்ற ஈசுர விநாயகரின் கூற்று தெளிவாகப் புலப்படுகின்றது தானே.

**ஆள் இல்லாத காரணத்தால் நானே வருகின்றேன் என்ற அவரின் அன்றைய கூற்று...**

இறைவன் யார் யாருக்கு எந்தெந்த வடிவம் தாங்க வேண்டுமோ அந்தந்த வடிவம் தாங்கி அவரவர் துன்பங்களை நீக்குவார்.

**ஈசுர விநாயகர் வந்தாரா?... வரவில்லையா?**

சற்று சிந்தித்துப் பார்ப்போம். என்ன ஆச்சரியம்! அன்று எனது மனுவில் நீதியரசர் ஈசுரவிநாயகர் இன்றுதமிழ்மக்களின்முதலமைச்சர் நீதியரசர் விக்கினேஸ்வரன்.இதைவிடஈசுரவிநாயகரின் மறுநாமம் விக்கினேஸ்வரன் எமது முதலமைச்சரும் விக்கினேஸ்வரன் பதவியாலும் பெயரினாலும் மட்டுமல்ல அங்கு சர்வவல்லமை பொருந்தியவர் ஈசுர விநாயகர். இங்கு தன்னிகரில்லாத நீதியரசர் விக்கினேஸ்வரன் அவர்கள் இதிலிருந்து ஈசுர விநாயகர்தான் மனித வடிவம் தாங்கி முதலமைச்சர் விக்கினேஸ்வரனாக நடமாடிக் கொண்டிருக்கின்றார் என்பது தெளிவாகப் புலப்படுகின்றதுதானே. எனவே மீண்டும் மீண்டும் விக்கினேஸ்வரனை நினையுங்கள்! சிந்தியுங்கள்! தெளியுங்கள்! உணருங்கள்! இச்செயற்பாட்டைத்தான் ஐயா பிரசுரங்களில் அடிக்கடி எழுதுவதுண்டு. அதாவது புற்று இருக்கின்றது அதில் பாம்பு இருக்கின்றதா? இல்லையா? என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் இங்கு புற்றினுள் பாம்பு இருக்கின்றது என்றும் அதனை வெளியே கொண்டு வந்து உங்கள் எல்லோர் முன்னிலையில் தெளிவாகக் காட்டிய பின்னர்தான் எனது ஆன்மீகப் போராட்டம் ஓயும் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

**சமாதானம் பற்றி ஈசுர விநாயகர் அன்று காட்டியருளிய தரிசனம்**

ஒரு பெண்ணினால் தான் நிரந்தர சமாதானம் ஏற்படும். ஸ்ரீலங்காவில் இவள் வைத்தது தான் சட்டம். அவ்வளவுக்கு அரசியல் பலம் கொண்டபெண் அதன்படி அப்போது சந்திரிகா அம்மையார் பதவிக்கு வந்தார். ஈசுர விநாயகர் எதற்காக அம்மையாரை பதவிக்கு கொண்டு வந்தாரோ? அம்மையார் அக்கடமையைச் செய்யத்தவறிவிட்டார். அதனால் தெய்வ தண்டனைக்கு ஆளாகி பதவியையும் இழந்து விட்டார்.அவ்வேளை அடியேன் சமாதானநிலை பற்றி ஈசுரவிநாயகரிடம் கேட்டபோது மீண்டும் அம்மையாரைக் கொண்டு வருவேன் என்று கூறியருளினார்.இதனை மீண்டும் சந்திரிகா என்று மக்களுக்கு (19.01.2010) ஈசுரவிநாயகரின் அருட்குரல் பிரசுரமூலம் தெரியப்படுத்தியிருந்தேன். எனவே நடப்பவை யாவும் நன்மைக்கே. சிந்தனை செய்மனமே தீரா தீவினை அகன்றிடுமே சிந்தனை செய்மனமே.

**ஈசுரவிநாயகரின் காலக்கெடு**

யுத்தத்திற்கு ஓர் எல்லை உண்டு (வெளியீடு11.10.1992) யுத்தம் எல்லை மீறிய காரணத்தால் 2002 வைகாசி விசாகத்தை காலக்கெடுவாக ஈசுர விநாயகர் கூறியருளினார். அக்காலக்கெடுவை அடியேன் இருதரப்பினருக்கும் ஒரு முறையல்ல மூன்று முறை முறைப்படி அறிவித்திருந்தேன். அதனை யாரும் செவிமடுக்கவில்லை. தெய்வ தண்டனையில் இருந்தும் எவரும் தப்பமுடியாது. தெய்வம் சும்மா விடுமா? அதனால் இருதரப்பினரும் தெய்வதண்டனைக்கு ஆளாகி விட்டனர். இது காரணமாகக் காலம் கடந்ததேயொழிய நிரந்தர சமாதானம் கைகூடவில்லை.

**இக்காலகட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் பதவி பற்றி...**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக யாழ்ப்பாணம் வருகை தந்த போது 2003 ஆம் ஆண்டு அடியேன் நல்லூர் சிவன்கோயில் வாயிலில் நேரடியாகச் சந்தித்து அடுத்த பதவி உங்களுக்குதான் என்று தெளிவாகக் கூறியிருந்தேன். அதன்படி அவரும் பதவிக்கு வந்துவிட்டார். இவையாவும் ஈசுரவிநாயகரின் திருவிளையாடல்களே. காரணங்கள் இல்லாமல் காரியங்கள் எதுவும் நடக்காது.

இவை யாவற்றையும் சிந்தித்து பார்க்கும் போது ஸ்ரீலங்காவின் அரசியலை நடத்திக் கொண்டிருப்பவர் ஈசுரவிநாயகர் ஒருவரே என்பது தெளிவாகத் தெரிகின்றது.


**யாழ். வருகை:**-யாழ்.குடாநாட்டை விட்டு இடம்பெயர்ந்து அலைந்து திரிந்த மக்களுக்கு மீண்டும் யாழ்.செல்வது நிச்சயம் என்று பிரசுரம் மூலம் ஆறுதற்செய்தி விட்டிருந்தேன். அதன்படி 1995 ஆம் ஆண்டு சித்திரை சதுர்த்தித் தினத்தில் யாழ்.மண்ணில் காலடி வைத்தோம் என்பதை யாழ்.மக்கள் மறக்கமாட்டார்கள். மறக்கவும் முடியாது. ஈசுரவிநாயகரின் தெய்வீகம் சொல்லில் அடங்குமா? சொல்லி முடியுமா?

ஈசுர விநாயகர் அன்று காட்டியருளிய மற்றுமோர் தரிசனத்தில் இந்திய அறிவாளிக் குழுவைக்காண்பித்து இவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல அறிவாளிகள் என்றும் இக்குழுவில் ஆண்களும் பெண்களும் தொழிற்படுவதை காண்பித்து அக்குழுவிற்கு தமிழினம் என்றென்றும் நன்றிக்கடன் செலுத்த வேண்டும் என்று அசரீரி மூலம் கூறியருளினார்.இதனை நடைமுறையில் உணர்வோமாக. முடிவுச் சம்பவம் இதுவரை உணராத அனைத்து மக்களையும் உணர்த்தும் என்று அன்றே கூறியருளிவிட்டார்.

**குறிப்பு:-தரிசனம்- கனவு இரண்டிற்கும் உள்ள வேறுபாடு**

அதாவது இரண்டும் உறங்கும் போது தான் தொழிற்படுகின்றது. ஆனால் நடைமுறையில் தரிசனம் என்பது காண்பது அப்படி நடக்கும். கனவு என்றால் காண்பது எதிராக நடக்கும். விடியும் பொழுது காண்பது தரிசனம் உறங்கிய உடனே காண்பது [illegible]. செயற்பாடு வேறு என்பதை அறியத்தருகின்றேன்.

[illegible] ஆசிரியரும் சந்ததிப் பூசகரும். (குரு மாத்தயா)



(9006)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகளால் 1900 பேர் சுட்டுப் படுகொலை

சிரியாவில் அரசுக்கு எதிராக போரில் ஈடுபட்டுள்ள ஐ.எஸ். ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாதிகள் கடந்த 6 மாதத்தில் தங்களிடம் பிடிபட்ட ஆயிரத்து 878 பேரை சுட்டுக் கொன்று மரண தண்ட னையை நிறைவேற்றியுள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் பொது மக்கள் என பிரிட்டனைச் சேர்ந்த சிரியா மனித உரிமை கண்காணி ப்பு அமைப்பு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இஸ்லாமிய சட்டப்படி அரசு அமைக்கும் நோக்கத்துடன் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு சிரியாவில் அரசுக்கு எதிராக போரில் ஈடுபட்டு வருகிறது. ஈராக் மற்றும் சிரியாவில் பெரும்பகுதியை இந்த அமைப்பு கைப்பற்றியுள்ளது. தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதி களில் கிலாபத் சட்டத்தை கடந்த ஜுன் மாதம் முதல் அமுல்படுத்தியுள்ளது இந்த அமைப்பு.

ஐ.எஸ்ஐ.எஸ்தீவிரவாதிகள் சிரியா, ஈராக் இராணுவத்தினர் மற்றும் குர்திஸ் படையினருடன் போரிட்டு வருகின்றனர். பிற நாடுகளின் படையும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராகக் களமிறங்கியுள்ளன. சிரியா மனிதவுரிமை கண்காணிப்பு அமைப்பின் தலைவர் ரமி அப்துல் ரகுமான் இது தொடர்பாகக் கூறியதாவது,

கடந்த 6 மாதங்களில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாத அமைப்பினர், ஆயிரத்து 175 பொதுமக்களைக் கொலை செய் துள்ளனர். இதில், 8 பெண்களும், 4 குழந்தைகளும் அடங்குவர். கொல்லப்பட்டவர்களில 930 பேர் சன்னி முஸ்லிம்கள். வெளிநாடுகளைச் சேர்ந்த 116 பேர் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தில் சேர்ந்து போரிட்டனர். பின்னர் அவர்கள் நாடு திரும்ப நினைத்த போது அவர களை இயக்கத்தினர் கொன்றுவிட்டனர். அதே இயக்கத்தைச் சேர்ந்த மேலும் 4 பேர் வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் கொல்ல ப்பட்டனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இஸ்ஸாமிய சட்டத்தை மீறிய வர்களுக்கு, பொது இடத்தில் தலையைத் துண்டித்துக் கொலை செய்தல், கல்லால் அடித்துக் கொலை செய்தல் போன்றதண்டனைகளைஏராளமானவர்களுக்கு வழங்கியுள்ளது.(இ-5)

# நேதாஜி மாயமானது பற்றி நீதி விசாரணை ஆர்.எஸ்.எஸ்.உதவியை குடும்பம் நாடுகிறது

சுதந்திர போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்,1945ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 18ஆம் திகதி மாயமாகி விட்டார். அப்போது நடந்த ஜப்பான் விமான விபத்தில் அவர் பலியாகி விட்டதாக கூறப்பட்டு வருகிறது.இது தொடர்பாக தன்னிடம உள்ள இரகசிய கோப்புகளை வெளியிட நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மறுத்து விட்டது. இந்த நிலையில் கொல்கத்தாவை சேர்ந்த ஆர்.எஸ்.எஸ்.தலைவர் இந்திரேஷ் குமாரை சுபாஷ் சந்திர போஸ்குடும்ப உறவினர்களான சித்ரா கோஷ், டாக்டர் டி.என்.போஸ் ஆகியோர் சந்தித்து பேசினர். அப்போது அவர்கள், நேதாஜியின மர்ம மரணம் பற்றிய இரகசிய கோப்பினை வெளியட வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துக் கூறினார்கள். இதில் ஆர.எஸ்.எஸ். தலையிட வேண்டும எனவும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

அதுமட்டுமல்லாமல், உயர் நீதிமன்றத்தின் மூத்த நீதிபதி ஒருவரது தலைமையில் சிறப்பு புலனாய்வுக்குழு அமைத்து, நேதாஜி மாயமானதன் மர்மம் குறித்து நீதி விசாரணை நடத்த உதவ வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.(இ-5)

# தீவிரவாதிகள் அதிரடித் தாக்குதல் ஐந்து நகரங்களை கைப்பற்றினர்

நைஜீரியாவில் போகோஹறரம் தீவிரவாதிகள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். அண்டை நாடான கமரூனிலும் இந்த தீவிரவாதிகள் நாசவேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அங்குள்ள குழந்தைகளை கடத்திச்சென்று அவர்களுக்கு தீவிரவாத பயிற்சி அளித்து வருகிறார்கள். இதனையடுத்து கமரூன் இராணுவம் தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. கடந்த 2 நாட்களுக்கு முன்பு டோபிள் பகுதியில் கமரூன் நாட்டு இராணுவம் அதிரடி தாக்குதல் நடத்தி தீவிரவாதிகளில் சிலரை கொன்று குவித்தனர்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் போகோஹறரம் தீவிரவாதிகள் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் நேற்று முன்தினம் கமரூன நாட்டின் வடக்கு பகுதியில் புகுந்தனர். அங்கு இருந்த இராணுவ வீரர்கள் மீது தாக்குதல் நடத்தி, இராணுவ முகாமை கைப்பற்றினர. மேலும், கமரூன் நாட்டில் உள்ள 5 நகரங்களையும் தீவிரவாதிகள் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த தாக்குதலில் எத்தனை இராணுவ வீரர்கள் இறந்தார்கள் என்ற விவரம் உடனடியாக தெரியவில்லை. ஆனால ஒரு வீரர் இறந்ததாக கமரூன் வானொலி நிலையம் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

# மகிந்தவின் பொய்ப் பிரசாரத்திற்கு இந்திய அரசு எடுபட்டுவிடக்கூடாது

## திருமாவளவன் வலியுறுத்து

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைப் புகழ்வதன் மூலம் இந்தியாவையும் தமிழில் பேசுவதன் மூலம் தமிழ் நாட்டையும் ஏமாற்ற மகிந்த ராஜபக்ஷ முயற்சிக்கிறார். அவரது மோசடிக்கு பா.ஜ.கவினர் பலியாக வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.**

இலங்கையில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக எல்லாவிதமான ஏமாற்று வழிமுறைகளையும் மகிந்த ராஜபக்ஷ கையாண்டு வருகிறார். தமிழ்நாட்டுத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணல் அதற்கு சாட்சியமாக இருக்கிறது. தமிழக மீனவர்களைத் தாக்கக்கூடாது எனக் கண்டிப்பாகக் கூறியிருக்கிறோம் என மகிந்த செல்கிறார்.

ஆனால் உண்மை என்ன என்பதை உலகம் அறியும். ஒவ்வொரு நாளும் தமிழக மீனவர்கள் தாக்கப்படுகிறார்கள். வலைகள் நாசமாக்கப்படுகின்றன. மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுகிறார்கள். படகுகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. பாதிக்கப்பட்ட மீனவர்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். வடக்கு மாகாணத்துக்கு அதிகாரப் பகிர்வு செய்யப்படவில்லையே எனக் கேட்டால் அவர்களுக்கு ஆட்சி நடத்தத் தெரியவில்லை எனக் கேலி பேசுகிறார். தமிழர் பகுதிகளில் தொடர்ந்து இலங்கை இராணுவத்தை நிறுத்தி வைத்தும் தமிழர்களின் நிலங்களையெல்லாம் அபகரித்துக் கொண்டு அங்கே சிங்களவர்களைக் குடியேற்றியும், இந்துக் கோயில்களை இடித்து விட்டு பௌத்தக் கோயில்களைக் கட்டியும் அட்டூழியம் செய்துவரும் மகிந்த அரசு தமிழர்கள் தமது வீட்டில் ஏதேனும் நிகழ்ச்சிகள் நடத்தினால் கூட இராணுவத்திடம் அனுமதிபெறவேண்டும் என வலியுறுத்தி வருகிறது.

இந்தியா பல முறை வலியுறுத்தியும்கூட 13ஆவது சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வு செய்ய மறுக்கிறது. இத்தனை அநீதிகளையும் செய்துகொண்டு தமிழர்களை நான் சமமாக நடத்துகிறேன் என ராஜபக்ஷ சொல்வது கேலிக்கூத்தே தவிர வேறல்ல.

இந்தியப் பெருங் கடலில் அண்மைக்காலமாக சீனப் போர்க்கப்பல்களின் நடமாட்டம் அதிகரித்து வருகிறது. அவற்றுக்கு இலங்கைத் துறைமுகங்கள் திறந்து விடப்பட்டுளளன. இதனால் இந்தியாவின் பாதுகாப்புக்கு மிகப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இந்தியா எங்களுக்கு உறவு! சீனா எங்களுக்கு நட்பு எனக் கூறும் மகிந்த ஒரு சீனச் சார்பாளர் என்பதும் சீனாவைக் காட்டி இந்தியாவை மிரட்டுகிறார் என்பதும் உலகறிந்த உண்மை. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைப் புகழ்வதன் மூலம் இந்தியாவையும், தமிழில் பேசுவதன் மூலம் தமிழ்நாட்டையும் ஏமாற்ற மகிந்த முயற்சிக்கிறார்.

அவரது மோசடிக்கு பா.ஜ.கவினர் பலியாக வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம். போர்க்குற்றங்களுக்காக ஐ.நா மனித உரிமைக் குழுவின் விசாரணைக்கு உள்ளாகியிருக்கும் மகிந்த ராஜபக்ஷ அதிலிருந்து தப்பிப்பதற்காகவே அவசரமாகத் தேர்தலை நடத்துகிறார். மகிந்த மீண்டும் தெரிவானால் ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல தமிழ் நாட்டுக்கும் இந்தியாவுக்கும் கூட ஆபத்தாகவே முடியும்.

இதை இந்திய அரசும் பா.ஜ.கவினரும் புரிந்து கொள்ள வேண்டும என அவர் மேலும் தெரிவித்தார் (இ- 5)

# மும்பைத்தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்ட தீவிரவாதி லக்விக்கு மீண்டும் தடுப்புக் காவல்

மும்பை தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்ட தீவிரவாதி ஜாகீர் ரகுமான் லக்வியை பாகிஸ்தான் அரசு மீண்டும் கைது செய்துள்ளது.

2008ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் 10 பேர் கடல் வழியாக நுழைந்து மும்பை நகரில் நடத்திய தாக்குதலில் 166 பேர் கொல்லப்பட்டனர்.இது தொடர்பான வழக்கில் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்ட தீவிரவாதி ஜகியுர் ரஹ்மான் லக்வி பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார். அவர் மீது பாகிஸ்தான் அரசு பிறப்பித்த உத்தரவை நேற்று முன்தினம் இஸ்லாமாபாத் நீதிமன்றம் தற்காலிகமாக இரத்து செய்தது.

பாகிஸ்தானின் இந்த நடவடிக்கையால் இந்தியா கடும் அதிர்ச்சி அடைந்து உள்ளது.இதைத் தொடர்ந்து இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் சுஜாதா சிங் நேற்று முன்தினம் பிறபகல் டில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரி அப்துல் பாசித்தை நேரில் வரவழைத்து இந்திய அரசின் கண்டனத்தை தெரிவித்தார்.

இந்த நிலையில், தீவிரவாதி ரகுமான் லக்வி மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார். வேறு ஒரு வழக்கில் வெளிவரமுடியாதபடி பாகிஸ்தான் அரசு லக்வியை நேற்று கைது செய்துள்ளது.

லக்வி மீதான தண்டனையை நீதிமன்றம் இரத்து செய்ததை தொடர்ந்து அவர் விடுதலை செய்யப்பட இருந்த நிலையில், இந்தியாவின் கடும் எதிர்ப்பை தொடர்ந்து மீண்டும் லக்வி கைது செய்யப்பட்டுள்ளார். (இ-5)

# ஏர் ஏசியா விமானத்தின் பாகங்கள் கண்டுபிடிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் உள்ள சுரபயா நகரிலிருந்து 155 பணிகள் மற்றும் 7 விமான பணியாளர்களுடன் சிங்கப்பூருக்கு புறப்பட்ட ஏர் ஏசியா விமானம் காணாமற் போனது.

விமானம் மாயமான ஜாவா கடற்பகுதியில் 8 நாடுகளின் உதவியுடன் கப்பல்கள், விமானங்கள் மற்றும் மீன்பிடி படகுகள் மூலம் தேடுதல் வேட்டை நடந்து வந்த நிலையில், அந்த விமானத்தின் பாகங்கள் என சந்தேகிக்கப்படும் 10 பொருட்கள் மிதப்பது கண்டுபிடிக்கப்பட்டன.

அவற்றில் மிகப்பெரிய பாகம் விமானத்தின் கதவாக இருககலாம் என கூறப்படுகிறது. விமானம்



ரேடாரிலிருந்து மறைந்த இடத்திலிருந்து பத்து கிலோமீற்றர் தொலைவில் இந்த பாகங்கள் கிடைத்துள்ளதாக தேடுதல அதிகாரி அகஸ் தெரிவித்துள்ளார்.

விமானத்தில் பயணம் செய்த பயணிகள் குறித்து எந்த அறிவிப்பும் இல்லாத நிலையில்,அவர்கள் இறந்திருக்கலாம் என்ற அச்சத்தில் விமான நிலையத்தில் காத்திருக்கும் பயணிகள் கதறி அழுத வண்ணம் காணப்படுகின்றனர். (இ-5)

# 13 பேர் கருகி பலி

பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள லாகூரில் நியூ அனார்கலி பகுதியில் அல்.கரீம் பிளாசா என்ற வணிக வளாகம் உள்ளது. இங்கு பல கைக்கடிகார கடைகள் உள்ளன.

நேற்று முன்தினம் மாலை 5.20 மணியளவில் அங்கு திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தொடக்கத்தில் ஒரு கடையில் பிடித்த தீ மளமள வென மற்ற கடைகளுக்கும் பரவியது.

தகவல் அறிந்ததும் 12 தீயணைப்பு வண்டிகளும், அவசர உதவி பிரிவினரும், மீட்பு குழுவினரும் அனுப்பப்பட்டனர். உதவிக்காக 6 அம்புலன்ஸ்களும் அனுப்பப்பட்டன.இந்த தீ விப த்தில் சிக்கி 13 பேர் உயிருடன் எரிந்து பலியாகினர். 7 பேர் காயம் அடைந்தனர். அவர்களுக்கு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. (இ-5)

# சல்மான்கான் பிரசாரம் திமுக கடும் கண்டனம்

இலங்கையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக இந்தி நடிகர் சல்மான்கான் பிரசாரம் செய்துள்ளதை தி.மு.க வன்மையாக கண்டித்துள்ளது. இலங்கை ஜனாதிபதி தேர்தல் வரும் 8ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 3ஆவது முறையாக போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை எதிரணி நிறுத்தியுள்ளது. தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ள நிலையில் கொழும்பில் மகிந்தவின் மகன் நாமல் ராஜபக்ஷ நடத்திய கண்புறை அறுவை சிகிச்சைக்கான நிகழ்ச்சியில் இந்தி நடிகர் சல்மான்கான் பங்கேற்றார். பின்னர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக அவர் பிரசாரம் செய்தார். இதற்கு தி.மு.க கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மகிந்தவுக்கு ஆதரவான பிரசார நிகழச்சியில் சல்மான்கான் பங்கேற்றது வன்மையாக கண்டிக்கத்தக்கது என தி.மு.க செயலாளர் ஜி.கே.எஸ். இளங்கோவண் தெரிவித்தார். சல்மான்கான் நாமல் ராஜபக்ஷவுக்கு நெருக்கமான நணபர் என்பதால் தேர்தல் பிரசாரத்தில் பங்கேற்றதாக இருவருக்கும் நெருக்கமான இலங்கை நடிகை ஜாக்லீன் பெர்ணான்டஸ் தெரிவித்துள்ளார்.

இதனிடையே ராஜபக்ஷவின் அழைப்பின்பேரில்சல்மான்கான்இலங்கைக்கு வரவில்லை என ஜனாதிபதி மாளிகை செய்தி தொடர்பாளர் மோகன் சமர நாயகே மறுப்பு வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.(இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எல்லோரும் நீதியை விரும்புகின்றனர்...
ஆனால் அடுத்தவர் விடயத்தில் மட்டும்
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சொல்லிய கருத்தின் பொருள் சொல்லுமின்!

ஜனவரி எட்டு யாருக்கு வேட்டு வைக்கும் என்பது தெரியாமல் இருக்கின்ற இவ்வேளையில் நாடு முழுவதிலும் அனல் பறக்கும் தேர்தல் பிரசாரம் நடந்து கொண்டிருக்கிறது.

தேர்தல் பிரசாரச் சூட்டை நாட்டில் பெய்யும் மழை தணித்து தேர்தலை நிறுத்தி விடுமோ என்று ஏங்கிய வேளையில், வர்ணபகவானும் தேர்தலுக்குச் சம்மதம் தெரிவித்திருப்பது போல கதிரவன் வரவிற்கு இடம் அளித்துள்ளான்.

ஆகையால் சீரற்ற கால நிலை தேர்தலைப் பாதிக்காது என்று நம்பலாம். எனினும் இது மார்கழி மாதம். மார்கழி பீடை பிடித்த மாதம் என்பது நம் முன்னோர்களின் கருத்து.

இதன் காரணமாக மார்கழித் திங்களில் சிவ வழிபாடு தவிர்ந்த வேறுறெந்த நல்ல காரியங்கள் செய்வதற்கான அனுமதியை நம் முன்னோர்கள் தர மறுத்தனர்.

இயற்கையின் மாற்றமும், சீரற்ற கால நிலையும் காரணமாக முக்கியமான நிகழ்வுகளிற்கு மார்கழி மாதம் பொருந்தமுடையதன்று என நம் முன்னோர்கள் தீர்மானித்திருக்கலாம்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி எட்டு என்பது தமிழ்க் கணக்கில் மார்கழி மாதமாக இருக்கும்.

எனவே, மார்கழியில் நடக்கும் ஜனாதிபதித் தேர்தல் பிறக்கப் போகும் தை மாதத்திற்கு வழி பிறப்பதாக அமையும் என்றும் கருதிக் கொள்ளலாம்.

எதுவாயினும் வடக்கு மக்களை மிரட்டினால் தேர்தல் இரத்து செய்யப்படும் என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கூறியிருப்பது மிகுந்த அதிர்ச்சியையும் அந்தரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அதாவது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வட பகுதி மக்கள் வாக்களிப்பதற்கு யாரேனும் இடைஞ்சல் செய்தால் தேர்தல் இரத்து செய்யப்படும் என்பது தேர்தல் ஆணையாளரின் அறிவிப்பு.

கடந்த காலங்களில் வடபகுதி மக்கள் வாக்களிப்பதில் பல்வேறு இடைஞ்சல்களை எதிர்கொண்டமை வெளிப்படை. எனினும் அப்போதெல்லாம் தேர்தலை இரத்து செய்தல் என்பது குறித்து இப்போதிருப்பவர் முதல் தேர்தல் ஆணையாளராக இருந்த எவரும் வாய் திறந்ததிலர்.

நிலைமை இதுவாக இருக்கையில், திடீரென வட பகுதி மக்கள் மீது தேர்தல் ஆணையாளர் இத்துணை கரிசனையும் கவனமும் கொண்டதன் பொருள் விளங்காமல் உள்ளது.

இது மார்கழி மாதம். திருவாசகத்திற்குரிய காலம். சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவர் செல்வர் சிவபுரம்... என்று உரைக்கப்படுகிறது. பாட்டின் பொருள் உணர்ந்து சொல்கின்றவர்களே சிவபுரம் செல்லமுடியும்.

ஆனால், இங்கு தேர்தல் ஆணையாளர் கூறிய கருத்தின் பொருள் புரியாமல் இருப்பது வேதனைக்குரியது.

ஜனாதிபதித் தேர்தலில், வடபகுதி மக்கள் வாக்களிப்பதற்கு யாரேனும் தடை செய்தால் தேர்தல் இரத்து செய்யப்படும் என்று தேர்தல் ஆணையாளர் கூறியதிலிருந்து சில ஐய வினாக்கள் எழுகின்றன.

அதாவது, வட பகுதி மக்கள் வாக்களிப்பதை குழப்பக் கூடியவர்கள் யார்? அவ்வாறு குழப்பும் போது தேர்தலை இரத்துச் செய்தால் அது யாருக்கு இலாபத்தைக் கொடுக்கும்? தேர்தலை இரத்து செய்யும் ஒரு திட்டம் இருந்தால், அதற்கு வட பகுதி மக்களை முன்வைத்து ஒரு நியாயம் தேடும் எண்ணம் யாருக்கேனும் உண்டா?

தென்பகுதியில் தேர்தல் வன்முறைகள் தாராளமாக இருக்கும் போது, வட பகுதி மக்கள் முதன்மைப்படுத்தப்படுவது ஏன்? என்ற வினாக்கள் எழுவது நியாயமானது. எது எப்படி இருந்த போதிலும் தேர்தல் நியாயமான முறையில் எப்பாடுபட்டும் நடத்தப்பட வேண்டும் என்பதே நாட்டு மக்களின் விருப்பாக இருக்கும் என்ற உண்மையை தேர்தல் ஆணையாளர் நிச்சயம் அறிந்திருப்பார் என்று நம்பலாம்.

## திருவெம்பாவை




திருச்சிற்றம்பலம்

மானேநீநென்னலைநாளைவந்துஉங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவுஅரியான்
தானேவந்து எம்மைத் தலையளித்துஆட்
கொண்டு அருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குஉன்
வாய்திறவாய்
ஊனேஉருகாய் உனக்கே உறும்எமக்கு
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடுஏலோர்
எம்பாவாய்

பொருள்: மான்போன்ற பெண்ணே! நீ நேற்று, நாளை வந்து நானே உங்களைத் துயில் எழுப்புவன் என்றுசொன்னாய். அவ்வாறு சொன்ன சொல்லுக்கும் வெட்கப்படாமல் தூங்கிக் கொண்டிருக்கின்றாய். நீ சொன்ன சொல் போயின திக்கைச் சொல்லமாட்டாயோ? இன்னும் பொழுதுவிடியவில்லையோ? வானுலகத்தவரும் நிலவுலகத்தவரும் பிற வுலகத்தவரும் அறிவதற்கு அருமையானவன். தாமாகவே வலிய வந்து எம்மைக் காத்து ஆட்கொண்டருளும்பெருமைமிக்க நெடிய கழலணிந்த திருவடிகளை உடையவன். அத்தகைய திருவடிகளைப்பாடி வந்தவர்களாகிய எங்களுக்கு நீ ஒன்றும் வாய் திறந்து பேசாது தூங்குகின்றாய். உடலும் உருகப்பெறாது இருக்கின்றாய். இவ்வொழுக்கம் உனக்குத்தான் பொருத்தம். நமக்கும் பிறருக்கும் தலைவனாய் இருப்பவனை எழுந்து வந்து பாடுவாயாக!

அன்னே இவையும் சிலவோ பலஅமரர்
உன்னற்கு அரியான் ஒருவன்
இருங்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே
வாய்திறப்பாய்
தென்னஎன் னாமுன்னம் தீசேர்
மெழுகொப்பாய்
என்னானை என்அரையன் இன்னமுது
என்று எல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய்
இன்னம் துயிலுதியோ
வன்நெஞ்சப் பேதையர்போல் வாளா
கிடத்தியால்
என்னே துயிலின் பரிசுஏலோர்
எம்பாவாய்

பொருள்: தாயே! உன்குணங்களுள் இவைகளும் சில போலும். தேவர்கள் பலரும் எண்ணுதற்கும் அரியவன். பெரும் சிறப்புடையவன். அத்தகையவனுடைய சங்கு முதலிய ஒலிகள் கேட்க சிவ சிவ என்று சொல்லியே வாயினைத் திறப்பாய். தென்னவனே என்று சொல்லுவதற்கு முன்னே அனலிலிடப்பட்ட மெழுகுபோல உருகுவாய். எனது பெரும் துணைவன்; எனது அரசன்; இன்னமுதானவன் என்று எல்லோரும் வெவ்வேறாகச் சொன்னோம். நீ அதனைக் கேட்பாயாக!. இன்னமும்தூங்குகின்றாயோ? திண்ணியமனமுடைய அறிவிலார் போல இன்னமும் படுத்திருக்கின்றாயே! தூக்கத்தின் சிறப்பினைத் தான் என்னவென்று உரைப்பதோ?

கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண்
சங்குஎங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம்
கேட்டிலையோ
வாழிஈது என்ன உறக்கமோ
வாய்திறவாய்
ஆழியான்அன்புடைமை ஆமாறும்
இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடுஏலோர்
எம்பாவாய்

திருச்சிற்றம்பலம்

பொருள்: கோழிகூவவும் மற்றப் பறவைகள் எங்கும் ஓசையை எழுப்புகின்றன. வாத்தியங்களில் ஏழிசையானது முறைப்படி இசைக்க எவ்விடத்தும் வெண்மையான சங்கானது முழங்குகின்றது. ஒப்பற்ற மேலான ஒளிப்பிழம்பானவன். ஒப்பற்ற மேலான அருளுடையவன். அத்தகைய பெருமையுடைய பெருமானது நிகரில்லாத உயர்ந்த புகழ் மொழிகளை நாங்கள் பாடினோம். அவற்றை நீ கேட்கவில்லையோ? வாழ்வாயாக! இது எத்தகைமையான தூக்கமோ? வாய் திறந்து பேசமாட்டேன் என்கிறாயே! பாற்கடலில் பள்ளி கொள்ளும் திருமாலும் நம் இறைவனிடத்தில் அன்புடையவன் ஆன திறமும் இத்தகையது தானோ? பேரூழியின் இறுதியில் தலைவனாய் நின்ற ஒருவனாகிய உமையொரு பாகனைப் பாடுவாயாக!

கே.கே.கே.சிவபாலன்

## மைத்திரி - கூட்டமைப்பு ஒப்பந்தம் எதுவுமில்லை - சம்பந்தன்

(கொழும்பு)

எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் தமிழ்த் தேசியக கூட்டமைப்பு எந்தவொரு ஒப்பந்தத்தையும் செய்து கொள்ளவில்லை என கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் படைமுகாம்களை அகற்றுதல், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் மைத்திரிபால சிறிசேனவுடன் எந்தவித பேச்சுவார்த்தையும் நடத்தப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டிய சம்பந்தன், எதிரணியின் பொதுவேட்பாளருக்கு பரிபூரண ஆதரவை வழங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் நியாயமான, நிரந்தரமான, நடைமுறை சாத்தியம் உடைய, நிலைத்து நிற்கக் கூடிய அரசியல்தீர்வு வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். அதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

நல்லாட்சியுடன் கூடிய ஜனநாயகத்தை நிலைநாட்டுவதே தற்போதைய தேவையாகும். நீதித்துறை, ஊடகத்துறை உட்பட அனைத்துத்துறைகளும் சுயாதீனமாக செயற்பட அனுமதிக்கப படுவதில்லை.

ஊழல் நிறைந்த அரசாங்கமே தறபோது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தில் நடத்தப்படுகிறது. எனவே ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக நாம் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்தோம்.

இது தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்கள் உட்பட எமது கட்சி உறுப்பினர்களின் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னரே நாம் இந்தத் தீர்மானத்துக்கு வந்தோம்.

மைத்திரிபால சிறிசேனவுக்காக மேடைகளில் ஏறி பிரசாரம் செய்வது தொடர்பில் இந்தநேரம் வரை முடிவு எடுக்கப்படவில்லை. எனினும் அவரது வெற்றிக்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## சுவர்க்கவாயில் தரிசனம் நாளை

யாழ்.அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தின் சுவர்க்கவாயில் தரிசனம் நாளை வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கும் தொடர்ந்து காலை 8 மணிக்கு அபிஷேகமும் முற்பகல் 11 மணிக்கு சுவாமி தேரில் உலா வருதலும் இடம்பெறவுள்ளது.

மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணிக்கு 1008 கலச அபிஷேகமும் அதிகாலை 5 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

மேலும் நாளை வியாழக்கிழமை இரவு 7மணி தொடக்கம் மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணி வரை ஓய்வு நிலை அதிபர் ந.அமிர்தலிங்கம், ஓய்வு நிலை அதிபர் ம.பத்மநாதன் ஆகியோரின் ஆசியுரைகளும் யாழ்.பல்கலைக்கழக பிரதி பிரதம ஒழுக்காற்று அதிகாரி வித்தியாரத்தினம் மொழியருவி ஐ.கோ. சுந்திரசேகரன், வலிகாம வலய ஆசிரிய ஆலோசகர் அருட்சொல்வாரிதி சைவ சித்தாந்த பண்டிதர் செ.கந்தசத்திய தாசன், யாழ். மட்டுவில் வித்தியாலய ஆசிரியர் வரணியூர் சைவப்புலவர் திருவருள்வாசகன் சி.கா.கமலநாதன் ஆகியோரின் சொற்பொழிவுகளும் யாழ்.யூனியன் கல்லூரி ஆசிரியர் வரதவாணி ஜெயசூரியர்,யாழ். வயாவிளான் மத்திய மகா வித்தியாலய சங்கீத ஆசிரியர் செ.ஞானசொரூபன், வலிகாம வலய சங்கீத பாட ஆசிரிய ஆலோசகர் செ.நித்தியானந்தன் மற்றும் சி.நவநீதன் ஆகியோரின் பாடல்களும் இடம் பெறவுள்ளது. (இ-5)

## கற்கைநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சங்கானை கலாசார மத்திய நிலையத்தில் சங்கீதம்; நடனம், நாடகம்,சிங்களம், ஆகிய 10 மாதகால இலவச கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதற்கான அனுமதியை 10ஆம் திகதிக்கு முன் சங்கானை பிரதேச செயலக கலாசார மத்திய நிலைய் உத்தியோகத்தர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் என சங்கானை கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (இ-5)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான மிக அவசரமான கலந்துரையாடல் ஒன்று நாளை முற்பகல் 10 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அனைத்து தொண்டராசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

இறுதிப்பட்டியல் எமக்கு கிடைத்திருப்பதால் அது தொடர்பாக ஆராய அனைத்து தொண்டராசிரியர்களையும் தவறாது குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### நல்ல எண்ணம் வேண்டும்



✦ குடும்ப வாழ்வில் இருந்து கொண்டு, கடவுள் மீது பக்தி செலுத்துபவனே வீரம் மிக்கவன்.

✦ மனதில் நல்ல எண்ணம் இருந்தால் தான் தூயபக்தி உண்டாகும்.


✦ கடவுள் என்னும் எஜமானனுக்கு பணிவிடை செய்து வாழ்வது தான் பிறவிப்பயன்.

✦ படிப்பதை விட கேட்டு அறிவது உயர்ந்தது. நேரில் கண்டு உணர்ந்து கொள்வது இன்னும் சிறந்தது.


✦ விவேகம் இல்லாதவனுக்கு எத்தனை சாஸ்திர அறிவு இருந்தாலும், அதனால் பயனேதும் இல்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போராடி சமநிலையாக்கியது இந்தியா







அவுஸ்திரேலிய அணிக்கெதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி போராடி சமநிலையாகியுள்ளது.

இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் மோதும் 3ஆவது டெஸ்ட் போட்டி மெல்பேர்ன் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 530 ஓட்டங்கள் குவித்தது. பினைர்முதல்இன்னிங்சைவிளையாடிய இந்தியா 465 ஓட்டத்தில் 'ஓல்அவுட்' ஆனது.

இது அவுஸ்திரேலிய அணியின் ஸ்கோரைவிட 65 ஓட்டங்கள் குறைவாகும். அவுஸ்திரேலிய அணி தரப்பில் ஹாரிஸ் 4 விக்கெடடும், ஜான்சன் 3 விக்கெட்டும், லயன் 2 விக்கெட்டும் எடுத்தனர்.

இதை தொடர்ந்து அவுஸ்திரேலியா 2ஆவது இன்னிங்சை ஆடியது. வழக்கம் போல் வார்னரின் ஆட்டம் அதிரடியாக இருந்தது. எனினும் வார்னரை 40 ஓட்டங்களில் அஸ்வின் எல்.பி.டபிள்யூ முறையில அவுட்டாக்கினார். அப்போது ஓட்ட எண்ணிக்கை 57 ஆக இருந்தது.

2ஆவது விக்கெட்டுக்கு ரோஜர் சுடன், வர்ட்சன் ஜோடி சேர்ந்து விளையாடினர். ஆனால் இஷாந்த் சர்மா இந்த ஜோடியை பிரித்தார். அவரது பந்தில் வாட்சன் 17 ஓட்டத்தில் டோனியிடம் கேட்ச் கொடுத்து வெளியேறினார். ரோஜர்ஸ் சிறப்பாக விளையாடி 81 பந்தில் 6 பவுண்டரியுடன் 50 ஓட்டங்களை எடுத தார். இந்த தொடரில் அவர் அடித்த 4ஆவது அரை சதம் ஆகும். ஒட்டு மொத்தமாக 8 ஆவது அரை சதத்தை எடுத்தார்.

முதல் இன்னிங்சில் 192 ஓட்டங்கள் குவித்த சுமித் இந்த முறை 14 ஓட்டத்தில் ஆட்டம் இழந்தார். அவரது விக்கெட்டை உமேஷ்யாதவ் கைப்பற்றினார். அப்போது ஓட்ட எண்ணிக்கை 131 ஆக இருந்தது.

அதை தொடர்ந்து ரோஜர்ஸ் 69 ஓட்டத்தில் அஸ்வின் பந்திலும், ஜோபர்ன்ஸ் 9 ஓட்டத்தில் இஷாந்த் சர்மா பந்திலும் ஆட்டம் இழந்தனர். மறுமுனையில் மார்ஷ் பொறுப்புடன் ஆடினார். 6ஆவது வக்கெட்டாக ஹாடின் உமேஷ் யாதவ வீசிய பந்தில் ஆட்டமிழ ந்தார்.

அதன் பிறகு களமிறங்கிய மிட்சல் ஜோன்சனும் 15ஓட்டத்தில் நடையை கட்டினார். நேற்றைய ஆட்ட நேர இறுதியில் அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட் இழப்புக்கு 261 ஓட்டங்கள் குவித்தது. அப்போது மார்ஷ் 62 ஓட்டங்களுடனும், ஹாரிஸ் 8 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்நிலையில், கடைசி நாளான நேற்று தனது 2ஆவது இன்னிங்சை அவுஸ்திரேலியா தொடர்ந்தது. மார்ஷ் - ஹாரிஸ் தொடர்ந்து விளையாடினார்கள். சிறப்பாக விளையாடிய மார்ஷ் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்துவதற்கு முக்கிய பங்கு வகித்தார். ஹாரிஸ் 21 ஓட்டங்கள் எடுத்த போது முகமது சமி வீசிய பந்தில் டோனியிடம் கேட்ச் கொடுத்து வெளியேறினார். சதம் அடிப்பார் என்று அனைவராலும் எதிர்ப்பார்க்கப்பட்ட போது 99 ஓட்டங்களில்கோலியால் ரன் அவுட் செய்யப்பட்டார்.

இறுதியில் அவுஸ்திரேலிய அணி 9 விக்கெட் வீழ்ந்த நிலையில் 318 ஓட்டங்களில் தனது ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது. இதனால் அவுஸ்திரேலியா 383 ரன்கள் முன்னிலை பெற்றது.

384 ஓட்டங்கள் வெற்றி இலக்குடன் இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த இந்திய அணிக்கு அதிர்ச்சி ஆரம்பம் கிடைத்தது. ஹாரிஸ் பந்தில் தவான் டக்-அவுட் ஆனார். முன்னதாகவே களமிறக்கப்பட்ட லோகேஷ் ராகுல் (1) ஏமாற்றினார். முரளி விஜய் 11 ஓட்டங்களில் எல்.பி. டபிளயு., முறையில் அவுட் ஆனார். இதனபின்இணைந்த கோலி, ரகானே ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. கோலி அரை சதம் அடித்தார். இவர் 54 ஓட்டங்களில் ஹாரிஸ் “வேக த்தில்” வெளியேறினார். புஜாரா (21) ஏமாற்றினார். ரகானே 48 ஓட்டங் களில் ஆட்டமிழந்தார். இதனால் இந்திய ரசிகர்கள் அதிர் ச்சியடைந் தனர். ஆனால், இதன்பின் இணைந்த கப்டன் டோனி, அஷ்வின் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி, விக்கெட் சரிவை தடுத்தனர். இந் திய அணி இரண்டா வது இன்னிங்சில் 6 விக்கெட்டுக்கு 174 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, இரு அணி கப்டன்களும் சமநிலை செய்ய சம்மதம் தெரிவித்தனர். தோனி (24), அஷ்வின் (8) அவுட்டா காமல் இருந்தனர். இதன் மூலம் இந்திய அணி 0-2 என தொடரை இழந்தது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக அவுஸ்திரேலிய அணியின் ரயன் ஹாரிஸ் தெரிவானா. இரு அணிகள் மோதும் நான் காவது மறறும் கடைசி போட்டி ஜன., 6ஆம் திகதி சிட்னியில் தொடங்குகிறது. (க)

விளையாட்டுச் செய்திகள்

# டெஸ்ட் போட்டியில் இருந்து தோனி ஓய்வு

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் தோனி டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இந்தியா- அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் கடைசி நாள் ஆட்டம் நேற்று மெல்போர்னில் நடைபெற்றது.

சமநிலையில் முடிந்த இந்த போட்டியை அடுத்து அவுஸ்திரேலிய அணி 4 போட்டிகள் கொண்ட தொடரை 2-0 என்ற கணக்கில் வென்றுள்ளது.


இந்நிலையில் போட்டி முடிந்த பின்னர் இந்திய அணித்தலைவர் தோனி, டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாகவும், இனி ஹோலி டெஸ்ட் அணியை வழிநடத்துவார் என்றும் இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதன் மூலம் அவரது 10 ஆண்டுகால சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வந்துள்ளது, இதுவரையிலும் 90 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள தோனி 144 இன்னிங்ஸில் 4876 ஓட்டங்களை எடுத்துள்ளார்.


6 சதங்களையும், 33 அரை சதங்களையும் எடுத்துள்ள தோனியின் அதிகபட்ச ஓட்டங்கள் 224 ஆகும்.

60 டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவை வழிநடத்தியுள்ள தோனியின் இந்த திடீர் முடிவு ரசிகர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

டெஸ்ட் போட்டிகளில் தோனியின் செயல்பாடு திருப்திகரமாக இல்லை என தொடர்ந்து கடுமையான விமர்சனங்கள் எழுந்ததே இதற்கு காரணமாக இருக்கலாம் என தெரிய வருகிறது. (க)



# தந்தையானார் அக்ரம்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் வாசிம் அக்ரம், தான் பெண் குழந்தைக்கு தந்தையானதை டுவிட்டரில் அறிவித்துள்ளார்.

வாசிம் அக்ரமின் முதல் மனைவி ஹூமா அக்ரம் கடந்த 2009ஆம் ஆண்டு இறந்து போனார். இதனையடுத்து 2013ஆம் ஆண்டு ஷனிரியாவை இரண்டாவதாக திருமணம் செய்தார்.

தற்போது பெண் குழந்தைக்கு தந்தையாகியுள்ள வாசிம் இது தொடர்பாக டுவிட்டரில், எங்களுடைய பெண்குழந்தை அய்லா அக்ரம் பிறந்ததை நானும், ஷனிரியாவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இவருக்கு ஏற்கனவே முதல் மனைவியின் மூலம் 2 குழந்தைகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கி ...

நல்லூர் கிட்டுப் பூங்காவில் நேற்று பி.ப 5 மணியளவில் நடைபெற்ற பொது எதிரணியின் பிரசாரக் கூட்டத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்து மக்கள் அன்பும், பாசமும் கொண்டவர்கள் என்பதை நான் நன்கு அறிந்து வைத்துள்ளேன்.

போருக்கு பின்னர் இனங்களுக்கிடையில் அமைதியை ஏற்படுத்துவது சுலபமல்ல என்பதையும் நான் நன்கு அறிவேன்.

நெடுஞ்சாலைகள், பாரிய கட்டடங்களால் மக்கள் மகிழ்ச்சியடைய முடியாது. மக்களின் மகிழ்ச்சி மனங்களில் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

துப்பாக்கி சன்னத்தை துப்பாக்கியின் மூலம்தான் நிறுத்தமுடியும். ஆனால் துப்பாக்கி சன்னத்தினால் மக்களின் மனங்களை வென்றுவிட முடியாது.

பன்மைத்துவம் வாய்ந்த இந்நாட்டில் இன, மத பண்பாட்டு ஒன்றிணைப்பு என்பது முக்கியமானதாகும். அந்தவகையில் இந்நாட்டில் புதிய அரசியல் பண்பாட்டினை உருவாக்குவதே எனது நோக்கமாகும்.

நாட்டில் 3 இலட்சம் மக்கள் மூன்று வேளை சரியான உணவின்றி பட்டினியால் வாழ்கிறார்கள்.

தேர்தல் காலங்களில் மாத்திரம் மகிந்த அரசு மக்களின் வீடுகளுக்கும் சென்று பொருட்களை வழங்கி வருகின்றது. இவ்வாறு மக்களை ஏமாற்றுவது மகாபாவம்.

நாடு முழுவதும் தற்போது ஊழல் நிறைந்து காணப்படுகின்றது. அமைச்சரவையில் உள்ளவர்களுக்குக்கூட எவ்வித கணிப்பீடுகளும் காட்டப்படுவதில்லை.

தற்போது உள்ள அமைச்சரவை பெயரளவில்தான் உள்ளது. பகல் கொள்ளையர்கள் தற்போது மகிந்த அரசுக்கு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை அச்சுறுத்தி பயமுறுத்தி மாற்றுக்கருத்தை வெளியிட முடியாதவாறு அடக்கி வைத்துள்ளனர்.

ஜனநாயகம் அழிக்கப்பட்டுள்ள நிலையில் இலட்சக்கணக்கான கைக்கடிகாரம், தொலைபேசிகள், சேலைகள் என்பவற்றை தற்போது வழங்கி வருகின்றனர். இவ்வாறு பணத்தை கொடுத்து வாக்குகளை கொள்ளையடிக்க முயற்சி செய்து வருகின்றனர்.

நான் அரச குடும்பத்தவன் அல்ல. ஒரு சாதாரண விவசாயின் மகன். எனக்கு விவசாயம் செய்யத் தெரியும். ஆனால் இந்த அரசு விவசாயத்தை முற்றுமுழுதாக அழித்துள்ளது.

மகிந்த போன்று சொகுசு வாழ்க்கை வாழ்வதற்காக நாம் வாக்கு கோரவில்லை. அங்குள்ள ஜனாதிபதி மாளிகை எதனையும் நான் பயன்படுத்த மாட்டேன்.

ஜனாதிபதி அதிகாரத்தை ஏனைய அமைச்சர்களுக்கும், பாராளுமன்றத்துக்கு வலுவான அதிகாரத்தையும், நீதித்துறைக்கு நிறைந்த அதிகாரத்தையும், பொலிஸ் மற்றும் முப்படைக்கு நிறைந்த அதிகாரத்தையும் வழங்குவோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வித நிபந்தனையுமின்றி எமக்கு ஆதரவு அளித்துள்ளமைக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

தேசிய இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை நிலைநாட்டுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4)

## தேர்தல் பிரசாரம்...

மாவட்டங்களுக்குச் சென்றும் பரப்புரைகளை மேற்கொண்டதோடு, பி.ப 5 மணியளவில் நல்லூர் கிட்டுப்பூங்காவில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்திலும் பங்கு கொண்டிருந்தனர்.

இக்கூட்டம் பெருமளவான திரளான மக்கள் பங்கேற்புடன் நடைபெற்றதோடு, கூட்டம் முடிவடையும் வரை மக்கள் கூட்டம் நிறைந்தே காணப்பட்டது.

இப்பிரசாரக் கூட்டங்களில் பொது எதிரணி ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஜனநாயக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஐ.தே.க எம்.பி சுவாமிநாதன், விஜயகலா உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் சுகவீனம் காரணமாக அவர் கலந்து கொள்ளவில்லை.

இதேவேளை, நாளை மறுதினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச யாழ்ப்பாணத்துக்கு தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## பிரபாகரன் ...

புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பெயர் கூறப்பட்டவேளை மக்கள் கரகோஷம் வானைப் பிளந்தது.

பொது எதிரணியின் தேர்தல் பிரசாரம் நல்லூர் கிட்டுப்பூங்காவில் நேற்று பி.ப 5 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரையாற்றியிருந்தார்.

அவர் தனதுரையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றியும் தலைவர் வே.பிரபாகரன் தனது உடன்படிக்கைக்கு இசையவில்லை எனவும் கூறியிருந்தார்.

இதன்போது பிரபாகரனது பெயர் சந்திரிக்காவால் உச்சரிக்கப்பட்ட வேளை கூட்டத்திலிருந்த ஆயிரக்கணக்கானவர்கள் விசில் அடித்து கரகோஷம் செய்தனர்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொது எதிரணிக்கு ஆதரவு தெரிவித்தமைக்கு ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன நன்றி தெரிவித்தபோதும் மக்களின் கரகோஷம் வானைப் பிளந்தது. (செ-4)

## சுயமரியாதையோ...

தமிழ் மக்களின் ஆதங்கங்களை அறிந்து கொள்வதே. ஏனென்றால் அவர்கள் கூட்டம் வைக்கும்போது தமிழ் மக்களின் கருத்துக்களைப் பெறுவதற்கு நேரம் இன்மையாலும் அத்துடன் அவர்கள் தங்கள் கருத்துக்களை சொல்லி விட்டு சென்று விடுவார்கள் என்பதாலும் என்னுடன் பேசுவதற்காக இங்கு வருகை தந்திருந்தார்கள்.

தமிழ் மக்களுக்கு உதவி செய்தால் சிங்கள மக்கள் தங்களுக்கு நெருக்கடிகளைக் கொடுப்பார்கள் என ஒரு மாயையில் அவர்கள் சிக்குண்டு இருந்தார்கள். தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒரே நாட்டு மக்கள். அனைவரும் சமரசமாக வாழவேண்டியவர்கள்.

அப்படித்தான் நாங்கள் இப்பொழுது வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். ஆனால் தமிழ் மக்களைப் பற்றி தவறான எண்ணத்தையும் சிந்தனையையும் தோற்றுவிக்கும் முகமாகவே சிங்கள மக்களிடம் அரசியல்வாதிகள் கருத்துக்களைக் கூறி வந்துள்ளனர். ஆனால் தமிழ் மக்கள் அவ்வாறு சிந்திக்கவில்லை. ஏனென்றால் ஒரு துன்பம் நேருமானால் அது தமிழ் மக் களுக்கும் சிங்கள மக்களுக்கும் நேர்ந்த தாகத் தான் நாம் உணர்கிறோம். ஆகவே இந்த நாட்டிலுள்ள அரசால் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும்.

தமிழ் ஈழத்தை தவிர தமிழ் மக்களுக்கு எல்லாம் தருவேன் என இந்த அரசியல்வாதிகள் சொல்லிக்கொண்டு இருந்தார்கள். ஆனால் எங்களுக்கு ஒன்றும் தரவில்லை. எங்களுக்கு ஈழம் தேவையில்லை மாறாக நாங்கள் சுய மரியாதையோடு வாழும் மக்களாக இருக்க வேண்டும்.

பல இனம், மொழி, சமயம் கொண்ட இந்த நாட்டில் தமிழ் மக்கள் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தங்கள் உரிமைகளை அரசியல் ரீதியாகவும் அகிம்சை வழியாகவும் கேட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் இவைகள் எல்லாம் ஆயுதங்கள் கொண்டு நசுக்கப்பட்டனவே தவிர வேறு எந்த பயனும் கிடைக்கவில்லை. இதனால்தான் தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றிணைந்து நாட்டை நல்வழியில் கொண்டு செல்வதற்கு அரசியல் தீர்வு மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனும் வட மாகாண சபையிடனும் பேச்சு நடத்தும்போதுதான் அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை முன்கொண்டு வருவார்கள். அப்பொழுது எல்லோரும் ஒன்றிணைந்து ஒரு தீர்வை பெறமுடியும். இப்படியான காரியம் செய்யப்படுமானால் அநீதிகளோ மக்கள் புறக்கணிப்போ இந்த நாட்டில் ஏற்படாது. மேலும் இந்த நாட்டில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள், விதவைகள், உடலில் காயத்துடனும் குண்டுகளுடனும் இன்னும் மன அழுத்தத்துடன் இருக்கும் மக்களுக்கு எவ்வித நிவாரணமும் [illegible] வில்லை. இது ஏன் [illegible] வில்லையென்றால் தமிழர்களின் வாக்குகள் தங்களுக்கு தேவைப்படாது என்ற காரணமே.

ஆனால் தற்பொழுது எதிரணியில் போட்டியிடும் அமைப்பு, அதன் வேட்பாளர் ஒரு பரந்த மனப்பாங்குடன் மட்டுமல்ல அவற்றை நல்லமுறையில் செயல்படுத்தவேண்டும என கேட்டுக் கொண்டபோது அவர்களும் அதே மனப்பாங்குடன் இருக்கின்றனர் எனத் தெரிவித்தனர்.

அத்துடன் இவர்களின் செயல்பாட்டிலும் விஞ்ஞாபனத்திலும் இவர்களின் நல்லெண்ணங்கள் இருப்பதையும் எம் மக்கள் நன்கு அறிவார்கள். ஆகவே எமது தமிழ் மக்கள் இவர்களுக்குத்தான் வாக்களிப்பர். ஆகவே இவர்களின் நல்லெண்ணங்கள், செயல்பாடுகள் நல்ல முறையில் நடைபெற வாழ்த்தியதுடன் இந்த நாட்டில் ஒற்றுமையும் சமாதானமும் திகழ வாழ்த்தி அனுப்பினேன். இவ்வாறு ஆயர் தெரிவித்தார். (செ-11)

## தேர்தல் நம்பகமாக...

மூன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் கடந்த வாரம் தொலைபேசி மூலம் உரையாடியுள்ளார்.

இதன்போது, அமைதியாகவும், நம்பகமாகவும் தேர்தல் நடத்தப்படுவதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என பான் கீ மூன் தனது எதிர்பார்ப்பை வெளியிட்டுள்ளார்

ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலை எதிர்நோக்கியுள்ள இலங்கைக்கு நல்லிணக்கம், அரசியல் பேச்சு, பொறுப்புக்கூறல ஆகியவற்றுக்கு ஐ.நா தொடர்ந்தும் உதவும் என்றும் அவர் பீரிஸிடம் மீண்டும் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், தேர்தல் செயல்முறையில் எந்தவித அச்சமும் இல்லாமல், சிறுபான்மையினர் உள்ளிட்ட இலங்கையின் அனைத்து மக்களும் வாக்களிப்பில் பங்கேற்பது முக்கியம் என்றும் பீரிஸிடம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார். (செ-11)

# பாதிக்கப்பட்ட மக்களை அரசு உதாசீனப்படுத்தி வந்துள்ளது அமைச்சர் ராஜித கருத்து

(குருமன்காடு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான வசதிகளையும் இந்த அரசு செய்து கொடுக்கவில்லை என ராஜித சேனாரத்தின எம்.பி நேற்று தெரிவித்தார்.

வவுனியா வைரவபுளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபாலசிறிசேனவை ஆதரிக்கும் பிரசார கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்.

பாதுகாப்பு செயலாளரும் ராஜபக்ச குடும்பமும் இணைந்து இங்கு வாக்கு மோசடியில் ஈடுபட திட்டம் தீட்டுவதாக நான் அறிகின்றேன்.

ஆனால் வட பகுதி மக்கள் அனைவரும் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி ஆக்குவது என முடிவெடுத்துவிட்டார்கள்.

ராஜபக்ச குடும்பத்தினர் காசுகளை மக்களுக்கு கொடுக்கின்றனர். அவ்வாறு உங்களுக்கும் தந்தால் வாங்கி கொள்ளுங்கள் அவ்வாறு பணத்தை வாங்கிய பின்னர் இந்த பணத்தில் வாகனங்களில் வந்து அன்ன சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்.

வட மாகாண மக்கள் 30 வருட காலமாக யுத்தத்தால் அல்லலுற்ற மக்கள். ஆனால் இன்று நடைபெறுவது என்ன?. அதிவேக பாதைகள் அமைக்கின்றார்கள். ஆனால் அதனை யார் அமைக்கின்றார்கள். இந்தியாவில் இருந்தும் ஏனைய இடங்களில் இருந்தும் கொண்டு வந்து பாதைகளை அமைக்கின்றார்கள். இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான வேலைவாய்ப்புகளையும் வழங்கவில்லை.

இவ்வாறு வேலைகளை செய்யும்போது இப்பகுதி கொந்தராத்துக்காரர்களுக்கு வேலைகளை வழங்க வேண்டும் என கோரியிருந்தேன். 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் இப்பகுதி மக்களுக்கு எந்தவிதமான கொந்தராத்தையும் வழங்கவில்லை.

இந்தபகுதி மக்கள் அதிவேக பாதைகளை அறிந்திருக்கவில்லை. இப்பகுதி மக்களுக்கு மின்சாரத்தை வழங்குவதில் பலன் இல்லை ஏனெனில் அவர்களிடம் மின்சார கட்டணத்தை வழங்க பணம் இல்லை. நீர் விநியோகத்தை வழங்குவதிலும் பலன் இல்லை ஏனெனில் அந்த பட்டியல் பணத்தை செலுத்த பணம் இல்லை.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான வசதிகளையும் இந்த அரசு செய்து கொடுக்கவில்லை.

இது தொடர்பாக அமைச்சரவையில் பேசுகின்றபோது இந்த பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் டக்ளஸ் தேவானந்தா வாய் மூடி மௌனியாக இருந்தார்.

இந்தவேளையில் நான் டக்ளஸை பார்த்து சொன்னேன் நீங்கள் உங்கள் பகுதி மக்களுக்கு துரோகியாக இருக்கின்றீர்கள் என்று. இந்த மக்களுக்கான சேவையில் டக்ளஸ் சேர்ந்திருக்க முடியும். ஆனால் அவர் வாயில் பிட்டு அடைந்தவர்போல் இருக்கின்றார். இதனூடாக தனக்கு கிடைத்த வசதி வாய்ப்புகளை பாதுகாத்துக்கொண்டிருக்கின்றார்.

ஆனால் ரிசாட் பதியுதீன் எந்த நேரமும் மக்களுக்காக அமைச்சரவையில் குரல் கொடுப்பதை நான் கண்டேன்.

இன்று இந்த மக்களின் காணிகளை அபகரித்துக் கொண்டு எந்தவிதமான வெட்கமும் இன்றி இந்த மக்களின் வாக்குகளை கொள்ளையடிக்கபார்க்கின்றார்கள்.

இந்த மக்களின் உணர்வுகளை புரிந்திருந்தால் பல டிபண்டர்களை வைத்துக் கொண்டு மோசடிகளில் ஈடுபடாமல் இருந்திருக்கலாம்.

இந்த மக்களின் காணிகளை வழங்கியிருந்தால் இந்த மக்களின் முன்னேற்றத்தில் அக்கறை முன்னரே இருந்திருந்தால் நாங்கள் சொல்வதை முன்னமே கேட்டிருந்தால் இன்று இந்த நிலை அரசுக்கு ஏற்பட்டிருக்காது என தெரிவித்தார். (செ-25,0)

# கிரிக்கெட்டில் சாதனை எளிதில் கிடைக்க முடியாது-முரளிதரன்

கிரிக்கெட்டில் சாதிப்பதற்கு நீண்டகாலம் எடுக்குமென இலங்கை அணியின் முன்னாள் சுழற் பந்து ஜாம்பவான் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் கழகங்க ளுக்கான கிரிக்கெட் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு, கிரிக்கெட் பயிற்சியினை அளித்தார் முரளி தரன்.

இதன் பிறகு அவர் உரையாற்றுகையில், விளையாட்டில் சாதிக்க வேண்டும் என்றால் எந்தளவிற்கு விளையாட முடியுமென்பதை உங்களுக்குள் ஊக்குவித்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் உங்கள் [illegible] முடியும்.

[illegible] கிரிக்கெட்டினை கற்றுக் கொண்டாலும், அனைத்து விடயங்களையும் அந்த வயதில் கற்றுக் கொள்ள முடியாது. அதற்கு நீண்டகாலம் எடுக்கும்.

தேசிய ரீதியில் விளையாட வேண்டுமாயின் பாடசாலை மட்டத்தில் திறமைகளை காட்ட வேண்டும். அதன் பின்னர் கழகங்கள் ரீதியில் திறமையை காட்ட வேண்டும்.

மாகாண ரீதியில் திறமை காட்ட வேண்டும். இதன் மூலம் இலங்கை அணியில் இணைந்து கொள்ள முடியும். ஆனால் அதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

சிறுவயதில் காட்டும் திறமை கள் தான் வெற்றிக்கு வழி வகுக்கும் என்று மாணவர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார். (க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## போரில் மக்களுக்கு...

பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்தார்.

நல்லூர் கிட்டுப் பூங்காவில் நேற்று நடைபெற்ற பொது எதிரணியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் உள்ள அரசியல்வாதிகள் பலி எடுக்கின்ற அரசியல் நடத்தி வருகின்றனர். இருண்ட யுகத்துக்குள் மக்களின் வாழ்க்கை தள்ளப்பட்டுள்ளது.

எமது அரசு பதவியேற்று மூன்று மாதத்தில் கைத்தொழில், வர்த்தகம், விவசாயத்தினை அபிவிருத்தி செய்வோம். தற்போது மகிந்தவினால் முன்னெடுக்கப்படுகின்ற வீதி அபிவிருத்தித் திட்டம் ஊழல் மிக்கதொன்றாகவே காணப்படுகின்றது.

தெற்கில் அதிவேக பாதை நிர்மாணிப்பில் ஒரு கிலோ மீற்றருக்கு 5 இலட்சம் ரூபாயும் வடக்குக்கான புகையிரதப் பாதை நிர்மாணிப்பில் ஒரு கிலோ மீற்றருக்கு 280 இலட்சம் ரூபாயும் அரசுக்கு இலாபம் கிடைக்கிறது. பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன மக்களின் கஷ்டங்களை நன்று அறிந்து வைத்துள்ளார் அவருக்கு வாக்கு அளியுங்கள் என்றார் சரத்பொன்சேகா. (செ-4)

## ஆட்சிக் காலம்...

யில், நான் ஜனாதிபதியாக பதவியேற்றதும் ஜனாதிபதிக் குரிய அதிகாரங்களை நாடாளுமன்றம் மற்றும் அரச நிர் வாகத்திற்கும், நீதித்துறைக்கும் பகிர்ந்தளிக்கவுள்ளேன். நான் ஜனாதிபதி மாளிகையை ஒரு போதும் பயன்படுத்த மாட்டேன்.

அமெரிக்காவைப் போல் ஜனாதிபதிப் பதவிக் காலத்தை நான்கு வருடங்களாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலமே இந்த மக்கள் நன்மையடைவார்கள். எனது ஆட்சியில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது. அவர்களுக்கு அச்சுறுத்தல் என பாதுகாப்பு கேட்கும்பட்சத்தில்பொலிஸ்பாதுகாப்பு வழங்கப்படும் எனத் தெரிவித்தார். (செ-250)

## வலி.வடக்கில்...

தின் போது தமிழ் மக்களுக்கான சில வாக்குறு... திகள் வழங்கப்படும் எனவும் அரசியல் அ... தானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## சுயமரியாதையோடு...

வருகை தந்து மன்னார் ஆயரை அவரது இல்லத்தில் சந்தித்தனர். இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே ஆயர் மேற்கண்டவாறு கூறினார். அவ... மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்... மைத்திரிபால உள்ளிட்ட குழுவினர் வந்தா... கள். இதன் நோக்கம் என்னவென்றால்

23ஆம் பக்கம் பார்க்க...

A/L தொழில்நுட்பப்பிரிவிற்கு தனித்துவமான முன்னணிக் கல்வி நிறுவனம்
விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல475 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்
Engineering Technology: K.Ravikumar (Teacher Jaffna Hindu College), C.Ranjithkumar (Lecturer, A.T.I), P. Kirupakaran (Former Lecturer, Tech.), B. Jeagan (Lecturer, Tech.)
Bio Systems Technology: R.Jevan (Teacher), M.Vishnudevan (Teacher Skanda)
Science for Technology: A.Aravinthan (Teacher St.John's), P. Vimalanathan (Teacher Jaffna Hindu College), R.S Mayooran (Teacher Jaffna Hindu College), S.Maurathasan (Teacher Jaffna Hindu College)
ICT: S.Maurathasan
Business Studies: M.Ruban
Accounting: S.Satheeskumar
Economics: S.Kamsan
Media: S.Shanthakumar
Geography: S.Srikrushna
Art: A.Joyanthan
Agriculture & Science: M.Vishnudevan, R.Jevan
A/L 2017 தொழில் நுட்ப பிரிவு
ஆரம்பம் 01.01.2015 மு.ப 8.00 மணி
NVQ Level 3
இற்குரிய செயல்முறைகள் அனைத்தும் 100% இடம்பெறுகின்றன.
2015,2016 மாணவர்களுக்கான மாதிரி பரீட்சைகளும், செயல் முறைப் பரீட்சைகளும் இடம்பெறுகின்றன.
செய்முறைப் பரீட்சைக்கு ஏற்றவகையில் மாணவர்கள் தயார்படுத்தப்படுவர்
(9010)

BEACON வெலிங்டன் சந்தி, யாழ்.நகர்.
Day Class
கலை-வணிகவியல்
ஆரம்பம்:-02.01.2015 காலை 7.00 மணி
வழமையான ஆசிரியர் குழாமுடன் ஆரம்பம்.
அனுமதிகளை உறுதி செய்யுங்கள்.
(சி-9662)

ECONOMICS HALL
உயர்தரமாக்குவதே எம் உயர்தரக்கற்கை
A/L 2017 ஆரம்பம் 03.01.2015 காலை 8.00மணி
Day Class ஆரம்பம் 05.01.2015 காலை 8.00மணி
இல 108, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (றெயில்வே நிலைய அருகில்)
கிளை: ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
A/L 2017 கலை, வர்த்தக, கணித, உயிரியல், தொழில்நுட்ப பிரிவுகள்
ஆரம்பம்: 03.01.2015 சனி காலை 9.00 மணி
புதிய அனுமதிகளை இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்.
(சி-9663)

A/L Day Class
கலை வர்த்தகம்
இன்று ஆரம்பமாகின்றது.
Note: வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி ஒழுங்குபடுத்தித்தரப்படும்
(சி-9666)
DCM யாழ்நகர்
BEACON
வெலிங்டன் சந்தி, யாழ்.நகர்
கலைப்பிரிவு
அளவையியல்:-S.S.மனோகரன்
பொருளியல்:-K.பிரதீபன்
தமிழ்:-ஜீவானந்தன்
ஊடக கற்கை:-கோணேஸ்
இந்து நாகரிகம்:-நேசன்
புவியியல்:-ஜின்சியா
அரசியல்:-மனோகரன்
நாடகம்:-சுதன்

BEACON-TECH CITY
வெலிங்டன் சந்தி, யாழ்.நகர்.
வடமாகாணத்தில் க.பொ.த உயர்தர தொழில்நுட்பப் பாடங்களிற்கு தனித்துவமான ஒரே ஒரு நிறுவனம்!!!
2017-ம் ஆண்டிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பித்துள்ளன!
ஆசிரியர்:-T.ராம் (பிரபல பெண்கள் பாடசாலை)
எமது நிறுவனத்தில் நடைபெற்ற தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞான (Science for Tech) பாடப்பரீட்சையில் 50 புள்ளிகளிற்கு மேல் பெற்ற மாணவர் விபரம்!!!
(2015-Batch)

| Name | Marks | School | Name | Marks | School |
|---|---|---|---|---|---|
| S.தர்ஷினி | 85 | J/VGHS | M.சர்மினி | 60 | J/NCC |
| Sri.கிருஷாந் | 72 | J/NCC | T.நிவேதிகா | 60 | J/NCC |
| R.சுதனா | 71 | J/VGHS | R.ரவிபதுஷன் | 60 | J/NCC |
| T.சக்தி | 71 | J/VGHS | M.துவாரகா | 58 | J/VGHS |
| C.அபிநயா | 67 | J/VGHS | N.வரலஷ்மி | 58 | J/VGHS |
| S.நிறோஜினி | 65 | J/VGHS | K.ராமறூபன் | 56 | J/PSC |
| P.தர்சிகா | 62 | J/VGHS | K.கிருஷாந்தன் | 56 | J/PSC |
| C.அனோஜா | 61 | J/VGHS | S.தபோஷினி | 56 | J/VGHS |
| T.மிலுக்ஷனா | 61 | J/VGHS | T.மதுஷா | 55 | J/VGHS |
| R.கஜானா | 61 | J/VGHS | A.அபிநயா | 54 | J/VGHS |
| T.கௌசிகா | 60 | J/VGHS | A.அஜிதா | 52 | J/NCC |
| J.துர்க்கா | 50 | J/VGHS | V.இந்துஜன் | 51 | J/JHC |

ஆசிரியர் குழு:-
Mr.சிறிதரன் (M.Sc) Mr.கஜேந்திரன் (B.Sc special) Mr.றோய் (B.Sc Agri)
பொறியியல் தொழில்நுட்பத்திற்கான (Engineering Technology) பரீட்சைகள் 02.01.2015 அன்று காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகின்றன!!!
தொடர்புகளுக்கு:-0778429817

தற்போது யாழ் நகரில்...

BTEC HND in BIOMEDICAL SCIENCE
Leadind to BSc (Hons) from UK universities
ஆய்வுகூட பரிசோதனைகளை உள்ளடக்கிய முழு நேர பாடநெறி
உயிரியல் துறையில் தொழில் சார் Biomedical Scientist களாக UK இல் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம்
சர்வதேச ரீதியில் அதிக தொழில் வாய்ப்புக்களுக்கு இட்டுச் செல்லும்
பாடநெறி முடிவில் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி
உயிரியல் துறையில் நவீன வசதிகளுடனான கற்றல் சூழல்

மருத்துவ / உயிரியல் / உயிர் இரசாயனவியல் துறையில் ஆராய்ச்சியாளர்களை உருவாக்கும் பாடநெறி
ISO 9001:2008 CERTIFIED
14 Years of Trust & Excellence in Higher Education
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
Colombo : 077 482 9765
Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747
Building Careers - Transforming Lives

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.